JULY 1945

பார்த்திப - ஆடி

30 JUL 1945
MADRAS

4-12



idest Circu



# சீக்கியர்கள்—தேநீர் அருந்தும் நேரம்

சீக்கியர்களிடமுள்ள திடத்திற்கும் ஊக்கத்திற்கும் மூக்கிய காரணம் அவர்கள் உணவில் ஏற்படுத்தியுள்ள கட்டுப்பாடுதான். உணவைக் கட்டுப்படுத்தினாலும் தேநீர் அருந்துவதை அவர்கள் தள்ளிவிடவில்லை.

சீக்கியர்கள் நடைமுறைக்கு ஒத்த பழக்கங்களையே அனுசரிப்பார்கள். எனவே, அவர்களுடைய பழக்கவழக்கங்கள் எல்லாம் அனுபவத்தில் தேர்ந்து எடுக்கப்பட்டவை. கண்ணை மூடிக்கொண்டு செய்ததையே திருப்பத் திரும்பச் செய்யும் வழக்கம் அவர்களிடம் கிடையாது. தேநீர் அருந்தும் பழக்கத்தை அவர்கள் ஏற்படுத்திக்கொண்டார்களானால், அது சுறுசுறுப்பும் வீரமும் கலந்த அவர்கள் வாழ்க்கைக்கு மிகவும் பொருத்தமானது என்பது தெரிகிறது அல்லவா?

இந்தியாவின் வடக்கேயுள்ள அவர்கள் தாய் நாட்டிலோ ஒன்று அசாத்திய மான உஷ்ணமாயிருக்கும்; அல்லது தாங்கமுடியாத குளிராய் இருக்கும். இந்த சீதோஷ்ண நிலையில் இதத்தைக் கொடுப்பது சூடான தேநீர்தான் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து இருக்கிறார்கள். இங்கு, சூடான தேநீர் சாதாரண மாகப் பால் சீனியுடன் கலந்து விநியோகிக்கப்பட்டு பித்தளை லோட்டாக்களில் குடிக்கப்படுகிறது. கோடைக்காலத்தில், குளிர்மையையும், உத்சாகத்தையும் கொடுப்பது தேநீர்; குளிர்காலத்தில், குளிரிலிருந்து அவர்களை பாதுகாப்பதும் தேநீரே.

நீங்கள் காணலாம்; எட்டாக்கையிலுள்ள
ப்ரூக் பாண்ட் தேயிலை சீக்கியர்கள் பரவி
பித்திக்கிறது.

## பாண்ட்

ஒரு மொட்டும்"

Estd. 1904 Tel. KETIOR

1284

தென்னாட்டில் ஆதியில் ஏற்படுத்
தப்பட்டு நற்கியாதியுடன்
சுமார் 41 வருஷமாக
அபரிமிதமாக—
விற்பனையாகி
வரும்

விஜயபுரம்

# K.T.R.

பன்னீர்
சந்தனாதி &
அரைக்கீரை
விதைதைலங்கள்
ஒயிட்ரோஸ் ஹேராயில்
கிருஷ்ணா அகர்பத்தி
ராஜா பற்பொடி
குணத்தில் சிறந்தது எங்கும் கிடைக்கும்.

மதராஸ் ஏஜன்ஸி:

## GIRISON & CO.

PARK TOWN :: MADRAS




# NO.2. ரோடு போடுவதில் மேற்பார்வை

காங்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா, ஸ்தாபிதமான 1927 வருஷம் முதல் ஸிமெண்ட் காங்கிரீட்டைப்பற்றி வேண்டிய அளவு உதவி செய்து வருகிறது. இந்த 17 வருஷங்களில் இந்தியாவில் நூற்றுக்கணக்கான ரோடுகள் போடுவதில் பயிற்சியும், அனுபவமுள்ள இஞ்சினியர், சூப்ரவைசர் இலவச போதனமுறை கற்பித்தும், தகுந்த மேற்பார்வை செலுத்தியிருக்கிறார்கள்.

இந்த ஸ்தாபனத்தின் வேலையாட்கள் தற்காலம் யுத்த சேவையில் முனைந்திருக்கிறார்கள். அவர்கள் கைங்கரியம் யுத்தத்திற்குப் பின் ரோடு நிர்மாண திட்டங்கள் போடுபவர்களுக்கு வசதி அளிக்கும்.

இலவச சேவையின் முழு விவரங்களும், அநேக விதக காங்கிரீட் ரோடு விஷயங்கள் அடங்கிய புஸ்தகங்களின் ஜாபிதாவும், அவர்கள் ஆபீஸ் 199, மவுண்ட் ரோடு, மதராஸில் கிடைக்கும்.

காங்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா

**தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா**
லிமிடெடின்
போதனா முறை ஸ்தாபனம்.

CM 74—Tamil

30 JUL 1945
MADRAS



# பழுதுபார்த்து உபயோகியுங்கள்...

## சிக்கனப்படுத்துவதால் லாபமுண்டு !

உங்களுக்கு ஒவ்வொரு தேவையையும் குறைத்துக் கொள்ளுவதால் கையில் பணம் மிச்சமாகிறது. வாரக் கணக்காகவும் மாதக் கணக்காகவும் இப்படிச் செய்வதால் இந்தச் சிறு சிறு சேமிப்புக்கள் எவ்வளவு பெருந்தொகை யாகிறது !

தேவைப் பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியாலும் ஏழைகளின் தேவைகளை உத்தேசித்தும், இப்போது நீங்கள் சிக்கனத்தைக் கையாளுவது உங்கள் கடமை. இந்த அவசியமான நிலைமையை ஒரு உயர்ந்த சிறப்பாகக் கொண்டு காரியங்களை செய்வதன் மூலம் நீங்கள் உங்கள் நாட்டிற்கும் உங்களுக்கும் பண உதவி செய்து கொண்டவர்களாவீர்கள்.



## பொருட்களை மிதமாகச் செலவிட்டு அவை, தாராளமாகக் கிடைக்கும்படிச் செய்யுங்கள்



கிழிந்த துண்டுகள், படுக்கை விரிப்புக்கள், மேஜை விரிப்புக்கள் ஆகியவற்றையும் இழை ஒட்டி வெகு நாட்கள் வரை உழைக்கச் செய்யுங்கள்.



பழைய ஷர்ட், ஜிஜார், பைஜாமா, வேஷ்டி எல்லாவற்றிற்கும் ஒட்டுப்போடுங்கள். புதியவற்றை வாங்காதீர்கள்.



தாயார் தகப்பனாரின் பழைய துணிகளிலிருந்து குழந்தைகளுக்குத் துணிகளைத் தைத்துக் கொடுங்கள்.

அவைகள் கெடுதலாகத் தெரியமாட்டா.



பழைய ஜோடுகளை ஒட்டுப் போட்டுத் தைக்கும்படி அனுப்புங்கள். அவைகளை எறியாதீர்கள்.



புதுக் குடைகள் வாங்காதீர்கள். உங்கள் பழைய குடையைப் பழுதுபார்த்துக் கொள்ளுங்கள்.



பழையட் 'டிரங்கு,' 'சூட்கேஸ்,' 'ஹோல்டால்' எல்லாவற்றையும் பழுதுபார்த்து வைத்துக் கொள்ளுங்கள். புதியவற்றின் விலை அதிகம்.

## உங்களுக்கு இன்றியமையாதவை தவிர பிறவற்றை வாங்காதீர்கள்

AAA 3

இந்திய சர்க்கார் இ. & பி. இலாகா வெளியீடு,


சிறந்த ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A.ராஜசெட்டியார் & பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜா"



## 2000 வருஷங்களுக்கு முன்

முன்னோர்கள் சந்தனத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின் "ரோல்ஸ் ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தனத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தனத்தைலம் இன்றியமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனாண்ட காலத்தின் உண்மை என்றும் உண்மையே.

# மைசூர்
# சந்தண சோப்




**சந்தணம் குறிப்பது குற்றமற்ற குணமே**

★ ★ மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு ★ ★




**Agent:— T. T. KRISHNAMACHARI,**
12A Lingha Chetty Street, :: G. T. MADRAS

# கதைக் கோவை

**தொகுதி - III**

60 எழுத்தாளரின்
60 சிறு கதைகள்

கிளேஸ் பதிப்பு ரூ. 7—8—0
ஆண்டிக் பதிப்பு ரூ. 9—0—0

இத் தொகுதியைப்பற்றிய
பொன்மொழிகளிற் சில

●

**கலைமகள்** *ஒவ்வொரு கதையிலும் ஒரு புதிய தமிழ் நடை. ஒரு புதுப்பாணி. *கருத்து, கதைக் கட்டிடம் ஆகிய அம்சங்களிலும் இத்தொகுதியிலுள்ள கதைகள் பல, உதாரணம் காட்டும் பெருமையுடன் அமைந்திருக்கின்றன. *ஒவ்வொரு கதையிலுமுள்ள ஒரு தனி அழகை எடுத்துக்காட்டி விமரிசனம் எழுதுவது சிரமம். *இத் தொகுதியில் இரண்டொரு கதைகளைத் தவிர மற்றைய யாவும் முதல்தரமான கதைகள். இம்மாதிரி 3 தொகுதிகளைத் தயாரித்து வெளியிட்ட அல்லயன்ஸ் கம்பெனியார் நிகழ்கால வளர்ச்சிக்குச் சரித்திரத்தில் ஒரு நிச்சயமான இடம் தேடிக்கொண்டுவிட்டார்கள்.

* * *

**ஆனந்த விகடன்** *ஒவ்வொரு புஸ்தக சாலையிலும் அவசியம் இருக்கவேண்டிய உயர்ந்த புஸ்தகம்.

* * *

**Free India** *An omnibus volume. *One of the highlights of this Volume is a gripping and human story from the pen of the Rt. Hon'ble Sastri. *The printing and get-up is quite in keeping with the high standard of Alliance publications.

**கதைக் கோவை**

தொகுதி IV

[ ரூ. 10—8—0 ]

**அல்லயன்ஸ் கம்பெனி**

மயிலாப்பூர் — சென்னை


# பொருளடக்கம்


பார்த்திப மலர் 4 } { ஆடி இதழ் 12



| | | |
|---|---|---|
| ஆச்சரியமில்லை | ... | 9 |
| கதம்பம் | ... | 11 |
| அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் — ராமய்யா | | 16 |
| பற்களின் பராமரிப்பு — தி. சே. சௌ. ராஜன் | ... | 20 |
| இருளுக்குப்பின் — கே. சுந்தரம்மாள் | ... | 25 |
| ரேஷன் டின்னர் — டாக்டர் வே. ராகவன் | ... | 33 |
| பசுவிலாசம் சர்க்கஸ் — யோகி சுத்தானந்த பாரதியார் | ... | 38 |
| கண்ணாடி — ஆர். கே. விசுவநாதன் | ... | 45 |
| புத்தக விமர்சனம் | ... | 48 |
| என்ன அதிர்ஷ்டம்! — சாரி | ... | 49 |
| சங்க மித்ரை — வேங்கடலட்சுமி | ... | 59 |
| ஒரு மூட்டை உருளைக்கிழங்கு — ஜய்லன் | | 67 |



குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.



## ஒரு விண்ணப்பம்

அநேக இடங்களிலிருந்து கச்சேரிசெய்யச் சிபார்சுக் கடிதங்களுடன் அழைப்புக்கள் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. அவைகளின் எண்ணிக்கை சமாளிக்கமுடியாமற்போய்விட்டது. எந்த ரேட் கேட்டாலும் அவர்கள் கொடுக்கத் தயார் என்பதையும் இங்கே குறிப்பிடவேண்டும். ஆனால் மனித சரீரமாகையால் எல்லோருடைய வேண்டுகோளுக்கும் இணங்குவதென்பது நடவாதகாரியம். நேயர்கள் இதை வித்தியாசமாக எண்ணாமல் மன்னித்தருள வேண்டுகிறேன்.

**கர்னாடக சங்கீத வித்வான்**

**கும்பகோணம் இசை ஒளி**

# A. D. சுல்தான்

சமீபத்தில் நடக்கவிருக்கும் கச்சேரிகள்:—

18—7—45 ராயவேலூர்
21—7—45 சென்னை
25—7—45 பொள்ளாச்சி
29—7—45 இராமேஸ்வரம்
31—7—45 அகில இந்திய ரேடியோ [திருச்சி]
5—8—45 கோயமுத்தூர்





# வாழ்க்கையின் வெற்றி

ஸ்திரீகளுக்கு
ஏற்படும் சகலவித
கர்ப்பாசய நோய்களை
நீக்கி வாழ்க்கையில் வெற்றியை
அளிக்கக்கூடிய சிறந்த டானிக்




# அருணா

ஆயுர்வேதாஸ்ரமம்
மதராஸ்

# காவேரி

| | | |
|---|---|---|
| பார்த்திப<br>மலர் 4 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | ஆடி<br>இதழ் 12 |


## ஆச்சரியமில்லை

"பிரிட்டிஷார் அதிகாரத்தை இந்தியர்கள் வசம் ஒப்புவிக்க எப்பொழுதும் தயார். இந்தியக் கட்சிகளுக்குள் ஒற்றுமையில்லை; அதனால்தான் தடை" என்று பிரசாரம் செய்துவருகிறார்கள். இதனை மெய்ப்பிக்க இரண்டு திட்டங்கள் வகுத்தார்கள். ஒன்று கிரிப்ஸ் திட்டம். அது முறிந்தது பழங்கதை. மற்றொன்று வேவல் திட்டம். அதுவும் முறிந்தது நமக்கு ஆச்சரியமளிக்கவில்லை.

ஏன்? இரண்டும் பிரசாரத்திற்கெனவே கொண்டுவரப்பட்ட திட்டங்கள். அமுலுக்கு வரவேண்டும், அல்லது வரும் என்று நம்பப்பட்டு வகுக்கப்பட்டவையல்ல. கிரிப்ஸ் திட்டம் ஜப்பானிய யுத்த நெருக்கடி இந்தியாவுக்கு அதிகரித்திருக்கும்பொழுது வகுக்கப்பட்டது. மற்றொன்று இந்தியாவில் சமரச முயற்சி ஒன்று வேண்டுமென்ற கிளர்ச்சி அதிகமாயிருக்கும் காலம் சிருஷ்டிக்கப்பட்டது. இரண்டு தருணத்திலும் பிரிட்டிஷார் தங்கள் ராஜதந்திரத்தைச் செவ்வனே நிரூபித்துவிட்டார்கள்.

கிரிப்ஸ் திட்டம் அளிப்பதற்கென்றே வகுக்கப்பட்டது என்ற எண்ணத்துடன் காங்கிரஸ் பேரம் பேசிற்று. கிரிப்ஸ் கடைசியில் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு விமானமேறிச் சென்றார். இப்பொழுதும் அதே கதைதான். ஆனால் காங்கிரஸ்காரர்கள் பேரம் பேசவில்லை. தங்களால் மஹாநாடு முறிந்தது என்ற பெயரை ஏற்க அவர்கள் விரும்பவில்லை. கிரிப்ஸ் திட்டத்தைக்காட்டிலும் இப்பொழுது அளிப்பது குறைவாயிருப்பினும் அதை அங்கீகரிக்கத் தயார் என்றார்கள். ஆனால் ஜின்னா சாகேப் நிர்வாக சபை அங்கத்தினர்களை முஸ்லிம் லீக்தான் பொறுக்கும் என்று வாதாடினார். இதற்கு மற்றக் கட்சிகள் ஒப்பவில்லை. இறுதியில் எல்லாக் கட்சிகளும் சில நபர்களைக் குறித்து அனுப்புவது என்றும் அதிலிருந்து வைசிராய் அவர்கள் பொறுக்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மஹாநாடு இதற்காக ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் ஜின்னாவும் அவர் லீகும் வைசிராயின் ஏற்பாட்டை ஒப்பவில்லை. மற்றக் கட்சிகளெல்லாம் லிஸ்ட் தயார் செய்து வைசிராய்க்கு அனுப்பிவைத்தன. வைசிராய் இன்று மகாநாட்டைக் கூட்டி, அது முறிந்துவிட்டது, அதற்குப் பொறுப்பாளி தாமே என்றும், ஒருவருக்கொருவர் குறை கூறிக்கொண்டால் நாட்டின் நிலை சீர்கேடடைந்துவிடுமென்றும் கூறி, மஹாநாட்டைக் கலைத்தார். இனி அரசியல் நெருக்கடியைத்தீர்க்க அடிக்கடி இத்தகைய முயற்சிகள் செய்யமுடியாதென்பதையும் குறிப்பிட்டார்.

இதிலிருந்து என்ன ஏற்படுகிறது?

இந்தியக் கட்சிகளுள் ஏதாயினும் சரி பிரிட்டிஷார் வகுக்கும் திட்டத்தை ஒன்று ஒப்புக்கொள்ள மறுத்தால், மற்ற எல்லாப் பெரும்பான்மையான கட்சிகளும் ஏகோபித்து ஒப்புக்கொண்டாலும் சரி அது அமுலுக்கு வரமுடியாது.

முஸ்லிம் லீக் கட்சியின் கோரிக்கை என்ன? நிர்வாக சபையில் உள்ள முஸ்லிம் அங்கத்தினர்களின் எண்ணிக்கை மற்ற எல்லா மதத்தினர்களின் எண்ணிக்கையை ஒன்றுசேர்த்தால் அதற்குச் சமமாக இருக்கவேண்டும். முஸ்லிம் அங்கத்தினர்களை நியமனம் செய்ய லீக்கிற்குத் தான் உரிமையுண்டு, மற்ற எந்தக் கட்சியினருக்கும் கிடையாது. இதற்கு அர்த்தம் என்ன? முஸ்லிம் லீக் இத்தேசத்தை ஆள வைசிராயும் மற்றக் கட்சிகளும் ஒப்பவேண்டும்.

சேலத்தில்
கல்யாணப் பட்டு ஜவுளி
ரகங்கள் வாங்க சிறந்த இடம்
கோபால
பத்ம விலாஸ்
385, கடைவீதி, சேலம்.

*Proprietors :*
S. N. PATHMANABA CHETTIAR
P. R. JAYAGOPALA CHETTIAR

இது நியாயமற்ற கோரிக்கை என்பதை பிரிட்டிஷ் கவர்மெண்டார் அங்கீகரிக்க மாட்டார்கள். ஏன்? அவர்கள் வேண்டுவதெல்லாம் பிரசார பலம். ஜின்னா உள்ள வரை அவர்களுக்குக் கும்மாளம்தான். இல்லையேல் இன்று அதிகாரத்தை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்காதா?

உண்மையில் ஜின்னாவின் எண்ணம் தான் என்ன? தாம் முஸ்லீம் மக்களுக்கு அதிகாரத்தை வாங்கிக் கொடுக்க ஆசைப்படுகிறாரா என்பதே நமக்குச் சந்தேகமாக இருக்கிறது. வேண்டுமென்றோ வேண்டாமலோ அவர் பிரிட்டிஷ் கவர்மெண்டின் கையாளாக நடித்து வருகிறார் என்றுதான் எண்ணவேண்டி வருகிறது.

ஜின்னாவின் பிடிவாதத்தினால் பிரிட்டிஷாருக்குத்தான் நன்மை. அவர்கள் ஆதிக்யம் இன்னும் நீடித்துக்கொண்டே வரப்போகிறது. தேசிய அரசாங்கப் பேச்சு இனி ஜப்பானிய யுத்தம் முடியும் வரை எடுக்கப்படாது; யதேச்சாதிகாரம் தான்.

வேவல் நாடகம் பிரிட்டிஷ் ராஜதந்திரத்தில் ஒரு காட்சி என்று நாம் கருதுகிறோம். கிரிப்ஸ் தூது மற்றொன்று. ஜப்பானிய யுத்தத்திற்குப் பிறகு இன்னும் ஒரு காட்சி நடைபெறும். மக்கள் விழித்தெழுந்தாலொழிய உண்மையில் ஒன்றும் கைகூடாது.

இவ்விதழின் அட்டையை அழகுறச் செய்வது ஐதராபாத் H. E. H. நைஸாம் அவர்களின் நிர்வாக ஸபை அங்கத்தினராய் நியமனம் பெற்றிருக்கும் திவான்பஹதூர் S. ஆராவமுத ஐயங்கார் அவர்களின் உருவப் படம்.

# கதம்பம்

## சர்க்கஸ் வித்தை!

ஸ்பெயினின் சர்வாதிகாரி ஜெனரல் ப்ரான்கோவை நிபுணத்துவம் வாய்ந்த ஒரு சர்க்கஸ் வித்தைக்காரரென்று சொல்லலாம். காலத்துக்கு ஏற்றவாறு வெகு ஜாக்கிரதையாகக் காலத்தைத் தள்ளிவருகிறார். ஹிட்லர்—முஸ்லோனி இவர்களுக்குச் சுக்ர தசையடிக்கும்போது அவர்களை அண்டிப் பெருமையடைந்தார். ஹிட்லர்-முஸ்லோனி ஆதரவு பெற்றதாலேயே பிரான்கோவும் ஒரு குட்டிச் சர்வாதிகாரியானார். பிரிட்டிஷ் அரசாங்கமும் பிரான்கோவின் நல்லெண்ணத்தைப் பெறுவதில் முயற்சி செய்தது. ஸ்பெயினிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் ஹோர் துரையை, 'கண்ணில் விரலைவிட்டு' ஆட்டிவைத்தார் பிரான்கோ. தம் சர்வாதிகாரச் செய்கைகளுக்கெல்லாம் பிரிட்டிஷ் சிங்கத்தைப் பெருமாள்மாடுபோல் தலையை அசைக்கச் செய்தார். ஹிட்லருடன் சேர்ந்து கொண்டு ருஷ்யாவைத் திட்டினார்.

ஜெர்மனி தோற்றுப்போவது நிச்சயமானவுடன் பாடத்தைத் திருப்பிப்படிக்க ஆரம்பித்தார். ஜெர்மன் ஆகாய விமானங்கள் ஸ்பெயின் எல்லையைத் தாண்டக்கூடாதென்று உத்தரவிட்டார். பிரிட்டனுடன் நல்லவார்த்தைகள் உரையாடத் தலைப்பட்டார். டான்ஜியர் என்ற பிரதேச பிரச்சனை விஷயமாகப் பிரிட்டனுக்குள்ள மனத்தாங்கலை அகற்றவும் சித்தம், சித்தமெனக் குதித்து நடனமாடினார். ருஷ்யாவுக்கு விரோதமாக ஒரு வார்த்தை பேசவில்லை. காலமாறுதலுக்கு ஏற்றவாறு வெகு சாமர்த்தியமாக நடந்துவருகிறார். அதுமட்டுமா? தமக்குச் சம்பந்தமில்லாத ஜப்பானைப் பார்த்து, 'நீ செய்வதெல்லாம் அக்கிரமம்' என்று வசைப்புராணம் வேறு பாடத் தொடங்கியுள்ளார். நேசதேசங்களின் வெற்றியைப்பற்றித் துதிபாடுகிறார். சர்வாதிகார அரசாங்க முறையைக் கண்டிக்கத் தொடங்கிவிட்டார்! ஜனநாயக அரசாங்க முறைக்குப் புகழ்பாடுகிறார். 'ஸ்பெயினிலும் ஜனநாயக அரசியல் முறையே நடந்து வருகிறது' என்றுகூடச் சொல்லுகிறார்.

ஆனால் ருஷ்யா மட்டும் வேடதாரி பிரான்கோவை நம்பவில்லை. 'பர்வடா' என்ற ருஷ்ய பத்திரிகை 'ஸ்பெயினில் பிரான்கோ ஆட்சி ஒழியவேண்டும்' என்று கர்ஜனை செய்கிறது.

ஜெனரல் பிரான்கோ ஒரு பெரிய ராஜதந்திர நிபுணர் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். அவருக்கு எதிராக உள்ள ஜனநாயகக் கக்ஷி (Republican party) பலமற்றது. வேறு எதிர்ப்பு இல்லாமல் திறம்பட ரகசிய வேவுகாரர்கள் கண்காணித்து வருகிறார்கள். பிரான்ஸும் செயலற்றுக் கிடக்கின்றது.

ருஷ்யா உருமிக்கொண்டிருக்கலாமே தவிர, தனியாக யாதொரு நடவடிக்கையும் நடத்த முடியவில்லை. பிரிட்டனும், அமெரிக்காவும் ருஷ்யாவைப் பற்றிய வரை ஸ்பெயினின் கக்ஷிதான்! தவிர, பிரிட்டன் பிரான்கோவுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. பிரான்கோ யுத்தத்தில் நடுநிலைமை வகித்ததே பிரிட்டனின் வெற்றிக்கு ஓரளவு காரணம். மத்தியதரைக் கடலில் பிரிட்டன் ஆதிக்கம் செலுத்தப் பிரான்கோவின் நடுநிலைமைக் கொள்கை வெகுவாக உதவியது.

வருங்காலத்தில் ஸ்பெயினின் ஜாதகம் யோகம் நிரம்பியதாக இருக்குமென விஷயமறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். இப்பொழுது ஐரோப்பா இருக்கும்சீர்கேடான நிலைமையில் ஸ்பெயின் நல்ல பலமுள்ளதாக இருக்கவேண்டியது அவசியமாம். தவிர, ஸ்பெயின் நல்ல 'மார்க்கெட்டாம்'. பிரான்கோவின் கொள்கைகளுக்கு ருஷ்யாவின் எதிர்ப்பிருந்தாலும், பிரிட்டன், அமெரிக்கா இவைகளின் ஆசியும் ஆதரவும் இருப்பதால் ஜெனரல் பிரான்கோ பயமின்றி ஜாம்-ஜாமென்று தம் ரதத்தை ஓட்டலாம்!

## சமாதி

> ✝
>
> லண்டனிலுள்ள போலந்து
> அரசாங்கம் அடக்கம்.
>
> ரைட்ஆனரபிள் வின்ஸ்டன்
> சர்ச்சில் இச் சமாதியைக்
> கட்டி முடித்தார்.
>
> லண்டன் 5·7·45

ஐரோப்பாவில் ருஷ்யா அபரிமிதமான வெற்றியையடைந்ததும் புதிய போலந்து அரசாங்கமொன்றை ஸ்தாபித்து விட்டது. அது முதல் லண்டனிலுள்ள போலந்து அரசாங்கத்துக்குக் கடுமையான நோய் கண்டுவிட்டது. பிரபல ராஜதந்திர டாக்ட

ரான சர்ச்சில்துரை நோயாளியைப் பிழைக்கவைக்க அரும்பாடுபட்டார். அவரது 'கம்பவுண்டரான' ட்ருமன் துரையும் வெகுவாக வஞ்சனையின்றி உழைத்தார். ஆனாலும் லண்டன் போலந்து அரசாங்க நோயாளி நாளுக்கு நாள் மெலிந்துகொண்டே வந்தார். இந்நிலையில் அகில உலகம் புகழும் சர்ஜன் ஜெனரல் ஸ்டாலின் துரை அருமையான யோசனையொன்றைச் சொன்னார். லண்டன் நோயாளிக்கு எவ்வித சிகிச்சையும் பயனளிக்காதென்றும், அது துடிதுடித்துப் பிராணனை விடுவதைவிட ஒரேயடியாக டாக்டரே கொன்றுவிடுவது ஜீவகாருண்யமாகுமென்றும், அப்படிச் செய்வதால் லண்டன் டாக்டர் புகழும், லாபமுமடையலாமென்றும் சொன்னார்.

பெரிய சர்ஜன் ஜெனரல் சொல்லிவிட்டால் சுண்டைக்காய் டாக்டர் சர்ச்சிலால் வேறு என்ன செய்யமுடியும். ஆனால் சர்ச்சில் சற்று மனம் கலங்கி நின்றார்.

சர்ஜன் ஜெனரலுக்குக் கோபம் பொங்கிவிட்டது சொன்னபடி டாக்டர் செய்யாததினால்! "உடனே லண்டனிலுள்ள அந்நோயாளியைக் கொன்று, புதைத்து, அதற்குச் சமாதியும் உன் கையாலேயே கட்டிமுடிக்காவிடில் அனர்த்தம் விளையும்!" இவ்வாறாக டாக்டருக்கு எச்சரிக்கை வந்துவிட்டது.

சர்ஜன் ஜெனரலின் தயவையும், நல்லெண்ணத்தையும் முக்யமாகக் கருதவேண்வேண்டியதாயிருப்பதால் டாக்டர் சர்ச்சில் மனதைத் திடப்படுத்திக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. நோயாளி இடம் சென்று, "அப்பா! உன் முடிவு நெருங்கிவிட்டது. விரைவில் நீயே பிராணத்தியாகம் செய்துகொள்வதுமேல். இல்லாவிடில்........." இந்த வார்த்தைகள் நோயாளிக்குப் பெரிய அதிர்ச்சியை உண்டாக்கி அவரைக் கீழே விழச்செய்தன. நோயாளிக்கு அடிபடாமலிருக்க டாக்டர் குரல்வளையில் கையை அழுத்தி விழாமல் பிடித்துக்கொண்டார். அக்கணமே லண்டன் போலந்து அரசாங்க நோயாளி ஆண்டவனின் திருவடியிற் கலந்துவிட்டார். நோயாளி இறந்துவிட்டதாக டாக்டர் சர்டிபிகேட் எழுதி சர்ஜன் ஜெனரலுக்கு உடனே அனுப்பிவிட்டார். பிணத்தை ஆழமாகக் குழிதோண்டிப் புதைத்துச் சமீபத்தில் சமாதியும் கட்டி முடித்தார் டாக்டர் சர்ச்சில். ஓம் சாந்தி!


# கறுப்பு மேனியை வெளுக்கச்செய்யுங்கள்

வாலட்டா பியூடி கிரீம்: கறுப்பு நிறத்தை நிரந்தரமாக வெளுக்கச்செய்கிறது. பருக்களையும் சுருக்கங்களையும் அகற்றி, தோலை மிருதுவாக்குகிறது. இந்த ஆக்ஸிஜன் கிரீமை இன்றே உபயோகிக்க ஆரம்பித்து உங்கள் இளமை மேனியை வரவழைத்துக் கொள்ளுங்கள். ஜாடி ஒன்று விலை ரூ. 2/

## நீண்ட அழகிய கேசத்தை அடைய

டைபாயிட் முதலிய ஜ்வரங்கள், மனக்கிலேசம் முதலிய தொல்லைகளினால் அழகிய கூந்தல் உதிர்ந்துவிடுவது சகஜம். பால்டைன் கூந்தல் தைலம் மயிர்க்காம்புகளை உயிர்ப்பித்து வளரச்செய்கிறது.

பெரிய பாட்டில் ரூ. 3/ சிறியது ரூ. 2/

இவைகளுக்கு ஏஜண்டுகள்: அப்பா & கோ., கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேடு, மதராஸ்.


## ஒரு ருசிகர விஷயம்!

நாம் அதிக நாகரிகம் அடைந்துவிட்டோமென்பதற்கு அத்தாட்சி என்ன? மேல்நாட்டுப்பழக்க வழக்க முறைகளை இன்னும் யுக்தியுடன் அல்லது குயுக்தியுடன் கையாளுவதுதான்!

அவர்கள் தினம் மூன்றுமுறை க்ஷவரம் செய்து கொள்ளுகிறார்களா? நாம் நாலு தடவைகள். அவர்கள் பவுடர்களைப் பூசிக் கொள்ளுகிறார்களா? நாமும் 'அப்பி'க் கொள்ளுகிறோம். அத்தேச நாரி மணிகள் அரை நிர்வாணக் கோலத்தில் உடையணிகிறார்களா? நம் பெண்மணிகள் பூரண நிர்வாண கோலத்துக்குச் சமமாக உள்ள துல்லிய மெல்லிய ஆடையலங்காரத்துடன் காட்சியளித்து மனதைக் கவர்கிறார்கள். அவர்கள் கர்ப்பத்தடை முறைகளை உபயோகிக்கின்றார்களா? நாமும் ரெடி!

கர்ப்பத்தடை என்றதும் பத்திரிகைச் செய்தியொன்று நம்மைப் பரபரக்கச் செய்கின்றது. ஹிந்து சட்ட மசோதாவில் அதிக விவாதங்களுக்குட்பட்டது விவாக ரத்து விஷயம். இன்னவின்ன காரணங்களினால் விவாக ரத்துப் பெறலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் முக்கிய காரணம் சேர்க்கப்படவில்லை! கர்ப்பத்தடை முறை

களை ஓர் ஆண் மகன் உபயோகித்தால்?! பின்கண்ட செய்தியைச் சிந்தித்துப் பதில் கூறுங்கள்.

"புருஷன் கர்ப்பத்தடைச் சாதனங்களை உபயோகிப்பதைக் காரணமாகக்கொண்டு ஒரு மனைவி விவாக ரத்துக் கோரலாமா என்ற பிரச்னை இங்கிலாந்து கோர்ட்டுகளில் அடிக்கடி எழுந்து விவாக ரத்துக் கோர்ட்டுகளில் மிகுந்த பரபரப்பை உண்டாக்கியுள்ளது"—ராய்ட்டர்.

இந்த விஷயம் வெளியான அதே தின பத்திரிகையில் மற்றொரு சம்பந்தப்பட்ட விஷயமும் காணப்படுகின்றது. சென்னை மாகாண யுத்தப் பிற்காலத் திட்ட கமிட்டிக் கூட்டம் டிக்ஸன் துரை தலைமையில் கூடி, பல விஷயங்களைப்பற்றி, 'கனவு'திட்டங்கள் வகுத்தது. நடக்கக்கூடிய திட்டமொன்றும் தீர்மானிக்கப்பட்டது. அது என்ன தெரியுமா? மாகாணத்தில் பல இடங்களில் கர்ப்பத்தடை முறைகளைப்பற்றி ஆலோசனை, வசதி இவைகள் அளிக்கும் ஆஸ்பத்திரிகள் அமைக்கப்படுமாம். இந்த யுத்தப் பிற்காலத் திட்டம் வருவதற்குமுன் விவாக ரத்தும் வந்துவிடலாம். ஆகவே இந்தியாவில் சதிபதிகள் பிரிவினை அதிகம் நடைபெற ஏதுவாகிறது. யுத்தப் பிற்காலத் திட்ட கமிட்டியும் ஹிந்துசட்ட மசோதா கமிட்டியும் இப்பொழுதே இது விஷயத்தைச் சிந்திக்கக் கோருகிறோம்.

## சிக்கலான சங்கதிகள்

ருஷ்யா ஜப்பானுடன் போர் தொடுக்குமா? எப்பொழுது?

ருஷ்யாவுக்கு ஆசியா கண்டத்திலும் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற ஆசையுண்டு என்பதை மறுக்க முடியாது. அப்படி ருஷ்யா ஆதிக்கம்பெறுவதைப் பிரிட்டனும் அமெரிக்காவும் விரும்பவில்லை என்பதையும் கவனிக்கவேண்டும். ஆனால் நாம் விரும்பினாலும், வெறுத்தாலும் சில காரியங்கள் நடந்தே தீருகின்றன. உலகத்திலேயே பெரிய வல்லரசாக விளங்கும் ருஷ்யாவுக்கு ஆசியாவில் ஆதிக்கமில்லாவிட்டால் நன்றாயிருக்குமா?.

சமயம் பார்த்து ருஷ்யா ஜப்பானியப் போரில் ஈடுபடும்என்பதை ஒருவாறு திட்டமாய்க் கூறலாம். அது எந்தச்சமயம்? பிரிட்டனும் அமெரிக்காவும் கப்பல் சண்டைகள் போட்டுத்தாங்கள் இழந்த நாடுகளை மட்டும் கைப்பற்றுவதில் கவனம் செலுத்தும்போது ருஷ்யா போரில் குதிக்காது. பிரிட்டனும் அமெரிக்காவும் 'சதிரு'க்கு வரவேண்டும். சீனதேசத்தில் முழுமனதுடன் ஜப்பானைப் படையெடுக்க இறங்கவேண்டும். ஜப்பானின் முடிவு நெருங்கும் சமயம் ருஷ்யா அதிவேகமாகத் தன் கைவரிசைகளைக் காட்டும். ஐரோப்பாவில் நடந்த நாடக முறையே அனுஷ்டிக்கப்படும். ருஷ்யா ஐரோப்பாவில் பரதவிக்கும்போது பிரிட்டனும் அமெரிக்காவும் இரண்டாவது போர்முனையை எவ்வளவு விரைவில் ஆரம்பித்தார்களோ அந்த வேகத்திலேதான் ருஷ்யா செல்லும்!

ருஷ்யா நிச்சயமாய் ஆசியாக்கண்டத்தில் அதிலும் சீனாவில் அதிக ஆதிக்கம்பெறப் போகிறது. இதைப்பற்றிப் பிரிட்டனிலும் பெருங்கலக்கம் ஏற்பட்டுள்ளது. New States man and Nation என்றபிரபல சீமைப் பத்திரிகை கூறுவதைக் கவனியுங்கள்: ஒருவாறு போட்டியைப்பற்றிப்புரிந்து கொள்ளலாம். "சீனா நல்ல மார்க்கட். அமெரிக்கப்பெரிய முதலாளிகள் தெற்குச்சீனபிரதேசம் ருஷ்யாவின் தயவைநாடி நிற்கின்றது என்பதை மறந்தும், புறக்கணித்தும் சுங்கிங் சர்க்காரை ஆதரிப்பார்கள். இப்படி நடப்பதால் ஐரோப்பாவில் உள்ள நிலைமை ஆசியாவிலும் நடந்துவிடும்"! அதாவது நேச தேசங்கள் ஐரோப்பாவில் வெற்றி பெற்றதாகக் கொண்டாடப்பட்டாலும் ருஷ்யாவின் கிருபா கடாக்ஷத்துக்குத் தவம் கிடக்கவேண்டியுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

இனி, சீன ருஷ்ய உறவு முறையைச்சற்றுக் கவனிப்போம். சீனாவில் மக்களிடையே ஒற்றுமையில்லை என்று சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம் சாங்கே ஷெயிக் தலைமை வகித்து நடத்திய சுங்கிங் அரசாங்கத்துக்குத் தென் சீனாவில் உள்ள பொது உடைமைச் சர்க்காரின் ஆதரவு கிடையாது. தென் சீனா ருஷ்யாவைக்குருவாகக்கொண்டு நடவடிக்கைகள் நடத்துகிறது. வரவர எல்லாப் பாகங்களிலும் பொது உடைமைக்காரர்களின் செல்வாக்கு சீனாவில் ஓங்கி வருகிறது. அதனாலேயே சாங்கே ஷெயிக் பதவியைத்துறக்க நேரிட்டது. இப்பொழுது சீனத் தலைவர் டி. வி. சூங் (T. V. Soong). இந்த சூங் இப்பொழுது ருஷ்யாவுக்குப் பறந்துசென்றுள்ளார், ருஷ்யாவின் உதவியை அதிகம் பெற்று ஜப்பானை விரட்டியடிக்கும் நோக்கங்கொண்டு. சீனாவுக்கும் ருஷ்யாவுக்கும் உள்ள பல சிக்கலான மனத் தாங்கல் தீரவேண்டும்.

வெளிமங்கோலியா என்பது சீனாவையொட்டியுள்ளது. ருஷ்யாவே அங்கு ஆதிக்கம். ஆனால் ஏட்டுக் கணக்கில் சீனா

வின் பேரால் உள்ளது. சீனா தன் பாத்யத்தை அங்கே துறக்கவேண்டும்.

சீனாவிலுள்ள ஸிங்கியாங் (Sinkiang) என்ற பிரதேசம் ருஷ்யாவுக்குப் பாதுகாப்பையொட்டியும், வியாபார நலத்துக்காகவும் அத்யாவசிமாய் வேண்டியுள்ளது.

சீனா இவ்விஷயங்களில் விட்டுக்கொடுக்கும் கொள்கையை அனுசரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரிட்டிஷ் ராஜதந்திர முட்டுக்கட்டைகள் பலமாக வேலை செய்யலாம். ஆகவே ருஷ்ய ஜப்பானியப்போர் ஆரம்பமுதல், முடிவுக்குப் பின்னும் பல சிக்கலான பிரச்னைகளைக் கிளப்பப்போகின்றது என்பதற்கு ஜோஸ்யம் பார்க்கவேண்டிய அவசியமில்லை!

## "குற்றமற்ற குற்றவாளிகள்"

அர்த்தமற்ற தலைப்பாகத் தோன்றுகிறதா? அவசரப் படேல்! காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் விசாரணையின்றித் தள்ளப்பட்டார்களே, அவர்கள் செய்த குற்றமென்ன? தேச விடுதலையில் அக்கரைகொண்டு ஆர்வம் காட்டினார்கள். மற்றொரு புதிய ரக குற்றமற்ற குற்றவாளிகள் யார் தெரியுமா? அவர்கள்தான் யுத்தக் குற்றவாளிகள் (War Criminals.)

யுத்தக் குற்றவாளிகள் யார்? அகராதியில் பொருள் காணமுடியாது. நேசதேசத்தலைவர்கள் உளறுவதிலிருந்தும், பத்திரிகைகள் ஊளையிடுவதிலிருந்தும் ஒருவாறு நாம் ஊகித்தறியலாம். பொதுவாக எதிரிகள் எல்லோரும் யுத்தக் குற்றவாளிகள். எதிரிகள் செய்வதெல்லாம் அயோக்யத்தனம், அக்கிரமம். அதுவே யுத்த நீதி. அதே அயோக்யத்தனத்தை, அக்கிரமத்தை நாம் நம்முடைய எதிரியைவிட வெற்றிகரமாகச் செய்துமுடித்தால் அது யுத்தக் குற்றமாகாது; புனித யுத்த சேவை!

நேசதேசங்களைப் பற்றியவரை ஹிட்லர், கொயரிங், கொய்பல்ஸ், ஹாஹா, பெடெயின் இவர்கள் மகா மகா யுத்தக் குற்றவாளிகள்.

ஹிட்லர் செய்த யுத்தக் குற்றமென்ன? நாடாசைகொண்டு உலக சமாதானத்துக்குப் பங்கம் விளைவித்த பாதகன். நாசூக்கான ராஜதந்திர வழிகளைப் பின்பற்றி நாடாசையைப் பூர்த்தி செய்துகொள்ளத் தெரியாத முரட்டு மூடாத்மா! சர்வாதிகாரி.

கொய்பல்ஸ்? பிரசாரமென்றால் பொய்யைத் தவிர உண்மை பேசக்கூடாதென்று அறியாத முட்டாள்!

கொயரிங்? முக்கிய போர்க் கருவியாகிய ஆகாய விமானங்கள் வீரர்களுக்கு உற்சாகமளிக்கப் புஷ்பமாரி பெய்ய உதவுவன என்ற உண்மையை உணராமல் அவற்றை வெடி குண்டுகளை வீச உபயோகித்தான்!

கிழவர் பெடெயின் செய்த குற்றமென்ன? எதிரி நாட்டில் புகுந்தவுடன் மற்றவர்களைப் போல் நாலுகால் பாய்ச்சலில் ஓடி ஒளியாமல் மக்களைக் காப்பாற்றப் பதவி வகித்ததுதான்!

ஆகவே இப்படிப்பட்ட யுத்தக் குற்றவாளிகளை, "குற்றமற்ற குற்றவாளிகள்" என்று பர்னாட்ஷா போன்ற பித்தர்கள் கூறுவதில் சற்றே உண்மை இருப்பதாகத் தோன்றவில்லையா?!

## மீன் வாத்தியார் வருகிறார்!

வரப்போகிறார்! வருகிறார்! வந்துகொண்டிருக்கிறார்! யார்? சீமையிலிருந்து மீன் வாத்தியார் ஒருவர்! மீன்களைப் பிடிக்கும்

**நரையை ஒழியுங்கள்!**



நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் விவலைன் ஹேர் ஆயில் நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிரபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4- சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

ஏஜண்டுகள்: அப்பா & கோ., கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

**கேடரைன்**



மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணாடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள், கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2/-

ஏஜண்ட்ஸ்: அப்பா & கோ., கெமிஸ்ட்ஸ் 286, சைனா பஜார் ரோட், மதராஸ்,

வழியைப்போதிப்பாராம். சுளையாக மாதந் தோறும் ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறுவாராம்!

சிந்து மாகாண சர்க்காருக்குப் பித்தம் தலைக்கேறி இருக்கவேண்டும். மாகாணத்தின் பொருளாதார நிலைமையைச் சீர்செய்ய யோசித்தார்கள். நிறைய மீன்களைப் பிடித்து விற்றுக் காசு சேர்க்கத் திட்டம் போட்டுள்ளனர். மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் ஒரு சீமைச் செம்படவ வாத்தியார், இரண்டு படகுகள், ரூ. 1,03,000 முதலில் செலவு செய்தல், ஒவ்வொரு வருஷமும் ரூ. 30,000 செலவு செய்தல். இதுவே திட்டம். இத்திட்டத்தினால் ஒரு வருஷத்தில் ரூ. 1,50,000 பெறுமான மீன்களைப் பிடித்துக் குவிக்கலாமாம்.

இனி இந்தியாவிலுள்ள கொக்கு காக்காய் இவைகளைப் பிடிக்கும் விதத்தைப் போதிக்கவும் சீமை வாத்தியார்கள் இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்டால் அதில் ஆச்சரியம் கொள்ள இடமில்லை,

சீமையிலுள்ள உதாவக்கரைப் பேர்வழிக்கெல்லாம் பணத்தை அள்ளிவிட நாம் என்ன குபேர பட்டணத்தில் இருக்கின்றோமா? கேள்விமுறை கிடையாதா? என்ன ஊதாரித்தனம்?

ஒரு விநோதம் கவனித்தீர்களா? இவ்வித நிபுணர்கள் உற்பத்தியாவதெல்லாம் சீமையில்தான். அதுவும் இந்தியாவுக்கென்றே பிறக்கின்றார்கள். உண்மை இந்திய நிபுணர் ஒருவர் சீமையில் இலகுவில் பேர் வாங்க முடியுமா?

டாம், டிக், ஹாரி எந்த வெள்ளையனும் இந்தியாவில் நிபுணன் என்ற பட்டங் கட்டிக்கொண்டு சுலபமாக நுழைந்து அட்டகாசம் செய்கிறான்.

சிந்து மாகாண சர்க்காருக்குப் பிடித்துள்ள பித்தம் மற்ற மாகாண சர்க்கார்களுக்கும் பிடிக்காமலிருக்க ஆண்டவனை வேண்டுவோம்!


## வாங்கிக் குவிக்காதீர்கள்

வாங்கிக்கூட்டுவது சுயநலமான காரியமாகும். அது உண்மையில்லாத பஞ்சத்தை உண்டுபண்ணுகிறது. விலைவாசிகளை ஏறச்செய்து முக்கியமாக அன்றாட உபயோகத்திற்கு இன்றியமையாத 501 ஸோப்புகளைப்போன்ற பண்டங்கள் வாங்கப் போதுமான பணவசதியில்லாதவர்களுக்கு மிகக்கஷ்டம் விளைவிக்கிறது




**501 ஸோப்புகள்**

**தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி**

**லிமிடெட்**

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

இரண்டு மூன்று தினங்களுக்குமுன் சாத்தூர் கிருஷ்ணய்யங்கார் ரேடியோவில் பாடினார்; ருசிகரமாகவென்றே சொல்லலாம். கச்சேரியின் அந்தியில் "சொகசுகாதநாது சுகுண வேணுகோபாலா" என்ற சஹானா ராகப் பதத்தைப் பாடினார்; அதைக்கேட்டு அம்மாஞ்சியும் நானும் ஆனந்தித்தோம். பதம் பாடக்கூட உப்புக்கல் மாதிரி ஒரு வித்வான் இருக்கிறாரல்லவா என்ற ஆனந்தந்தான். ஆனால் பதத்தைப் பாடிச் சுகமாக முடிக்கும் தருணத்தில் இட்டிலிமாவை ஆட்டு கல்லில் அரைப்பது போல் கடமுட கடமுடவென்று ஸ்வரங்கள் போட ஆரம்பித்துவிட்டார். அம்மாஞ்சிக்கு உண்டான வேதனை சொல்லமுடியவில்லை. "ஜிலேபிக்கு நெய்யும் சர்க்கரையும் குழைத்துத் தொட்டுக்கொண்டு சாப்பிடுவார்போலிருக்கு, இந்தக் கிழவர்" என்று சொல்லிச் சிரித்தான். இந்தச் சம்பவத்தை நினைத்துக்கொண்டு அழவும் அழலாம்; அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாகும் என்பதை நம் சங்கீதத்தில் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். பஞ்சரத்னக் கீர்த்தனைகளுக்கும் பதங்களுக்கும் ஸ்வரம்போடுவது சங்கீத நவநாகரிகத்தின் போக்கு என்பது சிலகாலமாகக் காணப்படுகிறது. இதை ஆரம்பித்தவர்கள் எந்தச் சந்தர்ப்பத்தில் எதற்காக ஆரம்பித்தார்களோ தெரியவில்லை; ஆனால் இந்தச் சம்பிரதாயம் மாத்திரம் சொறி சிரங்கு மாதிரி பரவிவிட்டது. மேக காரகம் மாதிரி என்ன செய்தாலும் போகமாட்டேன் என்கிறது. அசம்பாவிதமான ஸ்வரக்கோவைகளை நிறுத்த மருந்து ஒன்றும் காணப்படவில்லை. அடுத்த முறை ஏதாவது ஒரு கச்சேரியில் ஒரு வித்வான் இப்படிச் செய்யுங்கால், பத்துப்பேராக எழுந்து "பாண்டுரங்கவிட்டலே, ஹரி நாராயண, விட்டல், விட்டல், பாண்டுரங்க விட்டல்", என்று வீதி பஜனை ஸம்பிரதாயத்தில் சிறிதுநேரம் குதித்தால் ஒரு வேளை நின்றுவிடுமோ என்னவோ? இதற்கும் ஆட்களைத் தயார் செய்து கோமாளித்தனம் செய்யவேண்டியதுதான் என்று எனக்கு யோசனை தோன்றுகிறது.

ஒழுக்கம், அவையடக்கம், நாகரிகம் என்பது ஹிந்துக்களுடைய வாழ்க்கையில் அநேக அம்சங்களில் காணாமல் மறைந்துவிட்ட பிறகு, சங்கீதத்தில் மாத்திரம் எங்கிருந்து காணப்படும் என்கிறான் அம்மாஞ்சி! சென்ற மலரில் நான் எழுதியதைப் படித்தவர்களில் பலர் சிறிது ஊக்கத்துடன் நம்மைச் சுற்றிக் காணப்படும் மாறுதல்களைக் கவனிப்பார்களேயாயின் ஹிந்துக்களுடைய பரம்பரையான அவையடக்கம் மாறி, வீண் ஜம்பம் மேற்கொண்டதை உணர்வார்கள். கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டியதில்லை. எந்த அம்சத்தை வேண்டுமென்றாலும் எடுத்துக்கொள்ளுங்கள். சங்கீத சபைகளைப்பற்றிப் பேசுங்கள், கச்சேரிகளைக் கவனியுங்கள், மணக்கோலங்களைப் பாருங்கள், பொதுநல நன்மைக்காக உண்டாயிருக்கும் சங்கங்களை அணுகுங்கள், யாவற்றிலும் விரலுக்குத் தகாத வீக்கமே அதிகமாகக் காணப்படும். சிறுகக் கட்டிப் பெருக வாழ் என்பது ஒன்றிலும் காணப்படாது. ஏன் ஐயா இப்படிச் சொல்லுகிறீர் என்பீர்களோ? நிதானமாய்க் கவனியுங்கள்!

மணக்கோலப் பத்திரிகைகளை எடுத்துக் கொள்ளுங்கள். காகிதப் பஞ்சம் என்பதைப் பொய்யாக்கும்படி ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் அடிக்கப்படுகின்றன; பெரும்பான்மை, ஐயா அம்மா இருவர் பேரும் தலைமைப்பட்டிருக்கும்; சில அம்மா மாத்திரம் அனுப்புவனவாயிருக்கும்; இன்னும் சில வீட்டிலுள்ள "குஞ்சுங்கள்" அழைப்புப் பத்திரமாயிருக்கும். தம்பதிகளுடைய அழைப்புப் பத்திரம் உற்றார், உறவினர், நண்பர்கள் இவர்களுக்கும், அம்மாவுடையது லேடீஸ் கிளப் கோஷ்டியாருக்கும், குஞ்சுங்களுடையது (மலையாள பாஷையில் குழந்தைகள் என்பதாம்) காலேஜ் சிநேகிதர்களுக்கும் இப்படிப் பரிமாறி, ஒவ்வொரு வீட்டிலும் நான்கு அல்லது ஐந்து பத்திரிகைகள் குவிந்துவிடும். ஆகக்கூடி அச்சாபீஸ் செலவு ஐந்நூறு என்று சுமாராக வைத்துக்கொள்ளலாம். இவ்வளவுக்கும் சம்பூர்ணமான அழைப்பு ஏற்பட்டிருக்கும் என்று சொல்ல முடியுமா? சந்தேகம்தான். சந்தேகம் என்ன? இல்லையென்றே சொல்லி விடலாம். என் அபிப்பிராயத்தில் சந்தேகம் ஏற்பட்டால், ஏதாவது ஒரு கலியாணத்தில் "ரிசப்ஷன்" நடக்கும் இடத்தில் நின்றுகொண்டு கவனியுங்கள். "வாங்கோ! வாங்கோ! வரணும்! சின்னநாட்டுப் பெண்காணோமே! பின்னாலே வராளாக்கும்" என்ற கேள்வி காதில் விழும். அதற்குப் பதில் "இல்லையே, சினிமா போயிருக்காப்பலே இருக்கு, அவளுக்கு இன்விடேஷன் கிடைக்கவில்லையாமே" என்று காதில் விழும். அவ்வளவு

தான். "நன்னயிருக்கு, இன்விடேஷன் அனுப்பவில்லையா?" என்று ஒருபுறம், "அப்படின்னு, வந்த இன்விடேஷனை ஒளிச்சு வைச்சுட்டு, இல்லேங்கிறேமா" என்றும், இப்படியெல்லாம் காதில் விழுந்துகொண்டேயிருக்கும். காசைக்கொடுத்துத் தேளைக் கொட்டவிட்ட கதைதான்! பழைய காலத்துச் சம்பிரதாயப் பிரகாரம் "சகல குடும்ப சமேதராய் நாலு நாள் முன்னதாகவே வந்திருந்து முகூர்த்தத்தை நடப்பிவைக்கக் கோருகிறேன்" என்று தட்டிவிட்டு, ஒரு மஞ்சள் கடுதாசி அச்சிட்டுவிட்டால் இந்த வீண்வம்பு ஒன்றும் இராதா! அய்யா வேறு, அம்மா வேறு, பிள்ளைகள் வேறு, பெண்கள் வேறு, இப்படியெல்லாம் இன்விடேஷன் அடித்து, தபாலில் கொஞ்சம், லோகல் டெலிவரி மூலம் கொஞ்சம், களப்புச்சிப்பந்திமூலம் சில, ஆத்தில் இருக்கிற பொடிப் பயல்கள்மூலம் சில—இப்படியெல்லாம் பத்திரிகைகள் அனுப்பினல், தகராறு இல்லாமல் நடக்குமா. தலைக்குத் தலை பெரியதனம் என்பது தற்கால நாகரிகத்தினுடைய நவீன அம்சம். ஒவ்வொரு தலைக்கும் ஒருவால் முளைக்கும் அல்லவா, அது ஆடாமல் இருக்குமா? நீங்களே சொல்லுங்கள்.

கச்சேரி வைபவத்தைக் கவனியுங்களேன்! தற்காலத்தில் கேவலம் ஒரு சங்கீத பூஷணத்தின் கச்சேரிக்கே ஐந்து ரூபாய் டிக்கட் கட்டணம் நிர்ணயமாய்விட்டது. "சங்கீத பூஷணம்" என்ருல் தெரிகிறதோ இல்லையோ? சர்வ கலாசாலைகளிலிருந்து புற்றிலிருந்து ஈசல் புறப்படுவதுபோல் வருஷத்துக்கு முப்பது நாற்பதாய்க் கிளம்புகின்றனவே, அவைகள்தான். தட்டாமாலை சுற்றுவதுபோல் தினம் ஒரு ஊரில் கச்சேரி செய்துவிட்டு வருகிற ஜந்துக்களுக்கே கூட்டம் கணக்கில்லாமல் திரண்டு உருளுகின்றன. நல்ல கொழுத்த சங்கீத கலாநிதி அல்லது சங்கீத இந்திரப் பிரஸ்தாஸ்ரம ஸ்ரஸ்வதி, இத்தகைய பெயர்பெற்ற புள்ளிகள் கச்சேரியென்ருல் கூட்டத்துக்குக் கேட்பானேன். அதிலும் ஒரு கலியாணத்தில் ம. ஷ. அல்லது அரியக்குடி அல்லது ஜீ. என். பீ. என்பவரைப் போன்ற சங்கீத அபிமானிகளின் நக்ஷத்திரங்களுடைய கச்சேரி ஏற்பட்டுவிட்டால், பத்தும் பதினைந்தும் பணத்தைக் கொடுத்துக் கேட்க அந்தஸ்தில்லாதவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு கூட்டத்தில் புகுந்து முகாம் போடுவது சகஜமாய்விட்டது. சமீபமாக ஒரு கலியாணத்தில் இம்மாதிரி நடந்ததை நானும் அம்மாஞ்சியும் கவனித்தோம். அழைப்புப் பத்திரம் கிடைத்துவந்தவர்கள் ஆயிரம் பேர் என்ருல், வீதியில் போய்க்கொண்டிருந்த வெட்டிப் பேர்வழிகள் ஓர் ஆயிரம் உள்ளேறிவிட்டனர். அநேக "லவுட் ஸ்பீகர்கள்" வெளியே நாட்டப்பட்டிருந்தபோதிலும், கூட்டத்தில் சேர்ந்து, கண் குளிரப் பார்த்துக்கொண்டு, நாற்காலியில் அமர்ந்து, ஆனந்தமாக நான்கு மணி நேரம் கேட்பதுபோலாகுமா, வெளியே ரஸ்தாவில் நின்று கேட்பது? அந்தக் கலியாணத்தில் கூட்டம் கனத்துப்போகவே கதவு அடைக்கவேண்டிவந்து, முரட்டு ஆட்கள் இரண்டுபேர் அங்கு நின்றுகொண்டு, "வாங்க சார், இப்படி வாங்கோ! ஒதுங்கடா அந்தண்டை! கன்னத்தில் அறைவேன் பார், தடிப்பயலே! நீங்கவாங்க சார்! ஏன் அய்யா, உமக்குப் புத்தி இல்லே, வெளியேயிருந்து கேளுங்களேன்!" இப்படியெல்லாம் கதறவேண்டிவந்தது. சங்கடந் தெரியாத வெட்டிப்பயல்கள் வெளியே பேசின பேச்சைக் கேட்பானேன்? "என்னையா, மஹா பெரிய மனுஷன், என்னமோ கலியாணம் பண்ணும்போது சங்கீதக் கச்சேரி வெச்சுப்புட்டார், கூப்பிட்டவா தான் வரணுமாம், கூப்பிடாதவா வெளியே நிற்கணுமாம்! பணங்காசு கொடுத்து இந்தப் பாட்டை நாங்க கேட்கமுடிந்தா இங்கேயேன் வரோம்! உள்ளே போறேன்னுக்கே, கதவை மூடிவிடருரே! பேசினுடாணுக்காரனைக் கூப்பிடருர்!" என்றெல்லாம் சொல்லித்திரிந்தனர். இதெல்லாம் வீண் வம்புதானே! சொந்தமனுஷாள் இன்னும் முக்கியமான நண்பர்கள் இவர்களுடன் சேர்ந்து ஆநந்தமாகவும், அடக்கமாகவும், ஆத்மார்த்தமாகவும் செய்துமுடிக்க வேண்டிய சடங்குகளை விபரீதமான கூட்டத்தில் செய்ய ஏற்பாடுசெய்தால், அதினுல் ஏற்படும் தொல்லைகளை அனுபவித்துத்தான் தீரவேண்டும். தெருவில் திருப்தி என்பது ஐந்துபேருக்கும், அதிருப்தி என்பது தொண்ணூற்றைந்து பேருக்கும் உண்டாகுமேயல்லாது வேறுவழி யென்ன?

இந்த அழகில், சாப்பாடு விமரிசிகளைக் கவனித்திருக்கிறீர்களா? முதலாளி ஒன்று நினைக்க, வெட்டிப் பயல்கள் வேருெரு மாதிரி ஆக்கிவிடுவார்கள்! கச்சேரி நடந்துகொண்டிருக்கும்போது, முதலாளி வெகு சமர்த்தாகக்கூட்டத்தில்அங்கங்கு வீற்றிருக்கும் பெரிய புள்ளிகளாகப் பொறுக்கியெடுத்து, ரகசியமாக அவர்களை யழைத்துப் போய் முதல் பந்தியில் சுமார் நூறு ஆட்களுக்குச் சாப்பாடு செய்துவிடலாம் என்று முயற்சி செய்வார். சாப்பாட்டுக்கொட்டாயில் அவர்களை முந்திக்கொண்டு முன்னதாகவே ஐம்பது ஆட்கள் சட்ரசோபேத

மாகப் பச்சடியில் கையை வைத்து உறிந்து கொண்டிருப்பார்கள். "செலெக்ட் ஆக நம்ம கோஷ்டி அசாமிகளுக்கு டின்னர் முதல்பந்தியிலேயே அரேஞ்ச் பண்ணியிருக்கேன்" என்ற ஜம்பம் உள்ளே பார்த்தால் எகிறிப்போயிருக்கும். "டேய், சாமி, நம்ம ஜட்ஜ் பக்கத்திலே அட்வகேட் ஜனரல் உட்காரணும் தெரியுமா?" என்று முதலாளி கதறுவார். உள்ளே பார்த்தால் ஜட்ஜுக்கும் அட்வகேட் ஜனரலுக்கும் நடுவிலே, பொச பொசவென்று மீசையை வைத்துக் கொண்டு சினிமா தியேட்டரில் கதவு மூடுகிற சிப்பந்தி ஒருவன் உட்கார்ந்து கொண்டு, அவியலில் இருக்கிற முருங்கைக்காயை யெடுத்து முகர்ந்து பார்த்துக்கொண்டிருப்பான். அதுவும் போதாமல், அவன் மாப்பிள்ளைப் பையனுக்கு ரொம்பவும் வேண்டியவனாயிருப்பன். அவனை யெப்படிக் கிளப்புவது? எதற்காக இதைப்பற்றி எழுதுகிறேன் என்றால் அளவுக்கு மிஞ்சி எந்தக் காரியத்தைச் செய்தாலும் அது அசந்தர்ப்பமாகத்தான் முடியும். ஒரே நாளில் முகூர்த்தம், ஊர்வலம், கச்சேரி, டின்னர், எல்லாவற்றையும் நடத்துவதில் ஆயிரக்கணக்கான ஆட்களையும் அழைத்துவிட்டால், ஒரு சடங்கிலாவது சம்பூர்ண திருப்தி என்பது ஏற்படாது. தற்காலக் கலியாணங்களில் அபிமானம், ஒழுக்கம், ரீதி, சந்துஷ்டி என்பது கிடையாது. இது நிச்சயமாய்ச் சொல்லலாம். அழைக்கிறவர்கள் அழைக்காமல் போனால் மனஸ்தாபம் ஏற்படுமே என்பதற்காக அழைப்பதும், வருகிறவர்கள், வராமற்போனால் வருத்தப்பட்டுக்கொள்ளுவார்களே என்பதற்காக வருவதும், சாப்பிடச்சொல்லாமல் போனால் கஞ்சன் என்பார்களே என்பதற்கு டின்னர்பார்ட்டி கொடுப்பதும், வயிற்றுக்கு விரோதமானபோதிலும் சாப்பிடாமற்போனால் கர்வி என்று சொல்லுவார்களே என்பதற்காகச் சாப்பிடுவதும், கூட்டம் சேர்ப்பதற்காகக் கச்சேரி வைக்கவேண்டுமே என்பதை உத்தேசித்து கச்சேரி வைப்பதும்; கச்சேரி வேண்டாவெறுப்பாயிருந்தபோதிலும் தலை அசைக்காவிட்டால் ஏதாவது நினைத்துக்கொள்ளுவார்களோ என்பதற்காகப் பேஷ் பேஷ் என்பதும், இவைபோன்ற கருத்துக்கள் குடிகொண்டு நம்முடைய பழக்கங்களும் ஒழுக்கங்களும் விபரீதமாக வேறுபட்டு வருகின்றன.

பணப்பெருக்கும், பணச் செலவும் இவ்வளவு தூரம் அதிகரித்தும், பொதுஜன நலம் என்பதில் சிறிதேனும் ஊக்கம் அதிகப்படவில்லை யென்பதை ஒருவரும் கவனிக்கவில்லையே? தினத்துக்கு ஒரு சங்கீத சபை உற்பத்தியாயிருக்கிறது; தினத்துக்கு ஒரு கச்சேரி நடந்துகொண்டிருக்கிறது; தினே தினே ஒரு சங்கீத வித்வான், வித்வாம்ஸினி நக்ஷத்திர மண்டலத்தில் ஆஜராகிறார்கள்; (தெய்வாதீனமாக இந்த வருஷத்தில் இரண்டு வித்வான்களே காலமானார்கள், அவர்களிருவரையும் குறித்து நாம் வருந்துங்கால், பாக்கி வித்வான்கள் எல்லாரும் க்ஷேமமாகவும் இன்னும் வெகுகாலம் இருக்கவேண்டுமென்றும் பிரார்த்திக்கவேண்டும்) ஆனால் இத்தகைய சம்பவங்களினால் ஏற்படும் பணப் பெருக்கு, புதையலில்தான் போகிறதுபோலும். கலியாணங்களுக்குச்செலவழியும் பணங்களைக் கணக்குப் பார்த்தால், சென்னையில் கோடீசுவரர்கள் சுமார் ஆயிரம்பேர் இருப்பார்களென்றே கருதலாம்; ஆறெல்லாம் பாலாய்ப் பெருகினாலும் நாய்க்கு நக்கித்தான் குடிக்கவேண்டும் என்பது போல், இவ்வளவு பணப் பெருக்கிலும் நமது நாட்டில் ஒரு காலேஜ் ஏற்படுத்த வேண்டும் என்றால் அதற்கு ஐந்து லக்ஷம் ரூபாய் கிடைப்பது கைக்கெட்டாத காரியமாயிருக்கிறது. சென்ற வருஷம் பத்து லக்ஷம் ரூபாய் கொடுத்தார் ஸ்ரீ வி. எல். எதிராஜ் என்ற பிரபு. நம்முடைய துரதிர்ஷ்டவசத்தால் பணம் வந்தும் காலேஜ் கிடைக்கவில்லை. என்ன காரணமோ தெரியவில்லை! இந்த வருஷம் அலைந்து திரிந்து அலுப்புடன் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும் சிறுவர் சிறுமிகளுக்கு ஒருவரும் முயற்சிசெய்து ஏதாவது வழியேற்படுத்த வேண்டும் என்று சொல்லவில்லை. தப்பு, தப்பு! சொன்னார்கள்— வேண்டியமட்டும் சொன்னார்கள். பத்திரிகைகளில் எழுதினார்கள்! மயிலாப்பூரில் மீட்டிங்கு கூடிப் பேசினார்கள்! கரடிக்கத்தலாகக் கத்தினார்கள்! என்ன அநியாயம் இது, எவ்வளவோ பணத்தைச் செலவுசெய்யும் ராஜாங்கத்தார் இந்தக் காரியத்தைச் செய்யலாகாதா என்று கதறினார்கள். அவ்வளவுதான். ஆனால் அம்மாஞ்சி கேட்கிறான். "வாய் வாழைப்பழம், கை கரணைக்கிழங்கு என்பது தெரியுமா? அதுதான் இது! ராஜாங்கத்தைப் போய்க் கேட்பானேன். அனாவசிய படாடோபத்தில் பணத்தை வாரியிறைக்கும் பெரிய மனுஷாள் இரண்டொரு புதிய காலேஜ்களுக்காக பணத்தை வசூல்செய்தால் என்ன அழகாயிருக்கும்" என்கிறான் .ஆழ்ந்து யோசனை செய்யுங்கள். கலியாண சீஸனும் தீர்ந்துவிட்டது! அடுத்த சீஸனுக்காவது கங்கணம் கட்டிக் கொள்ளுவோம்!


கண்ணம்மா
...என் காதலி!..
ஜூலை 20உ முதல்
சென்னை
கெயிட்டி, கிரௌன்
இரு தியேட்டர்களிலும்
மற்றும் பல முக்ய நகரங்களிலும்
மகத்தான
ஆரம்பம்...
ஒரு ஜெமினி சித்ரம் • தயாரித்தது: ராம்நாத் • டைரக்ஷன்: கொத்தமங்கலம் சுப்பு...

# பற்களின் பராமரிப்பு

தி. சே. சௌ. ராஜன்

"பற்களைப்பற்றிக்கூடவா ஒரு வியாசம்?" என்று சிலர் நகைக்கவும் கூடும். பற்கள் இருக்கின்றனவென்பதையே மக்கள் மறந்துவிடக்கூடும். ஆனால் அப்படி இருக்கக்கூடியவர்கள் ஒன்றிரண்டு பெயர்கள் தவிர அதிகமிருக்க முடியாது. சாதாரணமாக, குழந்தைகள் பிறக்கும்பொழுது பற்களுடன் பிறப்பது கிடையாது. ஆறுமாதம் முதல் இரண்டு வயதிற்குள்ளாகப் பற்கள் முளைக்கும். இரு வரிசைப் பற்களுடன் பிறக்கும் குழந்தைகளை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் அது அபூர்வசிருஷ்டி. இதற்குக் காரணம் கூறமுடியாது. இயற்கை வினோதங்களில் இதுவுமொன்றாக நினைக்கவேண்டுமே தவிர வேறில்லை. குழந்தைப் பருவத்தில் முளைக்கும் பற்கள் இருபது. மேல் வரிசையில் பத்தும், கீழ்வரிசையில் பத்துமாகவிருக்கும். இவைகள் எல்லாம் தற்காலிக பற்கள். இவற்றிற்குப் பால் பற்கள் என்று பெயர். ஏழு வயது முதல் இருபது வயதிற்குள்ளாக இந்த இருபது பால் பற்கள் ஒன்றன்பின் ஒன்றாக உதிர்ந்து, சாசுவதமான பற்கள் முப்பத்திரண்டு உண்டாகின்றன. இவற்றுள் கடைசியாகவுள்ள நான்கு பற்கள் பதினேழாவது வயது முதல் இருபத்திரண்டிற்குள் முளைக்கும். பகுத்தறிவு வயது வந்தபிறகு முளைப்பதால் இவற்றிற்கு ஆங்கிலத்தில் ஞானப்பற்கள் (Wisdom teeth) என்று பெயரிட்டிருக்கிறார்கள். உடற்கூறு சாத்திரப்படி இந்தக் கணக்காகப் பற்கள் பெருவாரியானவர்களுக்கு முளைத்த போதிலும், அங்குமிங்கும் சிலருக்கு மாறுபட்டுக் கிளம்புவதுமுண்டு. பிராணிகளுக்கெல்லாம் அவையவைகளுடைய உடலமைப்பிற்கும், உயிர் வாழ்வதற்குமான வகைகளில் பற்கள் உண்டாயிருக்கின்றன. மனிதனுக்குமட்டில் அழகிற்கும் வசீகரத்திற்கும்கூடப் பல் உபயோகமாகவிருக்கிறது.

மனிதன் முகத்திற்கு, கண்ணிற்கு அடுத்தபடியாக அழகு ஊட்டுவன பற்கள். பற்களின் வரிசை அழகும், வெண்மை அழகும், முத்துப்போன்ற தோற்றமும் கவிஞர்களால் புகழப்பட்டிருக்கின்றன. புன் சிரிப்பு என்று போற்றப்படும் முகவெட்டு, பெரும்பாலும் பற்களால் ஏற்படுகிறது. அழகு ஒருபுறமிருக்க, அவற்றின் உபயோகத்தையும் அவசியத்தையும் பார்த்தாலோ சுக வாழ்விற்கு அடிப்படையான ஒரு சாதனமாக விளங்குகின்றன. உண்ணும் உணவு உருப்படுவதற்கும், அரைந்து, சமைந்து, உமிழ் நீருடன் கலந்து, ருசிபெற்று, உட்சென்று செரிப்பதற்கும் பற்கள் தேவை. பற்கள் விழுந்தோ அல்லது நோயுற்றோ உபத்திரவத்தை உண்டு பண்ணும் வரையில் அவற்றின் அவசியத்தை நம்மில் பலர் சரியாக அறிவதில்லை. தெளிவாகப் பேசுவதற்கும், சத்தத்தை உருவகப்படுத்தி இனிமையைக் கொடுக்கும் பாட்டுப் பாடுவதற்கும் உறுதியான பற்கள் தேவை. எவ்விதத்தில் பார்த்தாலும் பற்களின் பராமரிப்பு மனிதன் தினசரி செய்யவேண்டிய கடமைகளில் ஒன்று என்பதை மறக்க முடியாது. எனினும் நாகரிக வளர்ச்சிக்கும் பற்களின் இயற்கை வனப்பிற்கும் எப்பொழுதும் மாறுபாடாகவே இருக்கிறது.

நான் லண்டனில் படித்துக்கொண்டிருந்தபொழுது எனக்கு வயது இருபத்தைந்து. சிறு வயதுமுதல் என் பற்களை நான் பேணிப் பார்த்து வந்ததாக ஞாபகமில்லை. இருந்தபோதிலும் என் பல் வரிசை ஒழுங்காகவும், சுத்தமாகவுமிருந்தது. ஆனால் அவ்வூரிலுள்ள அநேகர் என் பற்கள் செயற்கைப் பற்கள் எனவே நினைத்தார்கள். வாயைப் பிளந்து காட்டி, பற்கள் என்னுடையவைதான், விலைக்கு வாங்கியவையல்ல என்று நிரூபிக்கும் வரையில் அவர்கள் நம்பவில்லை. ஒரு பல்கூடவா கெடவில்லை என்று ஆச்சரியத்துடன் கேட்டார்கள். உடல் உருவத்திலும், தேக ஆரோக்கியத்திலும், என்னைக்காட்டிலும் பன்மடங்கு மேன்மை

யாக உள்ள அந்த ஆங்கிலச் சிறுவர் சிறுமிகட்கு எக்காரணத்தாலோ சிறு வயதிலேயே பற்கள் நோயுறவும், விழுந்து விடவும் நேரிட்டுவிடுகிறது. அக்காலத்தி லேயே லண்டன் நகரில் பல் வைத்தி யர்கள், தெருக்களில் பல் டாக்டர்களென விளம்பரப்படுத்தி, தங்கள் பெயர்களை யும், யோக்கியதைகளையும், சுவரொட் டியில் எழுதித் தொங்கவிட்டிருந்ததைக் கண்டேன். அதனின்றும் அவாகள் தொழில் செவ்வனே நடைபெற்றுவந்த தென நன்கு விளங்கிற்று.

பற்கள் சீக்கிரத்தில் உதிர்ந்துவிடுவது அல்லது சொத்தை விழுந்து உபயோக மற்றுவிடுவது பரம்பரைக் குணமா அல் லது உணவின் தன்மையாலா, அல்லது பாதுகாப்புக் குறைவினலா வென்பது நிச் சயமாகச் சொல்லமுடியாது. எனினும் பல்லையிழந்த இளவயதினர் நம்மைக்காட் டிலும் ஆங்கிலேயர்களில் அதிகம் என் பதற்கு ஐயமில்லை. இதற்குக் காரணம் அவர்களின் உணவும் பழக்கவழக்கங் களும் சீதோஷ்ண ஸ்திதியுமாகும். தின சரி பல் துலக்கும் பழக்கம் சமீபகால மாகத்தான் பொது மக்களால் அந்நாட் டில் கையாளப்பட்டுவருகிறது. வருஷத் தில் பெருவாரியான நாட்கள் குளிராக இருப்பதால், விடியற்காலை நேரத்தில் குளிர்ந்த தண்ணீர் பல்லில் படுவது சுக மாகவிருக்காது. பெரும்பான்மையோருக் குச் சுடு தண்ணீர் கிடைப்பதரிது. இது ஒரு காரணமாக இருக்கலாமெனத் தோன்றுகிறது. பல்லைத்தேய்த்துச் சுத்தம் செய்வதற்குத் தேவையான இயற்கைச் சாதனங்களும் கிடைப்பது அரிது அந்நாட் டில். பல்லைத்தேய்த்துச் சுத்தம்செய்யும் பழக்கத்தை உண்டுபண்ணப் பொது மக்க ளுக்குச் சுகாதார அதிகாரிகள் முன் வந்து உழைத்தார்கள். ஏழைகளுக்கென உழைக் கும் பெரிய ஆஸ்பத்திரிகளில், தினசரி வரும் நோயாளிகளுக்குப் பல் தேய்க்கும் "புருஷ்" (brush) இனமாக அளித்துப் பழக்கிவந்தார்கள். பற்களை இழந்தவர் களுக்குப் புதிதான செயற்கைப் பற்களை இனமாக அளித்து இன்றும் பல ஜீவ காருண்யச் சங்கங்கள் அங்கு வேலை செய்து வருகின்றன.

நமது நாட்டிலோ நாம் கையாண்டு வந்த அநேக நற்பழக்கங்கள் மறைந்து, பற்களின் பராமரிப்புக் கொஞ்சம் கொஞ் சமாகக் குறைந்து வருகிறது. சில வரு ஷங்களுக்கு முன்னால் நமது பள்ளிக்கூட மாணவர்களின் உடல் நிலையைச்சோதித்து வரும்பொழுது சுமார் நூற்றுக்கு ஐம்பது பெயர்களுக்கு மேற்பட்டவர்கள் கெட்டுப் போன பற்களுடனிருந்தார்கள். பற்கள் கெட்டு, கவனிக்கவேண்டிய நிலையிலிருக் கின்றனவென்று அவர்களுக்காவது அல் லது அவர்களுடைய பெற்றோர்களுக்கா வது அல்லது பள்ளிக்கூட உபாத்தியாயர் அதிகாரிகள் இவர்களுக்காவது தெரிய வில்லை. ஆகையால் இதனின்று உண்டா கும் பலவித நோய்களும் அதன் காரணங் களும் அறியப்படாதிருப்பதில் ஆச்சரியம் யாதொன்றுமில்லை.

உண்ணும் உணவு சரியாக ஜரிக்க வேண்டுமானால் நன்றாகக் கடித்து, மென்று தின்னவேண்டும். உணவு ஜரிப்பது வாயி லிருந்தே தொடங்குகிறது. மாக்கூர் பதார்த்தங்கள், வாயில் உமிழ்நீருடன் நன்றாகக் கலந்து அரைபட்டால், இனிப் பாக மாறிவிடுகிறது. உணவு ஜரிக்கஆரம் பிப்பதற்கு இது ஓர் அடையாளம். வாயில் நன்கு கலந்த உணவு வயிற்றினுட் புகுங் கால் அங்கு உற்பத்தியாகும், காடிநீர் நன் றாகச் சுரந்து உணவில்கலந்து பக்குவப் படுத்தும். அப்படியில்லாமல், வாயில் ஊத்தை, துர்நாற்றம், சொத்தைப் பல், பல்லிடுக்கிலும் ஈகறிலும் (பல்லீறு) சீழ்வடிந்து உணவு அரைபடாமலும் அல் லது அறைபட்டாலும் அசுத்தமான நோய்க் கிருமிகளுடன் கலந்து விழுங்கப் படுதல் ஆகியவற்றால் பலவிதமான வயிற்றுக்கோளாறுகள் ஏற்படுகின்றன. இவை யெல்லாம் தடுக்கப்படக்கூடியவை. அதற்கு அறிவும், ஒழுக்கமும் நற் பழக்க மும் வேண்டும். அதிகாலையில் பல் துலக் கும் பழக்கத்தைக் கைவிடக்கூடாது. பல் துலக்காமல் உணவோ, தின்பண்டமோ மக்களுக்குக் கொடுக்கக்கூடாது. தண் ணீரை வாயில்விட்டுக் கொப்புளித்து விடுவதுமட்டும் போதாது. ஒவ்வொரு பல்லையும் அதன் ஈகறையும் முன் விரலால் தேய்த்துத் தடவிச்சுத்தம் செய்யவண்டும். மிக அவசரமாகத் தேய்த்தாலும் குறைந்தது பத்து நிமிஷமாகிலும் சுத்தம் செய்வதற்கு வேண்டும். வாயை நன்றாகக் கொப்புளித்து நாக்கு, தொண்டை எல்லா

வற்றையும் சுத்தப்படுத்த வேண்டும். நமது நாட்டில் புராதனமாகப் பழக்கத்திலிருந்து வரும் முறைகள் ஒப்பற்றவை. அனுபவத்தினுலே நன்மையடைந்து தொடர்ந்து பின்பற்றப்படும் முறைகள். சோம்பேறித்தனத்தினுலும் அறியாமையினுலும் அதை நாம் கைநழுவவிட்டு வருகிருேம். இது பெருந்தவறு. காலையில் எழுந்திருந்தவுடன் என்ன பசியாயிருந்த போதிலும் பல் துலக்காமல் எவ்வித உணவும் உண்ணக்கூடாது, அதுவெறும் காப்பியாக இருந்தாலும்சரி, கஞ்சியாகவிருந்தாலும் சரி, ருசியுள்ள ஹல்வாவாக இருந்தாலும் சரி, ஆறிப்போய்விடுமே என்ற பயமின்றி, பல் விளக்கிய பிறகுதான் உண்ணவேண்டும். பல் துலக்குவதற்குப் பலவித சாதனங்கள் நம்மிடத்தில் ஏராளமாகவிருக்கின்றன. அவைகளை விலைகொடுத்து வாங்க வேண்டியதில்லை. நினைத்த இடத்தில் கைக்கெட்டக்கூடிய இடத்தில் வேண்டிய மட்டும் கிடைக்கின்றன. அப்படி இருக்க நம்முள் நவீன நாகரிகத்தில் ஈடுபட்ட சிலர், இவ்வகையான சாதனங்கள் இலவசமாகக் கிடைப்பதையே மறந்து விட்டு இருக்கிருர்கள். அவற்றிற்குப் பதிலாக விலை உயர்ந்தனவும், தற்காலம் கிடைப்பதே அரிதாகவிருப்பனவும் ஆன அந்நிய நாட்டில் செய்யப்பட்ட புருஷ்களை அதிக விலைகொடுத்து வாங்கி, அவற்றிற்குமேல் கிராக்கியாகவுள்ள பசைகளையும் வாங்கி, அவைகளைக் கொண்டு பல் துலக்குகிருர்கள். இந்த ஓர் அம்சத்தில் செலவாகும் தொகை நமது ஏழைகள் ஒரு வாரத்தில் சம்பாதிக்கும் கூலிக்கு நிகராகும். பணச் செலவோடு இப்பழக்கம் நிற்பதில்லை; சுகக்கேடு உண்டாவதற்கான ஆபத்தும் இதில் இருக்கிறது. அதிகவிலை கொடுத்து வாங்கி உபயோகிக்கப் பெரும்பான்மையோரால் முடியாது. அதிலும் கிராமவாசிகளால் ஒருகாலும் முடியாது. அப்படிச் செலவு செய்தாலும் சுகமிருக்குமாவெனக் கவனித்தால் அதுவும் கிடையாது. "புருஷ்" போட்டுத்தேய்ப்பதிலிருக்கும் கஷ்டங்கள் பல. "புருஷ்" ஒருமுறை உபயோகித்த பிறகு அதைக்கழுவி மறு முறைக்கு உபயோகப் படுத்தவேண்டிய முறை அநேகருக்குத் தெரியாது. தெரிந்தாலும் அனுஷ்டிப்பது கடினம். "புருஷ்"களின் மயிர்களுக்கிடையில் பல்லின் அசுத்தங்கள் செல்வதைச் சரிவரச் சுத்தம்செய்ய முடியாது. அப்படிச் சுத்தம் செய்ய வேண்டுமானல் "புருஷ்" ஐந்து நிமிஷ நேரம் கொதிக்கும் தண்ணீரில் மூழ்கும்படி வைக்கவேண்டும். பிறகு நன்ருகத் துடைத்துவிட்டு ஒருமணி நேரம் வெய்யிலில் காயவைக்கவேண்டும். உபயோகிக்கும் "புருஷ்" மயிர்கள் நல்ல விறைப்புள்ளதாக இருக்கவேண்டும். குறைந்தது இரண்டு "புருஷ்கள்" தேவை. ஒரு நாள் உபயோகப்படுத்தி மறுநாள் சுத்தம் செய்வதற்கு அவகாசம் வைத்துக்கொண்டு மாறி மாறி உபயோகப்படுத்தவெண்டும். கடைசியாக நல்ல உருவான "புருஷ்கள்" நம் நாட்டில் செய்யப்படுவதில்லை. கேவலம் தினசரி பல் விளக்க ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து வரும் ஒரு சாதனத்தை நம்பி வாழ்வு நடத்துவது எவ்வளவு மோசமான நிலை என்பதை மறந்துவிடக் கூடாது. மேலும் சரியானபடி சுத்தப்படுத்தப்படாத "புருஷ்" உபயோகப் படுத்தப்படுவதைக் காட்டிலும் பல் தேய்க்காமலிருப்பதே நலம். பல்லைத்தேய்க்கும் முறையில் அசுத்தமாய் இருக்கும் "புருஷினுல்" அபாயகரமான விஷம் பல் எகறுகளுக்குள் செலுத்தப்படாமலாவது இருக்கவேண்டாமா?

டப்பிகளிலும், குழாய்களிலும் அடைத்து வைத்திருக்கும் பல்தேய்க்கும் பசைகளாலும், பல்பொடிகளாலும் யாதொரு பயனுமில்லை. பற்களைப் பளபள வென்றிருக்கும்படி இவைகளைக்கொண்டு நன்ருகத் தேய்த்துவிடலாம். ஆனல் வெகு நாட்களுக்கு இவைகளை உபயோகப்படுத்துவதால் பல்லிற்குக்கெடுதல் உண்டாகிவிடுகிறது. ஒரு நாளொன்றிற்கு மூன்று நிமிஷ நேரம் பற்களில் இந்தத் தூள் அல்லது பசையைத்தேய்ப்பதாக வைத்துக்கொள்ளுவோம். ஒருவருஷத்திற்குக் கணக்குப்பார்த்தால் பதினெட்டு மணி நேரம் தேய்த்துக்கொண்டிருக்கும்படி நேரிடும். வடிகட்டின சீமைச் சுண்ணும்பால் செய்யப்பட்டுள்ள பசையைக் கொண்டும், பலவிதப் பட்டைகள், காய்கள், துவர்ப்புக் குணமுள்ள வேர்கள் இவைகளைக் கொண்டு தூளாக்கப்பட்ட பற்பொடிகளைக்கொண்டும் மனிதனுடைய பல்லைப் பதினெட்டு மணி நேரம் தேய்த்தால் எப்படிப்பட்ட உறுதியான பல்லும் தேய்ந்துவிடும். பற்களின் வெளிப்பாகத்தில்,

அதற்கு உறுதியும் பளபளப்பையும் தருவது "எனாமல்" (enamel) என்று சொல்லப்படும் பொருள். அது கரைந்துவிட்டால், பற்களின் நடுவிலிருக்கும் நுட்பமான பாகம் திறக்கப்பட்டு, அதிலிருக்கும் நரம்புகள் வெளிப்பட்டு, காற்றுபட்டாலும்கூடத் தாங்கமுடியாத கூச்சமும், வலியும் உண்டாகும். அதன் வழியாக விஷக் கிருமிகள் உட்புகுந்து பல்லின் வேரில் ஊடுருவிச் சென்று, ஈகறுகள் வீங்கி, சீழ்பிடித்து, தீராத வேதனையைக் கொடுக்கும்.

உணவு மென்று தின்னபிறகு இடுக்குக்களில் புகுந்து அடைபட்டுத் தங்கி விடுவதால், அங்கிருந்து அதைச் சுத்தப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. உணவு அருந்திய பிறகு வாயை நன்றாகக் கொப்புளித்துச் சுத்தம் செய்யவேண்டியது அவசியம். சாம்பல், செங்கல்துண்டுகளைக் கல்லில்தேய்த்து, பசையாகச்செய்து, அதைப் பல் தேய்க்க உபயோகிப்பது, இம்மாதிரி பல குறுக்கு வழிகளைப் பின்பற்றுவதால் பல்லிற்குக் கெடுதல் உண்டாகிறது. இம்மாதிரி தேய்ப்பதைக் காட்டிலும் பல் துலக்காமலிருப்பதே நலம். பற்களைத் தேய்த்துச் சுத்தமாக வைப்பதற்கு உரிய சாதனங்கள் யாவை என்பதை நன்கு தெரிந்துகொண்டு,அதைச்சரிவர உபயோகிக்கவேண்டும். ஆலம்விழுது கிளைகள், வேலங் குச்சிகள், இவைகளைக் காய்ந்து போவதற்கு முன்பாகச் சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும். பச்சையாகவிருக்கும்பொழுதே ஒரு முனையை நன்றாகக் கல்லில்வைத்து நசுக்கி, 'புருஷ்' போல அதன் நரம்புகள் கால் அங்குலம் நீளம் பரவி நிற்கும்படி செய்து, கட்டி வைத்துவிட வேண்டும். நுனி காய்ந்து விடுமானால் முதல்நாளிரவே அதைத் தண்ணீரில் நனைத்து மிருதுவாகவிருக்கும்படி செய்துவிட வேண்டும். மறுநாட் காலையில் அதை உபயோகிக்கவேண்டும். தேய்க்கும் பொழுது ஒவ்வொரு பல்லையும் தனித் தனியே கவனித்து, இடுக்குக்களையும் சுத்தம் செய்யவேண்டும். பல் குச்சிகளுக்கு அடுத்தபடியாகப் பழுத்த மாவிலையின் நடு

"இது என்ன இங்க் தெரியுமோ"
என்று தன் ஐந்தாண்டு நிரம்பாத குழந்தையைக் கேட்டால்




"இதுகூடவா தெரியாதாப்பா
ஜாப்கோ
பவுண்டிங்"

என்கிறது தற்காலக்குழந்தைகள். நெடு நாளைப் பழக்கத்தினால் ஜாப்கோ பவுண்டிங் குடும்பத்தில் நூடே பிறந்த ஒரு பொருளாகி விட்டது.

இது பாரதத்தின் ஓர் உன்னத தயாரிப்பு

நரம்பை எடுத்துவிட்டு, அதைப் பல்லில் கசக்கி, பல்குச்சிபோல உபயோகப்படுத்தலாம். குச்சிகள், மாவிலைகள் இவைகளை உபயோகப்படுத்தும்பொழுது, வாயில் உண்டாகும் அழுக்கடைந்த உமிழ்நீரைக் கண்ட இடத்தில் நடந்துகொண்டு துப்பி, ஓடும் தண்ணீர், குளம் முதலியவைகளில் கரையும்படி செய்யக்கூடாது. பல்தேய்த்த பிறகு கைவிரலைக்கொண்டு கடைவாய், முன்வாய், நாக்கு, எகறு முதலியவைகளை நன்றாகத் தேய்த்து, தடவிக்கொடுத்து, பலமுறை சுத்தமான தண்ணீரைவிட்டுக் கொப்புளிக்கவேண்டும். இம்மாதிரி தடவிக்கொடுத்துச் சுத்தம் செய்வதில் பற்களைக்காப்பாற்றும் ரகசியம் அடங்கியிருக்கிறது. ஆங்கிலத்தில் மஸாஜ் (Massage of the gums) என்று சொல்வது வழக்கம். இதைத் தினசரி செய்துவந்தால் எகறு கெட்டிப்பட்டு, பல் தளர்ந்து அசைவுறாமலிருக்கும். நமது நாட்டில் கண்டபடி எதையும்போட்டுப் பல்லை விரலால்தேய்க்கும் வழக்கமிருக்கிறது. அப்படிச் செய்தும் பலருக்குப் பற்கள் நல்ல நிலையில் இருக்கின்றன. அதற்குக் காரணம் அவர்களை அறியாமலே விரலால் எகறுகளுக்கு "மஸாஜ்" ஏற்படுத்துவதுதான். ஆகையால் எதைப்போட்டுத் தேய்த்தாலும் கடைசியாக வாயை விரலைக்கொண்டு மேற்கூறிய பிரகாரம் தடவி கொடுக்க வேண்டியது அவசியம். மிகவும் சுலபமானதும், ஏழைகளும் அதிக சிரமமின்றி தயாரித்துக்கொள்ளக்கூடியதுமான பல்பொடி, நன்றாகப் பொடி பண்ணின உப்பு. இதோடு அடுப்புக் கரியை மிக மிருதுவாகப் பொடி செய்து கலந்துகொண்டால் நல்ல பற்பொடியாகும். ஆனால் இதைப்பல் குச்சிகளோடு ஒப்பிட முடியாது. வேண்டுமானால் பல் குச்சிகளைப் பொடி செய்த உப்பில் நுனியை நனைத்துக்கொண்டு தேய்ப்பது நல்ல பழக்கம். ஒருநாள் உபயோகிக்கும் குச்சியை மறுநாள் உபயோகிக்கக்கூடாது. தினந்தோறும் குச்சி கிடைப்பது கஷ்டமாக இருந்தால், உபயோகப்படுத்திய நுனியை வெட்டிவிட்டு, மறுபடியும் நுனியை நசுக்கி அதேகுச்சியைச்சிறியதாகும் வரையில் மூன்று, நான்கு நாட்களுக்கு உபயோகிக்கலாம். பற்கள் அதிக நாட்கள் நீடித்திருக்க வேண்டுமானால் அதற்குச் சுத்தமாக வைப்பதுமட்டிலும் போதாது; உணவைக் கடித்து, அரைத்து மென்று தின்னும் பழக்கமும் வேண்டும். கடித்துத் தின்னும் உணவு இல்லாவிட்டால் சீக்கிரத்தில் பற்கள் ஆட்டம் கொடுத்துவிடும். முறுக்கு, சீடை போன்ற கடினமான தின் பண்டங்களைப் பற்களுக்கிடையில் வைத்து, மெதுவாக அரைத்துத் தின்பதால் அதிக ருசி உண்டாவதோடு பற்களுக்கும் உறுதி ஏற்படும். கொட்டைப் பாக்குச் சீவல் போட்டுக்கொண்டு வெற்றிலை சுண்ணாம்புடன், நன்றாக மென்று தின்பதும் நல்லது. ஆனால் இம்மாதிரி பற்களுக்கு உறுதியுண்டாக்கக் கூடிய பண்டங்களைத் தின்ற பிறகு வாயையும், பல்லிடுக்குக்களையும் நன்றாகக் கொப்புளித்து, சுத்தம்செய்யவேண்டும். புகையிலை போட்டுக்கொள்ளுகிறவர்கள், அதனால் பல் உறுதிப்படுமென்று சொல்லுகிறார்கள். அதன் உறுதி பாக்கின் துவர்ப்பினால் உண்டாகிறதே யொழிய புகையிலையினால் இல்லை யென்பது என் அபிப்பிராயம். வெறும் புகையிலையை மட்டிலும் அடக்கிக் கொள்ளுகிறவர்களுக்குப் பல் உறுதிப்படமாட்டாது. அது மட்டுமல்ல. வெகு வருஷங்களுக்குப் புகையிலை அடக்கி வருபவர்களுக்கு கன்னப்புற்று, தாடைப்புற்று, முதலிய சதைக் கட்டிகள் வளர்ந்து உயிருக்கு ஆபத்தை உண்டுபண்ணுகிறதை நாம் மறந்துவிடக்கூடாது. வெற்றிலை பாக்கு, சுண்ணாம்பிலுள்ள பலவித நன்மைகளை மட்டிலும் பெற்றுக்கொண்டு பற்களை நன்கு காப்பாற்றவேண்டும். பற்கள் முளைப்பதற்கு மட்டிலும் வயது உண்டு. ஆனால் விழுந்து விடுவதற்கு வயது கிடையாது. நன்கு பராமரித்து வந்தால், மனிதனுடைய ஆயுள்காலம் முடியும் வரையில் விழாமலிருக்கக்கூடும். என்ன குறைவான ஆயுள் பற்களுக்கு வைத்துப் பார்த்தாலும், சுமார் அறுபது வயது வரையில் வேலை செய்யும்படி பாதுகாக்கக்கூடும். மனிதனுடைய சுகத்திற்கு இந்த முன்னறிவும், ஒழுக்கமும் தேவை.

# இருளுக்குப்பின்

கே. சுந்தரம்மாள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

நான் சுமாராகப் பாடுவேன், அதனால் நாலு குழந்தைகளை வீட்டில் அழைத்துப்பாட்டுச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். 'கஞ்சிவிட ஆளில்லை. கச்சைகட்ட ஆளுண்டு' என்பதுபோல் என் கொழுந்தன்மார் இருவர் அவ்வூரிலேயே இருந்தனர். வைதிகம் அவர்கள் பிழைப்பு. என்னை அவர்கள் தமையன் இறந்தபின் இருக்கிறாயா என்றுகூடக் கேட்பதில்லை. நான் ஒருநாள் பாட்டுச்சொல்லிக்கொடுக்கும்பொழுது பெரிய கொழுந்தன் வந்து,

'அடி மானங்கெட்டவளே, எங்கள் குடும்பப் பெயரைக் கெடுக்கவா வந்திருக்கிறாய்? அறுதலி முண்டைக்குப்பாட்டென்ன வேண்டியிருக்கு? தேவடியாத்தனமா இது?'என்று கண்டபடி திட்டினான். எனக்கு ஒன்றுமே பதில்பேசத் தோன்றவில்லை. 'இனிமேல் பாடினால் இரவே வீட்டிற்குத் தீவைத்துப் பொசுக்கிவிடுவேன்' என்று சொல்லிவிட்டுப் போனான். அன்றுடன் பாட்டைநிறுத்தினேன். பிறகு ஜீவனம் செட்டிமார் வீட்டில் சமையல் செய்து வைத்துவிட்டு வரத் தொடங்கினேன். மாதம்பத்துப்பதினைந்து கிடைத்து ஏதோ காலக்ஷேபம் செய்யலாமென்று நினைத்தேன். அதற்கும் வந்தது ஆபத்து. தலையில் மயிருடன் செட்டிமார் வீட்டில் சமையல் செய்து அவர்கள் மானத்தை வாங்குகிறேன் என்று திட்டினார்கள். அதையும் நிறுத்தினேன். தலையை எடுப்பது என்பதுமட்டும் எனக்கு முடியவில்லை. அது விஷயத்தில் ஒரு பெரிய போராட்டமே நடத்திப்பார்த்தேன். பெரிய கனபாடி வீட்டிலோ, பணக்கார உத்யோகஸ்தர் வீட்டிலோ, என் போன்ற விதவைகள் நகை நட்டுடன் இருக்கும்பொழுது எனக்குமட்டும் அவ்விதி விலக்காவானேன்? அவர்களும் பெண், நானுந்தான் பெண். விதி யாவருக்கும் ஒன்றாக அமைய, பழக்கம் மாத்திரம் வித்யாசமேன்? என்ற பிடிவாதத்தில் காலம் கழித்தேன்.

ஜீவனம் மிக்க கஷ்டமாகிவிடவே ஒரு பணக்கார வீட்டில் நான் தலையை எடுத்துவிட்டு வந்தால் வேலைக்கு வைத்துக்கொண்டு மாதம் பதினைந்து ரூபாய் தருவதாகச்சொன்னாள் அவ்வீட்டுப் பாட்டியம்மாள். என் தாயாரும் 'நம்ம விதி நன்றாக இல்லை. நமக்கேன் இந்தப் பிடிவாதம். பணமிருந்தால் யாவும் நம் இஷ்டம்போல் நடக்கலாம். வறுமையின் செல்வங்களாகிய நாம் கொடுமைக்குக் கட்டுப்படத்தான் வேண்டும். குழந்தைகள் முன்னுக்குவர நீ எதையும் செய்யத்தான்வேண்டும்' என்றாள்.

என் செல்வங்களின் நன்மைக்காக அக்கொடுமைக்கு இசைந்தேன். அவர்கள் செலவில், என்னை ராமேச்வரம் அழைத்துச் சென்று காரியத்தை முடித்துவர ஏற்பாடு. அப்புண்ணியம் தங்களுடையதாக இருக்கட்டும் என்றாள் பாட்டி. நாங்கள் புறப்பட இன்னும் நான்கு நாள் இருந்தன. எனது அத்தை பெண் ஒருத்தி கடிதம் எழுதினாள். அதில்தான் எனது விதியின் விளையாட்டு ஆரம்பமானது.

'தான் ஓரிடத்தில் சமையல் செய்து போட்டுக்கொண்டிருப்பதாகவும் நம்மைப்போல் அநேகர் இவ்வூரிலிருப்பதால் தலையைப்பற்றிக் கவலையின்றி இருக்கலாம். உனக்கும் சமையல் செய்துபோட இரு இடம் இருக்கின்றன, புறப்பட்டுவா' என்று எழுதினாள்.

பலி பீடத்தில் தலை வைத்த ஆடு வெட்டப்படாமல் விடுதலை பெற்றால் எவ்வளவு ஆனந்தமாக மனமிருக்குமோ அவ்விதமிருந்தது என் நிலைமை. உடனே புறப்படத் துடித்தேன். என் தாய்க்குத் திடீரென வயிற்றுவலி கண்டு பத்துநாள் கஷ்டப்பட்டாள். அவளை விட்டு வரமுடியாமல் அவள் குணமானபின் புறப்படும்பொழுது பதினைந்து நாளைக்குமேலாகிவிட்டது. அவள் இருக்கும்பொழுது என்ன கவலை என்ற தைர்யத்துடன் அவ்வூர் சென்றேன். அவள் சொன்ன வீட்டை விசாரித்துச் சென்றேன். அவள் இல்லை. அவள் குறிப்பிட்ட உத்தியோகஸ்தரே அவ்விடமில்லை. மாற்றலான இடமும் தகவல் தெரியவில்லை.

அவ்வூர் நாலைந்து தெருக்களையுடையது. சுமாரான ஊர். ஏதோ வக்கில்களும் உத்தியோகஸ்தர்களும் இருந்தார்கள். வந்ததோ வந்துவிட்டோம், அவள் இல்லாது போனாலும் நாமாக ஏதேனும் வீட்

டில் சமையலுக்கு ஒப்புக்கொள்ளுவோம் என்று நினைத்தேன், ஆனால் உலகம், வறுமை மக்களுக்குச் சிபார்சு, அறிமுகம் இவைகளில்தான் நடக்கிறது என்பதை அறியவில்லை நான்.

ஒரு சத்திரத்தில் தங்கினேன். அப்புண்ணியவதி மூன்று நாளைக்குச் சட்டமிருந்தாலும், ஒரு நாள்தான் சாப்பாடு போடமுடியும் என்று சொல்லிவிட்டாள். கையிலிருந்த சில்லறையில் ஏதோ, பலகாரமும் காப்பியும், கடலையும் வாங்கித் தின்று இரண்டுநாள் ஓட்டினேன். தண்ணீர் எடுத்துப் பிழைக்கும் மாமி ஒருத்தி எனக்கு அன்னமளித்து இரண்டு மூன்றிடங்களுக்கு அழைத்துச் சென்றாள். ஒருவரும் பிடி கொடுக்கவில்லை. பசியின் கொடுமையிலும் மனிதர்களின் இகழ்ச்சியிலும் தன் மனிதர் என்று இல்லாத நிலைமையிலும் உலகத்தை ஒருவாறு அறியமுடிந்தது. அம் மூன்று நாட்களில் 'தன்னூருக்கு யானை அசலூருக்குப் பூனை' என்பதைத் தெள்ளென அறிந்தேன்.

காபி கிளப்பில் அரைத்துக் கொடுக்கலாம் என்று கேட்டதற்கு 'இப்படிப்பட்ட சிறு பெண்களை கடைக்குள் விட்டால் கடையின் பெயர் கெட்டுவிடும். நாங்கள் ஆண் பிள்ளைகளையே அரைப்பதற்கு ஏற்படுத்தியிருக்கிறோம், இந்த ஸ்திதியில் உன்னை வேலைக்கு எடுக்க முடியாது' என்றார் முதலாளி.

யாரோ ஒரு சைவ முதலி வீட்டில் ஆள் தேவை யென்றார்கள். அங்குச் சென்றேன். 'நீ சிறு பெண்ணாக இருக்கிறாய், நான் அடிக்கடி வெளியில் செல்வேன். அவரை நம்பி உன்னை எவ்விதம் வைத்துக் கொள்வது? நீ இப்படித் தன்னந்தனியாகப் புறப்பட்டு வந்தது மிகவும் தப்பு' என்றாள் எஜமானி. என் குறைகள் அவள் காதில் ஏற்கவில்லை.

ஒரு சம்சாரி பிராமணர் வீட்டிற்குச் சென்றேன். அவ்வீட்டில் என் நிலைமையையுடைய பெண்கள் இருவர் இருந்தார்கள். இந்த இடத்தில் நமக்கு ஆதரவு கிடைக்கும் என எண்ணினேன். ஆனால் 'எங்கள் வீட்டில் பூஜைநைவேத்யமுண்டு, உன்னை வைத்துக் கொண்டால் ஆசாரம் காணாது' என்றாள் குடும்பத் தலைவி பாட்டி.

'அதோ இருக்கும் உங்கள் பெண்களைப் போல் என்னையும் நினைக்கக் கூடாதா?' என்றேன். அவ்வளவுதான் காளி ரூபமெடுத்து விட்டாள்.

'அட, வேலைக்கு வரும் நாய்க்கு வாயைப் பார். அவர்களும் நீயும் ஒன்றாகி விடுவாயோ? புலியைப் பார்த்துப் பூனை சூடிக் கொள்ள முடியுமா?' அவரவர்கள் நிலைமையை அறிந்து நடக்கவேண்டும். அவர்கள் உன்னைப்போல் சோற்றுக்குத் தெருத் தெருவாக, ஊர் ஊராக அலைகிறார்களா? துண்டமாட்டமா தனியா வந்து அலையும் நாய்க்கு எவ்வளவு திமிர்? நிஜமாகப் பிராமணத்தியோ ஏதாவது தட்டுக் கெட்டு வந்தவளோ?' என்று சரமாரியாக அடுக்கினாள். எனக்கு அவ்விடம் நிற்கவோ பதில் பேசவோ முடியவில்லை. துக்கம் பீரிட வெளியில் சென்றேன். மற்றொரு குடும்பத்தில் சென்றேன்.

'எங்களுக்கு ஆள் வேண்டாம்' என்றாள். நான் வெளியில் வரும்பொழுது, 'இது யாரடீ, இப்படித் தன்னந்தனியாக அலைகிறது. எவனோடோ ஓடிவந்து, சந்தியில் நிறுத்திவிட்டுப் போயிருப்பான். பொய்க் காரணம் சொல்லிக்கொண்டு பிழைக்கவழி தேடுகிறதுபோலும். யோக்யமாக இருந்தால் ஓர் ஆதரவுமில்லாமல் ஊர்விட்டு ஊர் வருமா' என்ற வார்த்தைகள் என்னை ஈட்டி கொண்டு குத்துவது போலிருந்தன.

அறிமுகமில்லாமல் ஓரிடம் சென்றால் வார்த்தைக்கு மதிப்போ நடத்தையில் தூய்மையோ கொள்ளமாட்டாது உலகம். நமது ஹ்ருதயத்தைத் திறந்து காட்டமுடியுமானால் கூட ஆதரவு கிடைக்காதுஎன்ற உண்மை தெளிவாயிற்று. எவ்விதமாகமாவது யாசகமாக ஒரு ரூபாய் கிடைத்தால் பட்டினியுடன் ஊர்போய்விடலாம் என்று நினைத்தேன். கொடுஞ் சொற்களால் தாக்குண்ட துக்கத்தை, ஒரு பாழ்வீட்டின் திண்ணையில் உட்கார்ந்து அழுது ஆற்றிக்கொண்டிருந்தேன். நாகரிகமாக உடுத்த ஒருவன்—தெருவழியே போகிறவன்—நின்று என்னைக் கவனித்தான். பிறகு நான் இருக்கும் இடம் நோக்கி வந்தான். 'நமது துன்பத்தைக் கேட்கவே வருகிறான். உண்மையைச் சொல்லிவிட்டு ஊருக்குச் செல்ல உதவி செய்யுமாறு கேட்கலாம்' என்று நினைத்தேன். அதுவரை யாசகம் கேட்டறியா மனம் நடுக்கமுற்றது. ஜீவன்போய் விடாதா எனத் தோன்றினது அந்தச் சமயம்.

'நீ யாரம்மா. ஊருக்குப் புதிதுபோலிருக்கிறது. ஏன் அழுகிறாய்?' என்றான்.

என் விருத்தாந்தத்தைச் சொல்லி, பண உதவியும் கேட்டேன், அப் பாவி சொன்ன பதில் என்ன தெரியுமா?

'அடபாவமே, வருத்தப்படாதே. இந்தத் தெரு முடிந்ததும் முனையில் தனிப்பட்ட வீடுதான் என்னுடையது. வேலைக்காரன் மட்டுமே இருக்கிறான். அவ்விடம் சென்றிடு. சற்று என் வேலையை முடித்துவிட்டு வருகிறேன். நாழியாய்விட்டது. இனி எப்படிப் பஸ்ஸில் போவாய். இரவு என்னுடன் தங்கிவிட்டுக் காலையில் செல்லு. இருபதோ முப்பதோ தருகிறேன்' என்றான்.

சரீரென்றது ஹ்ருதயம். பெண்மையின் தனிமை இவ்வளவு கேவலமா என்று நினைந்து சட்டென அந்த இடத்தைவிட்டு எழுந்து நடந்தேன்.

'குடிக்கக் கூழில்லாவிட்டாலும் ஜம்பத்தைப்பார். மஹா பதிவிரதா தர்மம் காக்கிறாளாம். பிழைக்கத் தெரியாத கழுதை' என்று சொல்லிவிட்டுச் சென்றான் தூர்த்தன்.

இனி மானத்துடன் ஊர்போய்ச் சேர வேண்டும் என்ற பயம்வேறு பிடித்துக் கொண்டது. இந்த லக்ஷணத்தில் மற்றொரு கஷ்டம், டைபாய்டு சுரத்தில் கிடந்து இப்படிச்சிரமிய பிழைத்தேன். தலைகழுத்துடன் தான் தொங்கினது, கட்ட முடியவில்லை. இப்படி நான் செல்லும்பொழுது, பத்துப் பன்னிரண்டு வயதடைந்த சிறுவர் கூட்டம் என்னைப்பார்த்து, 'மாமி பாப் வெட்டிக் கொண்டிருக்காடோய்' என்று சத்தமிட்டார்கள். தலையைக் குனிந்துகொண்டு ஓடுவரைத்தவிர என்ன செய்யமுடியும். கடைசியில் தண்ணீர் எடுக்கும் மாமியிடம் சென்று, 'எப்படியாவது ஒரு ரூபாய் வாங்கிக்கொடுத்தால் நான் ஊர்போய்விடுகிறேன். அரிசி அரைப்பதற்குக் கிடைத்தால் அந்த கூலியைப் பெற்று ஊர் செல்லுகிறேன்' என்றேன்.

'ஏழைகளின் துன்பம் ஏழைகளேதான் அறியமுடியும். இருட்டிவிட்டது. நான் கொடுக்கும் ஆஹாரத்தைச் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள். காலையில் ஏற்பாடு செய்கிறேன்' என்றாள்.

காலையில் பங்களாப்போலிருந்த ஒரு வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள். முன் ஹாலில் முப்பத்தைந்து வயதுடைய ஒரு ஸ்திரீயும், இருபத்திரண்டு வயதுடைய ஒரு பெண்ணும் ஏதோ புஸ்தகங்களை வைத்துப்


மேதாஸ்

# "சுந்தரி எலிக்ஸர்"

ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு

★ சிறந்த டானிக் ★

ஆயுர்வேத முறைப்படி தயார்செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

**K. S. மேதா & Co., மதராஸ்.**

ஹைதராபாத் ஏஜண்டு :—

ஸெண்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,
ஸெகண்ட்ராபாத்.

படித்துக்கொண்டிருந்தார்கள். எங்களைக் கண்டதும்.

'வாருங்கள் மாமி! இது யார்?' என்ருள் சிறியபெண்.

எனது வரலாற்றைச் சொல்லிவிட்டு, 'அம்மா, பாட்டி இருக்கிருர்களா?' என்ருள்.

'உம் உள்ளே இருக்கிருர்கள்' என்ருள்.

'சரி, நீ இப்படி உட்கார்ந்திரு. நான் போய்க் கேட்டுக்கொண்டு வருகிறேன்' என்று என்னைப் பார்த்துச் சொல்லிவிட்டு உள்ளே சென்ருள் மாமி.

'நீங்க ஆதரவில்லாமல் வெளியில் வரக் கூடாது. மேலும், சமையலுக்கு என்று கிளம்பினுல், இந்த வேஷம் கூடாது' என்று சொல்லிவிட்டு ரகசியக் குரலில் 'டீச்சர் இவளைப்போலுள்ளவர்களை நம்பக் கூடாது. எதனுல் இப்படி அலைகிருளோ?' என்ருள்.

'இதைப்பார் கல்யாணி! உன் மனதில் இவ்வார்த்தைகளே உதிக்கக்கூடாது. படித்தபெண் வார்த்தையா இது? ஊன்றிப் பார். தலையெழுத்தானது. உனக்கு, எனக்கு, அவளுக்கு மூன்றுபேருக்கும் ஒரேவிதந் தான். மூவரும் ஒரே நிலைமையிலிருப்பவர் கள்தான். ஆனுல் உனக்குச் செல்வமிருக் கிறது. அழகும் இளமையும் அந்தஸ்தும் உன்னை உயர் நிலைமையில் வைக்கும். மறு விவாகம் செய்துகொள்ள உனக்கு உலகம் இடமளிக்கிறது. உன் காலடியில் நின்று உன்னை ஏற்கத் தவம் கிடக்கிருன் உன் அத் தான் வாசுதேவன். அதனுல் உன் விதி மாற்றி அமைக்கப்படும். வைதவ்யம், வறுமை, இரண்டின் கொடுமையைச் செல் வம் உனக்குக் காட்டவில்லை.

என்னிடம் வித்தை இருப்பதால், வைதவ்யத்தையும் வறுமையையும் சற்று அனுபவித்துத்தேறினுலும், தற்காலம் அவை மறக்கப்பட்டு ஒரு நிம்மதியான வழியை விதி அமைத்தது.

அவளுக்குத் தொழில் இருக்கிறது. ஆனுல் வறுமையின் கீழான நிலைமையும் வைதவ்யமும் சேர்ந்து உலகத்தில் தங்க இடம்கூட இல்லாமல் செய்தது விதி.

இதுதான் நம் மூவருக்குமுள்ள பேதம். காரணம் சமூகமே. பெண்களே பெண் களை இழிவாகக்கருதும் மனப்பான்மை ஒழிந்தால் நமது நாடே க்ஷேமமுறும். சற்று ஆழ்ந்து சிந்தித்துப்பார்த்தால் நிலைமை விளங்காமல் போகாது. கஷ்டம் சுகம் இயற்கையில் அமைவதாயினும் கூடியமட் டும் ஒருவர்க்கொருவர் உதவியினுல் ஏற் படும் நன்மையால் சற்று மாறுதலும் ஆறுத லும் ஏற்படத்தான் செய்யும். அப்படி ஒவ் வொரு பெண்மணியும் சிந்தித்துப்பார்க்க, கல்வி கேள்வி அவசியம். நமது ஹிந்து சமூ கத்தில் பெண்கல்வியை அவ்வளவாகப் பொருட்படுத்தாமல் ஏனோதானோ என் றிருப்பதால், மூடப்பழக்கவழக்கங்களை, ''கொக்கிற்கு ஒன்றே மதி' என்பதுபோல் பிடித்துக்கொண்டு, அசட்டு அகங்காரத் தில் சொல்லும் செய்கையும் அமைந்துவிடு கின்றன. நிச்சயமாக நமது சமூகத்தில் பெண் கல்வி கேள்வி விருத்தியடைந்தால் பெண் கள் சமூகம் முன்னேறும். உலகசுதந்திரம் அதனுல் காப்பாற்ற ஹேதுவாகும். நான் உனக்குச் சொல்லுவது என்னவென்ருல், உன்னுல் உதவிசெய்ய முடியாமல் போனு லும் நொந்தவர் மனம் புண்ணுகும்படியான சொல்லம்புகளை எய்யாமலிருந்தால் அதுவே பரம உபகாரம். அவள் நீ எண்ணுகிறபடி யான மனப்பான்மையுள்ளவளானுல் இப் படிச் சந்தியில் நின்று தவிக்கமாட்டாள். அவள் முகமும் கண்ணும் காட்டும் பரி தாபமே அவள் உள்ளத்தைத் தெள்ளெனக் காட்டுகிறது. உலகமறியாப்பேதை, தன் மனம்போல் யாவர் மனமும் இருக்குமென்ற நம்பிக்கையில் பெண் சமூகத்தில் நுழைந் தாள். எதிர்பாராத துன்பத்திற்கு ஆளா னுள். அதனுல் உலகத்தின் தன்மையை அறிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. உலகில் எந்தவிதமான உண்மைகளையும், கல்வியை யும்விட அனுபவமே வாழ்க்கைக்கு இன்றி யமையாத உதவியாகிறது. இனிமேல் அவ ளும் தைரியமாகச் சமூகத்தில் நுழையும் வழியைக் கண்டுபிடித்துவிடுவாள்' என்ருள்.

அவள் சொற்கள் எனக்கு அமிர்ததாரை யாகவும் ஆச்சர்யமாகவும் தோன்றின. அவளையே பார்த்தவண்ணம் சிலைபோல் நின்றேன்.

'டீச்சர்! மன்னிக்கவேண்டும். இவ்வளவு உண்மை, என் மனதில் இது வரை தெளி வாகவில்லை. இன்று உங்கள் சொற்கள் ஆராயும் சக்தியைக்கொடுத்தன. இனிமேல் இதுவிஷயத்தில் என்னுலான முயற்சியைச் செய்துவருவேன்' என்று சொலலிவிட்டு, 'நான் சுதந்திரம் பெறவில்லை. பாட்டி கேவலமாக நடத்த நினைப்பாள். அதனுல் என்னுலான பொருளுதவி செய்கிறேன். நீங்கள் இவளுக்கு ஏதாவது வழிகாட்டி விடுங்கள்' என்ருள் அப்பெண்.

'அம்மா நான் எப்படியாவது என் தாயிடம் போய்ச் சேர்ந்துவிட்டால் போதும். புறப்படும் பொழுதே, 'நீ சிறுசு, யாரேனும் ஏதேனும் சொல்லுவார்கள் நான் போகிறேன்' என்றாள், வெளியில் சென்று சாமான்கள் வாங்கவேண்டும். கொழுந்தன்மார்கள் ஏசுவார்கள். அதனால் அக்கொடுமையினின்றும் விடுபட்டால் போதுமென்ற நினைப்பில் நான் போகிறேன் என்று வந்தேன். ஆனால் விலங்கைவிட்டுத் தொழுவில் மாட்டிக்கொள்வதுபோல் ஆயிற்று என்கதி' என்றேன் அப்பொழுதிருந்த மன வேதனையில்.

அப்பொழுது அவ்விடம் வந்தார்கள் தண்ணீர்எடுக்கும் மாமியும் வீட்டு எஜமானியும். என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு. உள்ளேதொட்டுச்செய்யாவிட்டாலும், இலை எடுத்துச் சுத்திசெய்து, புடவைதோய்த்து உலர்த்தி இவைகளைச் செய்யச்சொல்லலாமென்றாலும் சிறுபெண்ணாய் இருக்கிறாளே. ஆட்களும் வருவார் போவாரும் உள்ள இடத்தில் இவள் நல்ல பெயர் வாங்கவேண்டுமே. 'அம்மா! நான் சொல்லுகிறேனென்று வருத்தப்படாதே. வயிற்றுக்கொடுமையால் வேலைக்கென்று வெளியில் கிளம்பினால் நீ இப்படி வரக்கூடாது. வைதவ்ய வேஷம் போட்டு விட்டால்தான் நிம்மதியாகக் காலங்கழிக்கலாம்' என்று முடிக்குமுன்,

'பாட்டி, உன் உபதேசமெல்லாம் தேவையில்லை. இஷ்டமிருந்தால் ஏதாவது கொடுத்தனுப்பு. இல்லையென்றால் முடியாது என்று சொல்லி அனுப்பிவிடு' என்றாள் கல்யாணி.

'வரவர காலம் குட்டிச்சுவராகப்போகிறது' என்று சொல்லிவிட்டு அரை ரூபாயைத் தந்துவிட்டு உள்ளே சென்றுவிட்டாள். கல்யாணி இரண்டு ரூபாய் கொடுத்தாள். ஒடுங்கின உயிர் திரும்பினது. தைரியமாக ஊர்போய்விடலாம் என்ற நம்பிக்கை ஆனை பலம் தந்தது.

'மாமி! அவளை எங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று, திண்ணையில் உட்கார்ந்திருக்கும்படி சொல்லுங்கள். நான் வந்து ஓர் ஏற்பாடு செய்கிறேன்' என்றாள் வாத்தியாரம்மா. அவளைத்தான் தெய்வமாக வணங்குகிறேன். அதோபார் அவள் படம் என்று தலைக்குமேல் சுட்டிக்காட்டினாள். ஜானகி நிமிர்ந்து பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டாள் தனக்கும் அவளால் நற்காலம் பிறக்காதா என்ற மன ப்ராந்தியில்.

பிறகு அவள் வரும்வரை திண்ணையில் உட்கார்ந்து எனது நிலைமையை நினைக்கும் பொழுது வாய்விட்டுக்கதறவேண்டும்போல் தோன்றினது. வைர வைடூரியம் பூட்டிக்கொண்டு, பட்டுப்பட்டாக உடுத்திக்கொண்டு, மாடமாளிகையில் வசிக்காவிட்டாலும் மானமாகப் பசியாமல் சாப்பிட்டு, ஏதோ கூடியமட்டும் நல்ல துணி வாங்கி உடுத்தி, வெளியில் தலைகாட்டாமல், மானமாக, ஆனந்தமாக வாழ்ந்தோமே. கோவில் சினிமா முதலிய காட்சிகளுக்குத் தப்பாமல் அழைத்துச் செல்லுவார். அப்பொழுது குழந்தை தூக்க ஆளும், முன்னால் அவரும் நடக்கப்பெருமையாகச் சென்றநாள்போக, நாயினும் கேடுகெட்டு அலைந்து கேளாத வார்த்தைகளெல்லாம் கேட்டு, இப்படித் திண்ணையில் உட்கார்ந்து தயங்கும காலம் வந்ததே என்று நினைத்து அழுதுகொண்டே உட்கார்ந்திருந்தேன்.

நானிருக்குமிடம் ஒரு பெரியம்மா வந்தாள். அவள் வாயினால் வசைபுராணம் கிடைக்குமோ என்று நடுங்கினேன்.

'மூணு நாளா அலையறையே. ஓரிடமும் கிடைக்கவில்லையா?' என்றாள்.

'என் கர்மம் நான் அனுபவித்துத்தானே ஆகவேண்டும். என்னை ஒருவரும் நம்பி ஏற்றுக்கொள்ளமாட்டேனென்கிறார்கள். ஊருக்குப் போய்விடலாமென்றிருக்கிறேன். அப் பாவியை நம்பி வந்தேன். சந்தியில் நிற்கிறேன்' என்றேன்.

'ஐயோ உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. உன் தாயாரைப்போல் என்னை நினை. நல்லதையே சொல்லுகிறேன். பணக்காராள் எதையும் செய்யலாம். நாமெல்லாம் உலகத்தை ஒட்டித்தான் நடக்கவேண்டும். எனக்கும் உன்னைப்போல் ஒரு பெண்ணிருக்கா. இருபது வயதுதான் ஆகிறது. நானும் ஒரு வீட்டில் சமையல் செய்துபோட்டுத்தான் வயிறு வளர்க்கிறேன். அதனால் அந்தப் பெண்ணுக்கு நம்ம ஆசாரப்படி செய்துவிட்டேன். அவளே அம்மா எனக்கென்னத்திற்கு, நாலு பேர் வாயில் விழவேண்டாம் என்று சொல்லிவிட்டா. இப்போ அவளும் ஒரு வீட்டில் வேலைசெய்கிறாள். சாப்பாடுபோக ஆளுக்குப் பத்து ரூபாய் கிடைக்கிறது. பதினைந்து ரூபாயைப்பாங்கியில்கட்டிவிட்டு, சுகமாகத்தான் இருக்கிறோம். நமக்கு நகையும் நட்டும் பாழே போகுதா. நீ இப்படி இருப்பதினால்தான் எல்லோரும் சந்தேகப்படுகிறா. வாஸ்தவமாக உனக்கு ஜ்வரத்தில் தலை இப்படி வளர்ந்திருக்கலாம். ஆனால் உன் விபரம் ஒன்றும் தெரியாத இவ்வூர்க்காரர் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா?

நேற்று அந்தக் கோடி வீட்டில் ஸரஸ்வதி என்பவள் உன்னை வரச்சொன்னாள் பாரு. ஏன் அவள் வேண்டாமென்றாள் தெரியுமா? எங்காத்தில் பெரியவர்கள் இல்லை. இரண்டு குழந்தைகளும் நானும்தான் பரவாயில்லை. எங்காத்தில் வேலைசெய்யட்டும் என்றாள். உடனே பக்கத்து வீட்டு மாமிகளெல்லாம் வந்து, 'அவபுருஷன் செத்து மூணுவருஷம் கூட ஆகலையாம். அவள் தலையைப் பார்த்தால் மறுபடி வளர்க்கிறாப்போல் தோன்றுகிறது. அப்படியானால் அவள் நடத்தை எப்படியிருக்கும். அவள் பார்க்கிறதே நன்றாக இல்லை. ஏதாவது விபரீதம் நேர்ந்துவிட்டால் என்ன செய்வாய். நீ அவளை வேலைக்கு வைத்துக்கொள்ளக்கூடாது' என்று தடுத்துவிட்டார்கள். நாலுபேர்கள் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்காமல் முடியுமா? அவள் மனம் மாறிவிட்டது. மேலும் சில பேர்கள், வேலை செய்யும் வீட்டில் திருடுவதும், மற்றக் காரியங்களும் செய்துவிடுகிறார்கள். ஒருவர் தப்பிநடந்தால் அதே நிலைமையிலுள்ளவர்கள்மீது சந்தேகம் ஏற்படுவது சகஜம்தானே. மனிதர்களின் தன்மையைப் பார்த்தமாத்திரத்தில் அறிந்துகொள்வது என்பது சர்வசாதாரணமல்ல. அப்படிச் சக்தியும் மனமும் பெற்றவர்கள் நூற்றில் பத்துப்பேர் தேறுவதே அரிது. நான் சொன்னபடி செய். மறுமுறை நீ வந்தால் பெண்டுகள் உன்னைப் பூர்ணகும்பம் வைத்து அழைக்கத் தயாராக இருப்பார்கள்' என்றாள்.

நல்ல வேளையாக மற்றவர்களைப்போல் விபசாரி, திருடி என்று தூற்றாமல் இந்த மட்டும் சொன்னாளே என்று சந்தோஷப்பட்டேன். 'மாமி! ஊருக்குப் போனதும் நீங்கள் சொன்னபடி நடக்கிறேன். உங்கள் புத்திமதியை ஒருநாளும் மறவேன்' என்றேன்.

'உன் முகத்தைப்பார்த்தாலே நல்ல விவேகி எனத்தோன்றுகிறது. உன் குழந்தைகள் நன்மைக்காக நீ இதைச் செய்யத்தான்வேண்டும்' என்றாள்.

'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லும் பொழுதே வாத்தியாரம்மா வந்துவிட்டாள், அந்த அம்மாள் அவளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டாள்.

என்னை ஸ்நானம்செய்யச்சொல்லி, தனது புடவையில் ஒன்று கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொன்னாள். சமையலுக்கு அடுப்பை மூட்டப்போனாள். நான் சமையல் செய்வதாகச் சொல்லவே சரியென்றாள். கத்திரிக்காய் கறியும் முருங்கைக்காய்ச் சாம்பாரும் வைத்தேன், இருவரும் சாப்பிட்டோம். 'நன்றாகச் சமையல் செய்கிறாய். ஓரிடத்திற்கு உன்னை அனுப்பலாமென்று நினைக்கிறேன். அதாவது பலஜாதிக் குழந்தைகளுக்குச் சமையல் செய்யவேண்டும். போக முடியுமா?' என்றாள்.

'அம்மா! திருடக்கூடாது. மானத்தை விற்கக்கூடாது. இதைத்தவிர நமது காலத்தைக் கழிக்க எந்தத்தொழிலானாலும் பெண்மையின் தூய்மை மாசுபடாவகையில் செய்தால் குற்றமென்ன? இன்னும் நான்குவருஷம் குழந்தைகளைக் காப்பாற்றிவிட்டேனானால் பிறகு அவர்கள் என்னைக் காப்பாற்றுவார்கள்' என்றேன்.

ஸ்ரீமதி கஸ்தூரி அம்மாள் என்பவர், அதி பால்யத்தில் புருஷனையிழந்தார். பிறந்த இடத்திலும் ஒரு பெண். கோடிக்கணக்கில் சொத்து. புகுந்த இடத்திலும் அவரே வாரசு. அங்கும் லக்ஷக்கணக்கில் ஐவேஜி. அக்காலத்தில் சமூகக்கட்டுப்பாட்டை தைரியத்துடன் எதிர்த்துப் படிக்கலானார். எம். ஏ. எல். டி. பாஸ் பண்ணினதும். பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து படிக்கும் கஷ்டத்தை அனுபவத்தில் கண்டறிந்தபடியினால், பெண்களுக்குத் தனி காலேஜ் ஏற்படுத்தினார் தமது பணத்தில். கவர்மெண்டாரும் உதவிசெய்தார்கள்.

பிறகு விதவாச்ரமம் என்று ஒன்று ஏற்படுத்தினார். அதில் விதவைகள் மாத்திரமே அல்லது நிரந்தரமாகப் புருஷன் கைவிட்டவர்கள் இவர்களுக்கு வயது, அறிவு இவைகளுக்குத் தகுந்தபடி, எட்டாம் வகுப்பு ட்ரைனிங், எஸ். எஸ். எல். ஸி, ட்ரைனிங், தையல், சித்திரம், பாட்டு இவைகள் ஏற்படுத்தி ஹாஸ்டலும் ஏற்படுத்தினார். உபகாரச்சம்பளமும் ஏற்பாடு செய்தார். அதில் S' S. L. C. ட்ரைனிங் பாஸ் செய்துதான் வேலைக்குவந்தேன். படிக்க முடியாத வயது சென்ற அனாதை விதவைகளை, ஹாஸ்டலில் சமைக்கவும், மற்றவேலைகளுக்கும் எடுத்துக் கொண்டு நிறையப் பொருளுதவிசெய்கிறார். சமீபகாலத்தில் பாலாச்ரமம் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார். ஆனால் அனாதைக்குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள், பணமுள்ள தாயற்ற குழந்தைகளை, ஜாதிக்குரிய நர்ஸ்வைத்து தனியிடத்தில் வளர்த்து வரும்படி செய்வார்கள். அனாதைக்குழந்தைகள் மட்டில் பதினைந்து வயது வரை ஜாதிபேதமில்லாமல் சமமாக வளர்க்கப்படுவார்கள். பிறகு, ஒவ்வொருவர் ஜாதிக் குறிப்பும், கொண்டுவந்துவிட்ட கார்டியன் பெயரும்

புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும். அந்த விபரப்படி கல்யாணம் செய்து கொடுப்பார்கள். பதினைந்து வயது முடிந்து விட்டால் ஆண் குழந்தைகள் வெளியில் வேலைக்கு அனுப்பப்படுவார்கள். அதிகம் திறமை பெற்றவர்களைச் சீமை வரை படிக்க அனுப்புவார்கள். பெண்களுக்குப் பதினைந்து வயதுமுடிந்துவிட்டால், அவர்களுக்கு வேறொரு இடத்தில் தனிவிடுதி. ஆண் பிள்ளைகளால் பராமரிப்பு.

அந்த ஆச்ரமத்தில் ஓரிடத்தில் சமைத்துப்போட எடுத்துக்கொள்ளுவார்கள். உன் குழந்தைகளையும் படிக்கவைப்பார்கள்; நீ போகிறாயா?' என்றாள்.

மூன்று நாட்களாக நான்பட்ட துன்பத்திற்கு இச்சொல்லானது பிறவிக்குருடனுக்குத் திடீரெனக் கண்பெற்றது போலிருந்தது. பிற்காலத்தில் என் பிள்ளை கலெக்டராக வந்தபொழுது கூட அதுபோல் ஆனந்தமும் நிம்மதியும் தோன்றவில்லை. என் சந்தோஷம் சொல்லால் விவரிக்க முடியாது. அப்படியே அவள் காலில் விழுந்தேன். 'அம்மா நீதான் பிரத்யக்ஷ தெய்வம், இருளுக்குப்பின் ஒளி நிச்சயம் என்ற வாக்குப் பொய்யல்ல. இந்த உபகாரத்தை ஜன்ம ஜன்மமாக மறக்கமாட்டேன்' என்றேன். வேறு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

கஸ்தூரி அம்மாளுக்கு இப்பொழுது ஐம்பது வயதாகிறது. நூறு வயது இருக்க வேண்டுமென்று யாவரும் பிரார்த்திக்கிறார்கள். பணமிருந்தாலும் இவ்வித உபயோகத்தில் செலவிட மனம் வந்தது பூர்வ ஜன்ம வாஸனு பலன் என்றே நினைக்கவேண்டும். நான் கடிதம் கொடுக்காவிட்டால்கூட உன்னை ஏற்றுக்கொள்ளுவார். இருந்தாலும் அறிந்தவர் மூலம் செல்வது எப்பொழுதும் நன்மை. நான் கடிதம் தருகிறேன். டிக்கட் வாங்கி ரயிலேற்றி விடுகிறேன். ஸ்டேஷனில் இறங்கிக் கஸ்தூரி நிலயத்திற்குப் போகவேண்டுமென்று சொன்னுயானால் எந்தக் குழந்தையும் எந்த வண்டிக்காரனும் கொண்டுவிடுவார்கள். பிறகு அந்த அம்மா உன்னை விசாரித்து ஏற்றுக்கொள்ளுவார்' என்றாள்.

கஸ்தூரி நிலயத்தில் நான் நுழையும் பொழுது காலை எட்டுமணி. முன் ஹாலில் சோபாவில், உயரமும் பருமனும் ஒத்தாற்போல நல்ல சிவந்த நிறமும், காதில்வைரத் தோடு. ஒருகையில் இரண்டு தங்கவளையல், ஒருகையில் கடிகாரம், கழுத்தில் இரண்டு வடம் சங்கிலி, கருஞ்சிகப்புப்பட்டுப்புடவையும் கறுப்பு ரவிக்கையும், பட்டையாக நெற்றியில் விபூதியும் இட்டுக்கொண்டு பேப்பர் படித்துக்கொண்டிருந்தார் கஸ்தூரி அம்மாள். தலைகரேலென்றிருந்தது. என்னைக்கண்டதும் பேப்பரைக் கீழே வைத்துவிட்டு, 'வா அம்மா! இப்படி உட்கார்' என்றார். அந்தக் குரலின் இனிமையும் அன்பும் என்னைப் பரவசப் படுத்தின. கடிதத்தைக்கொடுத்தேன். படித்ததும், 'நல்ல காலம் அனசூயா கண்ணில் தென்பட்டாய். இரண்டு நாள் இவ்விடம் இருந்து சிரமபரிகாரம் செய்துகொண்டு, குழந்தைகளையும் உன்தாயாரையும் போய் அழைத்துவந்துவிடு. பிறகு உனக்குரிய வேலையைத்தருகிறேன்' என்றாள்.

நான் அவர்களை அழைக்கச் சென்றபொழுது எனது அத்தைபெண்ணும் அவ்விடமிருந்தாள். முன்னுலெல்லாம் அவளைத் திட்டினேன். இப்பொழுது, அவள் அன்று இல்லாது போனதினால் தானே நமக்கு இந்த நன்மை ஏற்பட்டது. இருந்தால் நாமும் யார் வீட்டிலாவது கிடக்க வேண்டியது தானே என்று நினைத்து அவளையும் ஆச்ரமத்திற்குக் கூட்டி வந்தேன்.

அதில் புகுந்து வேலைசெய்யத் தொடங்கினதும் அது ஆனந்த உலகமாகத் தோன்றினது. ஆச்ரமத்தில் மிக்க நேர்த்தியான ஏற்பாடு. நமது ஜாதி ஆசாரத்திற்குப் பங்கமே கிடையாது. அதில் வேலைசெய்பவர்களுக்கு அவ்விடத்திலேயே வீடு. நான் ஒரு பகுதிக்குச் சமையல் செய்ய ஏற்றுக்கொண்டேன். குழந்தைகள் பிரிவிற்கே, ஹிந்து மதத்தினருக்கே அதில் இடம்உண்டு. குழந்தைகள், பெண்கள் முதலியவர்களைத் தனித்தனிப் பிரிவாக நடத்தினுர்கள்; அதனுல் பிராமண வேலைக்காரர்கள் எங்கள் வேலையைச் செய்து முடித்துவிட்டு எங்களுக்காகத்தனிப்பட நாளைக்கு ஒருவர் என்ற முறைபோட்டுச் சமைத்துச் சாப்பிடுவோம். மற்ற ஜாதியினருக்கும் அப்படியே. எங்களுக்கென்று தனிவிடுதி. வரிசையாக அறைகளும் சுற்றும் வராந்தாவும் உண்டு. வேலையில்லாதசமயங்களில் நமது அறையில் உட்கார்ந்து கொள்ளலாம். கேள்வி கிடையாது. ஹரிஜன ஸேவை தனியானது. அவர்களுக்கும் பள்ளிக்கூடமுண்டு. இஷ்டப்பட்டவர்கள் அவர்களுக்குச் சகல உதவியும் செய்யலாம்.

நான் வேலை நேரம்போக மற்றச் சமயங்களில் தையல் உபாத்தியாயரிடம் துணிகள் வெட்ட, தைக்கப் பழகிக்கொண்டேன். பிறகு எனக்கு மிஷின்கொடுத்துக் குழந்தை

களுக்குச்சட்டை, கவுன், பாவாடை தைத்துக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தாள். பணமும் சேர்ந்தது, சுகமும் கிடைத்தது. என் அத்தை பெண்ணும் என்னைப்போல் வேலை செய்தாள். என் அம்மா அப்பளம் வடம் முதலியவைகள் செய்வாள். குழந்தைகள் கவலையின்றிப் படித்துவந்தார்கள்.

பெரிய பையன் எஸ். எஸ். எல். ஸி. படிக்கும்பொழுது, ஆச்ரமத்தின் வருஷாந்தரக் கொண்டாட்டத்திற்காக நடத்திய நாடகத்தில் இரண்டு பிள்ளைகளும் நடித்தார்கள். சின்னவனுக்கு நல்லசரீரம். நன்ருய்ப் பாடுவான். கொண்டாட்டத்திற்கு வந்த சினிமா டைரக்டர், சின்னவனின் நடிப்பையும் பாட்டையும் மெச்சி அவனைப்பற்றி விசாரித்தார். அவனைப் படிக்கவும் வைத்து, சினிமாவிலும் நடித்துப் பேரும் பொருளும் கைகூடச் செய்வதாகச் சொன்னார். 'சினிமாவில் போனுல் கெட்டு விடுவான்' என்று பயந்து முதலில் நான் சம்மதிக்கவில்லை. பிறகு அவர் சொன்ன சமாதானத்தில் ஒப்புக்கொண்டேன். இப்பொழுது உலகம் போற்றும் சினிமா நடிகன் ஸ்ரீதரனின் தாயார் நான். என் குழந்தை பால்யத்தில் பட்டகஷ்டதினுலோ பூர்வ ஜன்ம புண்யத்தினுலோ, நமது ஆசாரங்கள் வழுவாமல், ஏகபத்தினி விரதனுக இது வரை நடந்துவருகிருன். உலகமே அதைப் பற்றிக்கொண்டாடுகிறது.

பெரிய பிள்ளை இராஜதானிக்கே முதலாவதாகத்தேறினதால் கவர்மெண்டாரும் கஸ்தூரி அம்மாளும் சேர்ந்து சீமைவரை சென்று படிக்க உதவி செய்தார்கள். அவனும் கலெக்டராக வந்து எட்டு வருஷங்கள் ஆகின்றன. எனக்கு ஆச்ரமத்தை விட்டு வரமனமில்லை. ஆனுல் குழந்தைகளுடன் தான் இருக்கவேண்டுமென்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டார்கள். என்னுடைய ஆயுளில் இதுவரை பட்ட இன்ப துன்பங்களில் திக்குத் தெரியாத அவ்வூரில், மூன்று நாட்கள் அலைந்ததும், கேட்ட இழிவான சொற்களும் பசுமரத்தாணிபோல் என் மனதில் பதிந்துவிட்டன. கனவிலும் நனவிலும் மறவாமலிருப்பதினுல் கஷ்டப்படுகிறவர்கள் என்ருல் என்னுலான உதவியைச் செய்ய நான்பின் வாங்குவதில்லை. ஏற்றத்தாழ்வு பார்க்கும் புத்தியையும் ஈசன் கொடுக்கவில்லை. அதற்காக நான் செலவிடும் பணத்திற்காக என் குழந்தைகள் மனஞ்சலிப்பதில்லை.

கஸ்தூரிஅம்மாளுக்கு வயது எழுபதிற்கு மேலானுலும், ஐம்பது வயதுதான் மதிக்கலாம். அவ்வளவு ஆரோக்யமாக இருக்கிருர்கள். இதுவரை என்னை அண்டினவர்களை ஆச்ரமத்திற்கும் அனுப்புவேன். நான் செய்யக் கூடியதையும் செய்வேன்.

ஆச்ரமம் பலவிதத்திலும் விருத்தியடைந்திருக்கின்றது. அந்த இடமே தனி ஊராக அமைந்துவிட்டது. எனக்கு இரண்டு ரூபாய் கொடுத்த கல்யாணி, டாக்டர் தம்பதிகளாக, ஆச்ரமத்திற்கு இலவச வைத்திய உதவி செய்து வருகிருள். அன்று என்னை இகழ்ந்த சிலர் சமீபத்தில் என்னைப்பார்த்து, புகழ் வாக்யம் கூறிச் சென்ருர்கள்.

நீ, நான் நின்றுதவித்த அதே நிலைமையில் வந்ததால் உன்னைக்காப்பாற்றும்பொறுப்பு முழுவதும் நானே ஏற்றுக் கொள்ளுகிறேன். உனது குழந்தை முன்னுக்கு வருவதற்குள் என் ஆயுள் முடியுமானுல் ஆச்ரமத்தில் ஒப்புவித்துவிட்டுச் செல்லுகிறேன். அதிக அந்தகாரம் தோன்றினுல் சமீபத்தில் வெளிச்சம் ஏற்படுவது நிச்சயம். சாதாரணமாக உலகில், விடியற்காலை பொழுது புலரக் கொஞ்ச நாழிகைக்குமுன் ஒரே இருட்டாகத்தோன்றும். அதை நம்மவர்கள் 'குமரி இருள்' என்று சொல்லுவார்கள். அது ஏற்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் பொழுது புலர்ந்து விடும். மனிதர்களின் இன்பதுன்பங்களின் போக்கைக்காட்டவே ஈசன் குமரி இருளை ஏற்படுத்தினுர் என்று நான்நினைப்பதுண்டு.

உனது தரித்திர அந்தகாரம் நீங்கி விட்டது. இனி வாழ்வின் ஒளியை ஒருசிறிது காணலாம், இருளுக்குப்பின் வெளிச்சம் என்பது உண்மை. நானே அதற்கு உதாரணம், கவலையைவிடு'' என்ருள்.

'அம்மா! நீங்கள் சொல்வது உண்மையான விஷயமே. மூன்று நாட்களாக நான் பட்ட துன்பத்திற்கும், இன்று உங்களைக் கண்டதும், எனது வாழ்க்கையிலே, நான் நினைக்கக்கூட முடியாத ஓர் ஒளியைக் கண்டதால் இருளுக்குப்பின்ஒளி நிச்சயம் என்பது பொய்யாகுமா!' என்ருள் ஜானகி.

# "ரேஷன் டின்னர்"

டாக்டர். வே. ராகவன்

"முகூர்த்தம்.........மணி", "தங்கள் அன்பார்ந்த வரவை எதிர்பார்க்கும்............". "தங்கள் ரேஷன்களைத் தயவுசெய்து முன்னதாகவே அனுப்பிவிடவும்" என்ற ஸம்பிரதாயம் ஏற்படுவதற்கு முன். ஸாமான்கள் குதிரைக் கொம்பாயிருந்த ஸமயம். பணம் இருந்தவரும் இல்லாதவரும் ஒரே மாதிரி கஷ்டப்பட்ட காலம். தஞ்சையில் மிராசு இருந்தும் 'பர்மிட்' வராமல் பலவர்ணங்கொண்ட பெஜவாடா தான்யத்தை உண்டுவந்த காலம். வெல்லத்தைக் கரைத்துக் காப்பி குடித்த காலம். கரிச்சமயல் காலம். கறியில்லாச்சமையல்காலம். பருப்புவேகாத காலம். சர்க்கரை கிடைத்தாலும் தித்திக்காத காலம். உப்புக்குக் கறிப்பு போதாத காலம்.........

சண்டையின், அதிர்ச்சி வீட்டிற்குள்ளெல்லாம் தோன்றியிருந்த காலம். எங்குமே பொருத்தக்குறைவான காலம்.........

ஆனால் கல்யாணங்கள் மட்டும் குறையாத காலம்.........

ஸ்ரீநிவாஸய்யர் மயிலையில் ப்ரபல ஸம்ப்ரதாயக்காரர். அவர் பெண்ணுக்குப் பெரிய இடமாகப் பல வருஷங்களாய்ப் பார்த்துக்கொன்டிருந்து, கடைசியாய் யுத்த காலத்தில் சாமான்களில்லா நெருக்கடிக்கிடையே விவாஹத்தைத் திடீரென நிச்சயித்து அதிசீக்கிரமாய் நடத்தும்படி ஆகிவிட்டது. என்ன செய்வார் பாவம்! பணமிருந்தென்ன? பார்க்காதவரை எல்லாம் பார்த்து, கைதூக்கி, இளித்து, செல்லாத வழிகளிலும் நேரங்களிலும் சென்று அவச்யமான பண்டங்களில் சிலவற்றிற்கு ஒன்றிற்கு நூறு வரைக்கும் கொடுத்து வாங்கினார்.' கிராம ஸம்பாவனை', 'ஆசாரிய ஸம்பாவனை' என்பதுபோல் 'யுத்த ஸம்பாவனை' யாக 'வார்பண்டு'க்குத் திரவியதானஞ்செய்தார். "ஏ. ஆர். பி.யின் உபயோகம்" என்று தம் 'டிவிஷனில்' அவர் ஒரு பிரசங்கம் செய்திருந்ததின் மூலம் டிவிஷனல் வார்டனைக் கொஞ்சம் கையில் போட்டுக்கொண்டிருந்தார். வாசற்பந்தலில் பெரிதாய் 'வி' (V for Victory) ஒன்றைப் போட்டு 'பிளாக் ஔட்' தண்டனை வராமல் பார்த்துக்கொண்டார். செக்குக் (cheque) களை, குழந்தைகள் புத்தகங்களைக் கிழித்துத் தள்ளுவதுபோல், கிழித்தெறிந்து ஜவுளி, வெள்ளி வகையராக்களை வாங்கியது அவருக்கு அவ்வளவு சிரமமாகத்தோன்றவில்லை; சில்லறைச் சாமான்களுக்கு அவர் தவித்த தவிப்பு அவ்வளவு. 'நீங்க ஒண்ணும் கவலைப்படாதங்கோனா; அதான் எங்கிட்ட ஒப்பிச்சுட்டேளே; பின்ன ஏன் 'வெரகு, வெரகு'ன்னு ஜபம் பண்ரேள்?" என்று விறகுப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட வீரன் ஒருவனை நம்பி மோசம் போனார். கல்யாண சாமான்களுக்கு ஜாப்தா போட ஆரம்பிக்கும்போதே முதன் முதலில் 'மஞ்சள், குங்குமம்' என்று கை எழுதினாலும், யஜமானி அம்மாளின் மனது விறகில்போய் நின்றது, ஆகையால் அகத்துக்காரர் செய்யப் போகும் ஏற்பாடு எப்படியாவதிருக்கட்டும், நம் ஏற்பாட்டை நாம் செய்துவைப்போம் என்று அந்த அம்மாள் நல்ல வேளையாய், தோட்டத்திலிருந்த கொருக்காப்பள்ளி, அத்தி போன்ற இரண்டு மூன்று பொந்து விழுந்துபோன மரங்களை வெட்டிக் காயப்போட்டிருந்தாள்.

*   *   *

"இந்தா, ஒன்னைத்தானே. இன்னி ராத்திரி எனக்கு ஆத்துலே சாப்பாடு இல்லே."

"நிச்சயம் சொல்லிடுங்கோ. ஒவ்வொரு தரமும் இப்படித்தான் சொல்ரேள். திரும்பி அகாலத்துலே வந்து எழுப்பி, மோருஞ் சாதமாவது இருக்கா, இல்லாட்டா திங்கரத்துக்கு ஏதாவது இருக்காங்கரேள். எனக்கா, ராத்திரிவேளையிலே இப்படி கேக்ராரேனு அங்கலாப்பா இருக்கு. எப்பவும் போல இன்னிக்கும் வெருமன திரும்பி வந்துடுவேள்னு வச்சுண்டு இத்தனை நீர்க்க மோருஞ்சாதம் வச்சுருக்கேன்; சாப்பிட்டு வந்தூட்டாப்போரது, கார்த்தாலே வேலைக்காரிக்குப் போட்டுடரேன்."

"என்ன இப்படி சொல்றயே, ஸ்ரீநிவாஸ அய்யர் நமக்கு ரொம்ப வேண்டியவர் இல்லயோ? பாக்கி பேராத்துலே கல்யாண மாட்டமாவா, இவாத்து கல்யாணமும்?"

"என்னத்துக்குனா இந்த தர்மஸங்கடம்? முன்னெல்லாம் 'டின்னர்'னு ஒரு கார்டை

கல்யாணக் கடுதாசோட வச்சூடுவா; எல்லாம் சரியா இருக்கும். இப்போ ஒவ்வொத்தர் சாமானுக்கு படர பாட்டுலே, ஒத்தராத்துக்கு சாப்பாட்டுக்குனு போரதே தப்பு."

"இதுவரைக்கும் டின்னருக்குப் போய் ஏமாந்துாட்டு வந்த மாதிரி இன்னி ராத்திரி ஆகாது. நீ ஒண்ணும் கவலைப்படாதே. நான் ஒண்ணு, ராமய்யர் ஒண்ணு, இரண்டு பேரும் ஸ்ரீநிவாஸய்யருக்கு ரொம்ப வேண்டியவா. பந்தயம் வாணு வச்சுக்கோ. இன்னிக்கு நீ எனக்காக ஒண்ணும் வச்சுருக்க வேண்டாம். பாதாங்கீர் பண்ணிருப்பா. நீ பாலைக்கூட எனக்கு வச்சுருக்க வேண்டாம், ஒரைகுத்திடு."

"நிச்சயம்தானு? அப்படியே பிடிவாதமா செஞ்சூடுவேன்?"

"செஞ்சூடுங்கரேனே?"

"ஸரி"

இப்படி தர்மபத்தினி விசாலாக்ஷியுடன் சபதஞ்செய்துகொண்டு சுப்பிரமணிய அய்யர் கல்யாணச் சாப்பாட்டிற்குப் புறப்பட்டார். மாலை 7-மணி இருக்கும். கால்நடையாய் நடந்து, வழியே தம் நண்பர் வீட்டிற்கு வந்து, அவருடன் காரில் ஏறிக்கொண்டு போனுர்.

"இன்னிக்கு ஆத்துலே பந்தயம் போட்டுண்டு வந்திருக்கேன். எப்பவும் போல வயத்தைக் காயப்போட்டுண்டு திரும்பிவந்து அகாலத்துலே ஏதாவது இருக்கானு கேப்பேளே என்று பெரளி செஞ்சாள்."

"நம்ப ஆத்துலேயும் அப்படியேதான் சொன்னு. இன்னிக்கு அதுமாதிரி நடக்காது. ஒழிச்சுட்டு படுத்தூடுன்னுகூட சொல்லிவிட்டு வந்துட்டேன்."

இந்தமாதிரி பேசிக்கொண்டு நண்பர் இருவரும் ஸ்ரீநிவாஸய்யர் மணப்பந்தலுக்கு வந்தனர்.

கச்சேரி நடந்துகொண்டிருந்தது. சினேகிதர்கள் வருவதும் போவதுமாயிருந்தது. சிலர் தேங்காய்வசூல் செய்துகொண்டு தாமே விரைவாய்ப் போய்விட்டனர். சிலர் சிறிதுநேரம் உட்கார்ந்து பேசிவிட்டு, நடு நடுவே கொஞ்சம் பாட்டையும் கேட்டாற்போல் கேட்டுவிட்டுப், போய்ச்சேர்ந்தனர். வந்தவரைப் பந்தலோடு உபசாரம் செய்து அனுப்பிவிடுவது என்று திட்டம். அதை இங்கிதம் தெரிந்தவர் ஊகித்துக்கொள்ளட்டும்என்று தேங்காய்ப்பைகளை ஏராளமாய்ப் பந்தலடியிலே குவித்து வைத்து, நாற்காலியின் சிரமத்தாலோ, வேறுநண்பருடன் சேர்ந்து பேசுவதற்காகவோ எழுந்திருப்போருக்கும் உடனே வழங்கிவந்தார்கள். மணி 8-30 ஆனதுமே தர்மஸங்கடவேளை ஆரம்பமாயிற்று. விறகு விஷயத்தில்தாம் மோசம் போனதையும், தோட்ட மரங்களை வெட்டிவைத்திருந்த தம் மனைவியின் முன்புத்தியையும் அய்யர் பலரிடம் சொன்னுர்; அதே மிகுதி இருந்தவரில் பலரைக்கிளப்பிவிட்டது. ஸம்ஞையாய் இங்கொருவர், அங்கொருவர் என்று, ஏதோ தமிழ்ப்பாட்டு ஆரம்பித்ததும் பிடிக்காதவர்போல் எழுந்திருந்து சிலர் ரகஸ்யமாய்க் காரியத்தைப் பார்த்துக்கொண்டுவந்து வெற்றிலை போட்டுக் கொண்டனர். வீட்டுக்காரர் பாவம், ஒருவரையும் நெருங்கிப் பேச்சுக் கொடுக்காமல் பட்டதும் படாததுமாயிருந்தார். நம் தோழரிருவரும் ஸ்ரீநிவாஸய்யர் வீட்டிலேயே டின்னர் சாப்பிட்டு விடுவது என்று தீர்மானித்து, தம் தீர்மானத்தைக் காட்ட, நாழி கழித்து வந்ததுமன்றி, நெற்றியில் விபூதியும் தரித்துக்கொண்டு வந்திருந்தனர். இவ்விருவர் பக்கமாய் அய்யர் வரும்போதெல்லாம், இருவருக்கும் சிறிது மனவெழுச்சி ஏற்படும்; ஆனல் ஊமையாய் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு நகர்ந்துவிடுவார். கொஞ்சம் நாழிகை ஆனதும் அய்யர் பந்தலிலேயே தென்படவில்லை. கச்சேரியைக் காரணமாகவே நீட்டிவிட்டிருந்தனர். சுப்பிரமணிய அய்யரையும் ராமய்யரையும் தீர்மானம் நாற்காலியில் அழுத்தி உட்காரவைத்தது; மானமோ எழுப்பிக்கொண்டிருந்தது; தாம் சபதஞ்செய்து கொடுத்துவிட்டு வந்த அகமுடையாளின் நினைவு திடீரென எழுந்து நண்பர் இருவரையும் அவமானத்திற்கு ஆளாக்கிற்று. பல்லவி, சில்லறைகள் ஆகி, முடிவில்லா ராகமாலிகை ஒன்று போய்க்கொண்டே இருந்தது. ஸரி, இனி இங்கே தங்குவது விகாரம் என்று இருவரும் எழுந்து வெளியே வந்தனர்.

"என்ன! ஆச்சரியம்! ராமய்யரே! ரொம்ப வேண்டிய கோஷ்டிலேந்து நம்மை விலக்கிவிட்டாரே ஸ்ரீநிவாஸய்யர்!"

"இல்லே, சுப்பிரமணிய அய்யர், இந்த தர்மஸங்கடமானகாலத்தை வச்சுண்டு ஸ்னேகத்தைப் பரீக்ஷை செய்யக்கூடாது என்ன பண்ணுவார் பாவம்!"

"ஏன்? ஸம்ஞையாய் சிலபேரை உள்ளே அனுப்பிச்சதை நீர் பார்க்கல்ல போல இருக்கு."

"பாத்தேன். அவாள்ளாம் ஓரவும், அரிசி கொடுத்தவரும், சர்க்கரை கொடுத்தவருமா இருப்பா."

"அது எப்படியாவது போகட்டும், வெளியில் வந்தாச்சு. சாப்படாம வீட்டுக்குப் போக முடியாது. ஆம்படயாளுக்குத் தெரிஞ்சா, அவமானம், நாக்கைப்புடிங்கிண்டு செத்துப்போயிடனம்னு தோணும்."

"ஆமாம்; என்ன பண்ணுவம் இப்போ? ஒக்காருங்க கார்லே. எங்க அம்மங்கா ஒத்தி மௌப்ரேஸ் ரோட்லே இருக்கா. அங்கே கொஞ்சம் ஸ்வாதீனம் உண்டு. போய் பார்க்கலாம்,"

அம்மாங்க வீடு தாளிட்டு, ஒரே அந்தகாரமாய் இருந்தது. நண்பர் இருவரும் காரை விட்டுக்கொண்டு நகர்ந்தனர். திடீரென சுப்பிரமணிய அய்யருக்கு ஒரு எண்ணம் தோன்றிற்று. மவுண்ட் ரோட்டில் இரானி ஹோட்டல் வெகு நாழிகை இரவில் திறந்திருக்கும். அங்கு சென்று பிஸ்கட், கேக், கிரீம், ஸிரப் இவைகளைச் சாப்பிட்டு விடலாம். ஒரு 'சேன்ஜ்' (change) இருக்கட்டும் என்று யோசனை சொன்னார். பையில் 'சேன்ஜ்' (சில்லறை) இல்லாமல் கிளம்பியவர், யோசனை மட்டும் விரிவாய்ச் செய்துவிட்டார்.

"என்ன நினைக்கரேள்; பையிலே எதாவது இருக்கா?"

"அதுவும் கவனிக்கவேண்டிய விஷயந்தான். ஆனால், அதைவிடக் கவனிக்கவேண்டிய விஷயம் கார்லே பெட்ரோல். ஸ்ரீனிவாஸய்யர் வீடு வரைக்கும் தானேன்னு சும்மா வந்துட்டேன். மவுண்ட் ரோட் வரைக்கும் தாளாது. கையிலே கூபனும் கிடையாது."

"தட்டிண்டு போய்ப் பார்க்கலாம்."

சுப்பிரமணிய அய்யர் நிர்ப்பந்திக்க, ராமய்யர் காரைவிட்டார். ராயப்பேட்டை தாண்டியதும் கார் மக்கர் செய்து நின்றுவிட்டது. வழியில் காரை எங்கே விடுவது? அகால மிருத்யுக்களான மிலிடரி லாரிகள் ஓடிக்கொண்டிருக்கும் பாதை. சாப்பாடோ, இல்லையோ, காரை வீட்டிற்குப் பத்திரமாய்க் கொண்டுபோய்ச் சேர்த்தால் போதுமென்று ராமய்யருக்குத் தோன்றிவிட்டது. "வாரும், குளிர்ந்த ராக்காலம்; நடந்து ஆத்துக்குப் போவோம்; கையிலே இருக்கற பணத்துக்கு ரிக்ஷாக்காரங்களைக் கூப்புட்டுக் காரைத் தள்ளிண்டு வரச் சொல்லலாம்" என்றார். தண்ணியில் மிதந்து கொண்டு நிசாசரர்களாய் எங்கெல்லாமோ திரியும் ஸோல்ஜர்களை எத்திக்கொண்டு மாஸக் கூலியை ஒரு ராத்திரியிலேயே ரிக்ஷாக்காரர் ஸம்பாதிக்கும் காலம்; ஒன்றிரண்டிற்குக் காரைத்தள்ளவா அவர்கள் வருவார்கள்? ஏதோ நல்ல வார்த்தைகள் சொல்லி உறங்கிப்போன இரண்டு வெத்து ஆட்களை எழுப்பி, காரைத் தள்ளிக் கொண்டுவர ஏற்பாடு செய்தனர். தாமும் இரு முனையிலும் ஒரு கை கொடுத்து, பேசிக் கொண்டே வந்தனர்.

"சுப்பிரமணிய அய்யர்! நால்லே ரண்டுலே பட்டினி கிடந்து பழக்கிக்கணும்! அதான் பழய காலத்துலே உபவாஸம்னு வச்சுருந்தா. இப்படி நேந்து போயிட்டா தவித்துப் போரோம் பாருங்கோ, அது கூடாது."

"ராமய்யரே! சாப்பாட்டில்லேன்னு சாப்படரேன்னு நினைச்சுண்டு இருக்கேளா என்ன? அந்த எண்ணத்தை அடியோடே விட்டுடுங்கோ. எனக்கு இன்னிக்கு ஒரே தீர்மானம். டின்னர் இல்லாம ஓட்டின

மனித சமூகத்திற்கென நூதன ஆராய்ச்சி

## மேதாவின்

# ஈரல் கட்டி நிவாரணி

நீண்ட ஆராய்ச்சியின் பயனாக இப் புதிய சிகிச்சை முறையைக் கண்டு பிடித்துள்ளோம். ஈரல் கட்டியைப் போக்கடிக்க கைகண்ட மருந்து.

குழந்தைகள் வியாதியைக் குறித்து கவலைப்படாதீர்கள்.

மேதாவின் ஔஷதம் வைத்திய உலகில் ஓர் புரட்சி உண்டுபண்ணி விட்டது.

**கே. எ. மேதாஸ் & கோ.,**

மதராஸ்

வயத்தோடே வருவேன்னு ஆம்படயாள் சொன்னு, அதுக்காக இன்னிராத்திரி பட்டினி கிடக்கரது இல்லே. எதையாவது சாப்புட்டுத்தான் தீர்ரது என்று ஒரே வீம்பு எனக்கு.''

''வீம்பு கடக்கட்டும், ஏதாவது ஆப்படணமே! 'பிளாக் ஔட்!' ஞலே இப்ப 'பங்கு' எல்லாங்கூட சிக்கரமே மூடிவிடரான்.''

காரை ஒரு வழியாய் ராமய்யர் வீட்டிற்குத் தள்ளிக் கொண்டுவந்து விட்டனர். ராமய்யர் ''ஸரி, நீர் போம்; நான் அவ்வளவு வீம்புக்காரன் இல்லே; ஓங்கபாடு; நான் சாப்புட்டேனே, இல்லயோ, கார்த்தாலே ஆத்துக்காரி கேட்டாள்ளு, சமயல் வரிசயைக் கூட ஏதாவது ஒப்பிச்சுடுவேன்'' என்று சுப்பிரமணிய அய்யரிடம் சொல்லிவிட்டு, மெள்ள வேலைக்காரனை எழுப்பி, தம் அறைக்குள் சென்று உறங்கிவிட்டார்.

சுப்பிரமணிய அய்யருக்கு வீம்பு ஒரு பக்கம், நடை ஒரு பக்கம், காரைத் தள்ளியது ஒரு பக்கம், எல்லாமாக ஒரே கடும் பசி. வந்தார் வீட்டிற்கு. வாசற் பக்கமாய் மாடியிலுள்ள தம் ஆபீஸ் ரூமுக்குத் தனிப் படிக்கட்டு உண்டு; அதன் தனிச் சாவியும் அவரிடமே இருக்கும். மெள்ளத் திறந்து கொண்டு மேலே சென்ருர். 'டார்ச் லைட்' எடுத்துக்கொண்டார். மனைவியும் குழந்தைகளும் தூங்கிக்கொண்டிருந்தனர். சந்தடி செய்யாமல் அடிமேல் அடிவைத்துக் கொண்டு கீழே வந்தார். ஏதாவது குழந்தைகளுக்குச் செய்த பக்ஷணம், மிந்திரிப் பருப்பு, நிலக்கடலை, பழம், இல்லை-வேலைக்காரிக்கு வைத்திருக்கும் பழையதையாவது பிழிந்து இத்தனை மோரைவிட்டுக் கரைத்துக் குடித்துவிடுகிறது என்று எண்ணினுர். பக்ஷணத்திற்காக அலமாரியைத் திறந்து, பித்தளை டப்பிகளை எடுத்தெடுத்துத் திறந்து பார்த்தார். ஒரு டப்பி கனத்தது; மூடியும் திறக்க முடியாமல் கெட்டியாய் இருந்தது; முக்கினுர்; திறக்கும் சிரமம் அதிகமாக அதிகமாக அதில் ஏதோ தின்பண்டம் இருந்தே தீரும் என்ற நம்பிக்கை அவருக்கு உறுதியாயிற்று. பெரு முக்குமுக்கினுர்; டப்பி வழுக்கிப் படீரென்று விழுந்தது! வந்தது மோசம்! எந்தச் சப்தம் கூடாதென்று முயன்ருரோ அதே நேரிட்டதும் மனதில் ஒரு அதைரியமும் படபடப்பும் வந்துவிட்டன; நகர்ந்தார், காலடியில் பரப்பியிருக்கும் மற்ற டப்பிகளின்மேல் விழுந்தார். சாமான்கள் சிதறுண்டன. மிளகாய்ப்பொடி சாமானும் கொஞ்சம் பறந்து அவர் கண்களில் விழுந்தது.

மாடியில் திடீரென மனைவி எழுந்திருந்து திருடன் திருடன் என்று கூக்குரலிட்டு ஓடிப்போய் வெளிப்பக்கமாயுள்ள மாடிப்படிக் கதவைத்திறந்தாள். அண்டை வீட்டுக்காரர் குவிந்து போனுர்கள். மின்சார விளக்குக்கள் எல்லாவற்றையும் போட்டுக்கொண்டு ''பிடிபட்டான், பிடிபட்டான்'' என்று கர்ஜித்துக்கொண்டு, பின் கட்டு மாடிப்படி வழியாய் இறங்கி வந்தனர். மனைவியும் பயந்தவளாய்ப் பின்னுல் வந்து கொண்டிருந்தாள்.

சுப்பிரமணிய அய்யருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ''அடபாபமே! இப்படியா நேரவேண்டும்! யார் மூஞ்சியில் முழித்தேனே தெரியல்லயே'' என்று நொந்து போனுர். ''அட. அப்பா! ஒத்துருமில்லடா, சும்மா இருங்கடா, நான்தான்டா, சுப்பிரமணிய அய்யர்'' என்று சொல்லலாமே, அது சொல்லத் தோன்றவில்லை. தமக்கேற்பட்ட அவஸ்தையின் இழிவை நினைத்துத் திகைத்து வாயிழந்தார்.

* * *

இரண்டு நாட்களானதும் சுப்பிரமணிய அய்யருக்கு ஜ்வரம் தணிந்தது. வைத்தியர் ''ஷாக்'' (Shock) என்று சொன்னுர். அந்நிலையில்கூட அன்றிரவு டின்னரில்லாமற் போயிற்றென்றும், அதன்மேல் விளைந்த கோளாறுகளிவை என்றும் ஒப்புக்கொள்ள அவருக்கு மனதில்லை, பக்கத்தில் கண்களில் மருந்தொன்றைப் போட்டு,சிகிச்சை செய்து கொண்டு உட்கார்ந்திருக்கும் மனைவி கேட்டாள்.

நேற்றிரவு ''ஸம்ஜை, இரானி, பெட்ரோல், தள்ளு'' என்று பேத்தினேளே, என்ன சமாசாரம்?

''பேத்தினேனு என்ன? ஒண்ணும் தெரியல்லயே.''

''அன்னிராத்திரி, ஸ்ரீநிவாஸய்யராத்துலே டின்னர் சாப்பிட்டேளோல்லயோ?

''ஆகா சாப்புட்டேனே.''

''கீழே எங்கபோனேள்?''

''தாகமாயிருந்துது; பானைத்தூத்தம் சாப்பிடலாம்னு போனேன்; அலமாரிக்குள்ள எலி ஓசைப்படுத்திண்டு இருந்தது. திறந்து தட்டினேன்......'' என்று சொல்லிக்கொண்டுவரும்போதே அய்யருக்குப் படபடப்பு வந்தது. உடனே மனைவி மார்பில் தடவிக்கொடுத்தாள்; ''அதிகமாப்பேச வேண்டாம்! களைப்பா இருக்கு; இதோ ஆரஞ்ஜ்ஜூஸ், சாப்புடுங்கோ......தாராளமாச்சாப்புடுங்கோ சாப்புடுங்கோ.........




வாழ்க்கையில் ஆரோக்கியத்தை விரும்
பும் பெற்றோர்கள் ஆகாரத்தில் சிறந்த
தென நம்புவது பெரீஸ் பிஸ்கட்ஸ்

★

குழந்தைகள் விரும்பும் அமிர்தம்
போன்ற உணவு மேலான சத்துக்கள்
அடங்கிய தங்களின் சிற்றுண்டி என்
பதை ஒவ்வொரு தாய், தந்தையரும்
அறிந்திருப்பதால் அவர்கள் எப்
பொழுதும் வாங்குவது

★

# பெரீஸ்

## பிஸ்கட்ஸ்

**PERRY & CO., USILAMPATTI.** (Estd. 1917)

# பசுவிலாசம் சர்க்கஸ்

யோகி சுத்தானந்த பாரதியார்

அப்பனுக்கேற்ற பிள்ளை தப்பாது பிறந்தது—அவன் பெயர் விடன் )விருஷபசேனனின் சுருக்கம்); இவன்பெயர் மூர்க்கன்.

(முருகன் என்ற பெயரில் மூடக்கொள்கையிருக்கிறதாம்; அதை marc என்று திருத்திப் பிறகு மூர்க்கன் ஆக்கிவிட்டான் பிள்ளை). அப்பன் திருவிளையாடல் ஒரு புட்டி இரண்டு குட்டியுடனிருந்தது; மகன் திருவிளையாடலில் பீப்பாயும், மன்மதப் படைகளும் புகுந்துவிட்டன. இருவருக்கும் புத்தி மூளையில் இல்லை—ஒரு பாதிரியார் பிள்ளைக்குப் பைபிள் படித்தார். "ஐயா பாதிரியாரே, ஏசுநாதர் சாராய அற்புதம் செய்தாரே. இந்தக் காவேரி வெள்ளத்தை ஷாம்பைனாகவே ஓடச்செய்யட்டுமே பார்க்கலாம்" என்றான் மூர்க்கன். ஊரிலுள்ள ஒரு பண்டாரம் ஞானசம்பந்தர் தேவாரம் பாடினார். "ஐயா, சம்பந்தர் எலும்பைப் பூங்பாவையாக்கினாரே! நீர் அப்படிச் செய்தால், எத்தனையோ பெண்களை எலும்பாக்க நான் தயார்; நீர் எலும்புகளைப் பெண்ணாக்கிவிடும்" என்றான் மூர்க்கன்!

அவன் புத்தியில் புட்டியும் குட்டியும் புகுந்து அப்படி வேலைசெய்தன. சாது, தருமம், புண்ணியம் என்று வந்தால் வாசலில் இரண்டு கோம்பை நாய்களைக் கட்டிச் "சூ" விடுவான் புண்ணியவாளன். பட்டம் பெற்ற பகல் திருட்டுப்பகதூர்கள், ஊரைச் சூறையாடும் எத்துக்கடைவீரர், முகத்துதி பேசி முடிச்சவிழ்க்கும் தகடிதத்தப் பேர்வழிகள், சூதாடிகள், குடிகாரர், ஓடுகாலிகள். வீட்டுப்பிடாரிகள், ஊர்க்காலிகள், பூச்சழகியர், பேச்சழகியர், ஆளைப் படுகுழியில் தள்ளும் அயோக்கியர்கள், கோள் பொய் சொல்லிக் குடிகெடுக்கும் குண்டுணிகள்—இவர்களையெல்லாம் மூர்க்கன் தாம்பூலத்துடன் புட்டியும் வைத்தழைப்பான். அப்பன் ஊரைக் கொள்ளையடித்தான்; மகன் அப்பனைக் கொள்ளையடித்தான். மகனை ஊர்க்காலிகளும் வேசைகளும் கொள்ளையடித்தனர். இவர்களைச் சபிக்காத பெரியாரில்லை! புகழாத போக்கிலிகளில்லை. கூலிக்கு மாரடிக்கும் தத்தாறிக் கவிகள் "மூர்க்கன் உலா, விடப் பிரியசிந்து, மூர்க்கன் காதல்" என்றெல்லாம் பாடி வந்தனர்; கூளப்பநாயக்கன் காதலில் சுப்பிரதீபக் கவிராயரும் வர்ணிக்கக்கூசியதெல்லாம் தத்தாறிக் கவிராயர்கள் தாராளமாகப் பாடிவிட்டார்கள். இராமாயணம் பாரதமெல்லாம் கட்டுக்கதைகள்; மூர்க்கன் காதலே உண்மைக் கதை என்று பிரசாரமும் நடந்தால் கேட்கவேண்டுமா; உலகம் திறந்தவெளிதானே; காற்றும் புயலும் போல் யார் வேண்டுமானாலும் வாயைத் திறந்து என்னவேண்டுமானாலும் பேசலாம் திட்டலாம், பச்சை பச்சையாக வையலாம் தாக்கலாம். பூமாதேவி பொறுத்துக் கொண்டுதான் இருக்கிறாள். மூர்க்கன் அட்டூழியங்களையும் விடப்பிரியன் அக்கிரமங்களையும் பூமாதேவி மிதமிஞ்சிப் பொறுத்துவந்தாள். வரிதரும் பொது ஜனங்களுக்கு வாய்ப் பூட்டுச் சட்டம், வறுமை, மடமை, அடிமைச்சிறை, தடையுத்தரவு இவையே மிச்சம்.

கல்வி, தொழில், சுகாதாரம் என்று அலறிய குடிகளுக்குத்.தடியடிதான் கிடைத்தன. சேணியச் சுப்பன் தறியோட்டிப் பட்டினி கிடந்தான்; சீமைத் துணிகள் கப்பல் கப்பலாகச் சந்தைக்கு வந்தன. சுதேச சாமான்கள் பளபளப்பாயில்லை. என்று விடப்பிரியன் டப்பாக்களும் புட்டிகளும் இறக்குமதி செய்வான். நல்ல தொழிலாளருக்குக்கூட வேலை அகப்படவில்லை; சரக்கு விற்கவில்லை. எங்கும் துயரம், வறுமை; மூர்க்கன் ஊரில் மூதேவி சீமைச் சாயங்களைப் பூசி அழிநடம் புரிந்தாள்!

* * *

விடப் பிரியனுக்கு எட்டு மந்திரிகள், ஏழுபேர் வயிற்றுத் தந்திரிகள். தொந்தி நிரம்ப ஆமாஞ்சாமி, போடுகிறவர்கள்; அவர்களுக்கு இணை, கோபுரம் தாங்கிப் பொம்மைகளே. மூர்க்கன் 'பிடி' என்றால் ஏழு பேரும் 'அடி' என்பர்; அவன் "அடி" என்றால் இவர்கள் அடியோடு சாய்ப்பர்,—லோட்டாப் பேர்வழிகள், சிரித்துக் கொண்டே கழுத்தறுக்கும் சிங்காரக் கொடியர்.

முதல் மந்திரி சத்தியகீர்த்தி ஒருவனே அறிவாளி, நியாயவான், அந்தரங்க சுத்தன்; அவன் அனுபவக் கிழவன், அவனிடமே

குடிகளுக்கு மதிப்புண்டு, அவன் விடப்பிரியனுக்கும் மூர்க்கனுக்கும் எவ்வளவோ நீதி புகட்டினுன்.

"ஐயா மனிதன் என்ருல் புலன்களை அடக்கியாள வேண்டும். கடவுளை நம்ப வேண்டும்; பொய், கொலை, களவு, விபசாரம், சூது, கட்குடி, புலாலுணவு, வீண் வம்பு, அநீதி, கயவர் உறவு இவற்றை நீக்க வேண்டும். நல்லாரை நேசிக்கவேண்டும். அருட்பெரியார் சொல்லைக் கேட்டு நடக்க வேண்டும். ஊருக்குபகாரம் செய்யவேண்டும்; உலகிற்குபகாரம் செயவேண்டும்; பலர் மெச்ச வாழவேண்டும்; மனச் சாட்சிக்குப் பணிந்து நடக்கவேண்டும்" என்று சத்திய கீர்த்தி நீதி சொன்னுன். அதை இந்தக் காதில் வாங்காமலே அந்தக் காதில் விட்டு விட்டான் பிள்ளை. மறுபடியும் "அப்பனும் பிள்ளையும் சரியாக நடக்கிறீர்களா, இல்லையா; இனி அநியாயம் செய்தால் புரட்சி எழும்; உங்கள் உயிருக்கே மோசம் வரும்; ஜனங்கள் மனங் கொதிக்கிருர்கள்" என்று இடித்துரைத்தான் சத்தியகீர்த்தி.

மூர்க்கன்மூக்கு மிளகாய்ப் பழமாய் விட்டது. "டேகிழவா; நீ என் ஊழியன்; என்னுல் வயிறு வளர்ப்பவன்; என் இச்சையைத் தடுக்க நீ யாரடா? நானும் பரோபகாரந் தானே செய்கிறேன்; என்னுல் உலகிற்கு எவ்வளவு உபகாரம் தெரியுமா? எனக்குச் சுயநலமே கிடையாது; நமது ஊர், நமது நாடு என்றும் கிடையாது. ஐரோப்பா அமெரிக்காச் சரக்குகளை எல்லாம் நான் இங்கேகொண்டுவந்து அந்த நாட்டுத் தொழிலாளரை ஆதரிக்கிறேன். உனது நீதிசாத்திரங்கள், சூது, விபசாரம் இவற்றைத் திட்டுகின்றன.

நான் இவற்றிற்கு ஆதரவளிக்கும் பாப ரக்ஷகன். என்னை எத்தனைபேர் மெச்சுகிருர்கள். படித்துப்பார் மூர்க்கன் காதலை; பொன்னிசைப் புலவர் என்மேல் பாடிய உலாவைப்பார்; சாயங்காலமானுல் என் தங்கராசா எப்போவருவார் என்று ஆயிரம் கண்கள் என்னை எதிர்பார்க்கின்றன. வறட்டுக்கிழவா, என் புகழில் உனக்குப் பொருமையா?" என்று மூர்க்கன் பலமாகத் தாக்கி மந்திரியைப் புண்படுத்தினுன். பிறகு குலாமிகள் பக்கம் திரும்பி, "எப்படி நமது நீதி?" என்று கேட்டான். ஏழு லோட்டா மந்திரிகளும், "மூர்க்கமகராசா, இந்தச் சத்தியகீர்த்திதங்கள் சுகபோகங்களிற் பொருமைகொண்டு பிதற்றுகிருன். இந்தக்கிழவனுக்கு நாடி தளர்ந்துபோனது. சொத்தை வேதாந்தம்பேசி நமது சுகத்தைக் கெடுக்கிருன். இவன்பெரிய புரட்சிக்காரன்; குடிகளைத் தூண்டிவிட்டுக் கலகம் செய்வான். இவனைக் கண்ணைக்கட்டிக் காட்டில்கொண்டு தள்ளவேண்டும். அப்போதே எங்கள் வயிற்றெரிச்சலும் தீரும்" என்றனர். அப்பாவும் பிள்ளையும் சேர்ந்து, நீதிக்கிழவனுன சத்திய கீர்த்தியை "ஏ நச்சுவாயா, உன் பிலாக்கணத்தைக் காட்டுநரியிடம் ஊளையிடு" என்று கண்ணைக்கட்டி வெகுதூரம்கொண்டு சென்று பெரிய காட்டில் விட்டுக் கைகழுவி வந்தார்கள்.

இதைக் கேட்ட ஜனங்கள் மனம் கொதித்தது. அன்று முதல் ஜனசக்திக்கும், தனிக் காட்டு மூர்க்க சக்திக்கும் போராட்டம் நடந்தது.........

* * *

சத்தியகீர்த்தி உலகியல்பைக்கண்டு சிரித்தான்; புல்லர் கொடுங்கோலாலும், அதர்மப் பதர்களாலும் பொது ஜனங்கள் படும் துயரை எண்ணி வருந்தினுன். மூர்க்கனும் விடனும் திருந்த மருந்து தேடினுன்.

அந்தக் காட்டில் ஒரு முனிவர் தவம் புரிந்தார். அவர் யாருடனும் பேசுவதில்லை; உலகை நன்ருய் அறிந்த துறவி; ஒவ்வொருவர் உள்ளத்திலும் புகுந்து உண்மையறியும் சித்தர். சத்தியகீர்த்தி அவரைச் சரண்புகுந்து "மகானே, விடனும் மூர்க்கனும் ஆத்மபுரியை அழித்து அட்டூழியம் செய்கிருர்கள். அவர்கள் கொடுமை தாங்காமல் பொது ஜனங்கள் குமுறிக்கொண்டிருக்கிருர்கள். இந்த மூர்க்கருக்குப் புத்திவர ஒரு வழிகாட்டவேண்டும்" என்று மன்றுடி வேண்டினுன். மகான் அன்பன் உள்ளத்தை அறிந்து, "மனிதனை மனிதன் திருத்தமுடியாது; மனிதனிடமுள்ள மிருகம் அவ்வளவு கொடியது; மிருகத்தை மிருகமே திருத்தவேண்டும்; உனக்கு மிருகஜயசக்தி தருவோம்; அதனுல் மனிதனை வெல்லவேண்டும்" என்று எழுதிக் காட்டினுர். மந்திரி வணக்கமுடன் உடன்பட்டான்.

அஷ்டாங்க யோகத்தில் பிரத்யாகாரம், தியானம், தாரணை ஆகியவை புலன்களையும் மனதையும் அடக்கும். இவற்றிற்கு ஸம்யமம் என்பர். ஸம்யமத்தால் பல சித்திகள் பெறலாம். வீரிய தேகத்திலும், மணிபூரகத்திலும் ஸம்யமம் செய்து சித்தி பெற்றவன் அற்புத வசீகரத் தன்மை யடைந்து, கொடிய விலங்குகளைக் கூட அடக்கியாள முடியும்; தன் மனப்படி அவற்றை ஆட்டி

வைக்க முடியும். அப்படிப்பட்ட • ஸம்ய மத்தை முனிவர் மந்திரிக்குப் பயிற்றி மிருக ஜயசித்தி அளித்தார்.

பிறகு, "அப்பனே, மனிதனுக்கு மனிதன் புத்தி சொல்லித் திருத்தும் காலம் போய் விட்டது. மனிதச் செருக்கு மனிதச் செருக்கைப் பணியாது; அதனுலேதான் ஹிதோப தேசம், பஞ்ச தந்திரம் முதலிய கதைகளை விலங்குகளின் பெயர்களால் மகான்கள் எழுதி வைத்தார்கள்; இனி விலங்குகளே மனிதருக்குப் புத்தி புகட்டவேண்டும். மேலும் மனிதன் விலங்குகளைத் தாழ்வாக நினைக்கிருன்; அவை இயற்கையான ஐம்புல னறிவால் எவ்வளவோ மேன்மையாகவே வாழ்கின்றன.

மனிதனைவிட நாயிடம் நன்றி விசுவாசம் உண்டு. மனிதனைவிடக் குரங்கும் கிளியும் கற்பிற்சிறந்தவை; மனிதரைவிடக் காக்கை இனத்துடன் உண்ணும். இப்படி எல்லா மிருகங்களும் சிறப்புடையன. நீ மிருகஜய சக்தியால் ஒரு சர்க்கஸ் நடத்து. பல மிரு கங்களைக்கொண்டு அறவாழ்வை விளக்கு, கொண்டா விலங்குகளை; நான் பழக்கித்தரு கிறேன்" என்ருர் முனிவர்.

சத்தியகீர்த்தி புலி, சிங்கம், கரடி, நரி, நாய், குரங்கு, பன்றி முதலிய விலங்குகளைப் பிடித்துக் கொண்டுவந்தான். அவற்றுடன் ஆத்மபுரியில் மூர்க்கரின் அட்டூழியங்கள் பிடிக்காமல் காட்டிற்கு வந்த சில நண்பரையும் அழைத்து வந்தான். அவர்களும் விலங்குள்போல வேடம்போட்டு நடித்தனர். விலங்குகள் பேசா; இந்த நண்பர்கள் அவை பேசவேண்டியதைப் பேசினர். முனிவரும் மந்திரியும் விலங்குகளைப் பல ஆடல்களுக்குப் பயிற்றினர். அந்த ஆடல்களைப் பார்த்தவர் மனதில் அன்பு, கற்பு, நன்றி, பொதுநலம், தெய்வபக்தி முதலிய தன்மைகள் பிடிபடும். காமக்குரோதங்கள் வெட்கி யோடும்,

இந்தக் காட்சிகளுக்குப் பசுவிலாசம் என்று பெயரிட்டு ஊர் ஊராகக் காட்சி காட்டி ஜனங்களின் ஆதரவைப்பெற்று, ஆத்மபுரிக்குச் செல்லச்சொன்னுர் முனிவர். அவர் சத்தியகீர்த்தியின் உருவையே மாற்றி விட்டார். நரை திரையெல்லாம் மாறி மந்திரி இளம் பொலிவுள்ளவனுனுன். அவன் பெயரும் 'விநோதன்'' ஆனது.

*     *     *

விநோதன் ஊர் ஊராகப் பசு விலாசம் ஆடல்கள் காட்டினுன். ஆடல், பாடல், பேச்சு, நடிப்பு, அதனுல் வரும் படிப்பினை அனைத்தும் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. விலங்குகள் நடிப்பதும் விலங்கு வேடம் போட்ட கலைஞர் பேசுவதும் பொதுஜனங்களைக் கவர்ந்தன. முடிவில் மிருக விலாசம் ஆத்மபுரிக்கு வந்துசேர்ந்தது. ஊரார் அதை அன்புடன் வரவேற்றனர். விடனும் மூர்க்கனும் விலங்குக் காட்சிகளைப்பற்றிச் கேள்வியுற்று ஒரு நாள் தாமும் பார்க்க விரும்பினர். விநோதன் அன்று விநோத மான காட்சிகளைக் காட்டினுன். அவற்றைக் காணக்காண விட—மூர்க்கர் வெட்கமும், துக்கமும் மூண்டு, தமது தீமையை நொந்து திருந்தினர். அக்காட்சிகளிற் சிலவற்றையே இங்கே குறிக்கிறேன்.

## க. நன்றியுள்ள நாய்.

ஒரு நாய் பசியுடன் அலைகிறது; ஒரு செல்வன் அதற்கு ஒரு ரொட்டித்துண்டு போடுகிருன். அதைத் தின்று மகிழ்ந்து நாய் வாலாட்டி நன்றி காட்டுகிறது; அன்று முதல் செல்வன் நாயை அன்புடன் வளர்க்கிருன். அவனுக்கு நண்பரும் உறவினரும் அதிகம். அவர்கள் சமயம்பார்த்து முகத் துதிசெய்து அவனிடம் பணமும் பண்டமும் பறித்துச் செல்கின்றனர்; இப்புறம் நீயே கர்ணன் எனப்புகழ்ந்து, அப்புறம் இவன் சுத்தக்கருமி, இவ்வளவுதானு தருவது என்று இகழ்கின்றனர். சில தாசிகள் வலையில் செல்வன் விழுகிருன்; அவர்கள் முன்னே ஆட்டங்காட்டிப் பின்னே நோட்டங்காட்டி ஓட்டம் பிடிக்கின்றனர்; அவர்களால் அவன் பணமெல்லாம்போய், கடன் ஏறி வீடுவாசலெல்லாம் ஜப்தியாகின்றன. பணக்காரன் எல்லாம் இழந்து ஏகாங்கியாகப் புறப்படுகிருன்; நாய் மட்டும் கூட வருகிறது. "சீ நாயே, உனக்கு யார் சோறு போடுவது" என்று அதைக் கல்லடித் தெறிந்து துரத்திவிடுகிருன். நாய் ஜப்தியான வீட்டிற்குச் சென்று எதையோ கௌவிக்கொண்டு ஓடுகிறது.

*     *     *

அடர்ந்த காடு. எஜமான் பசியால் களைத்துப் படுத்திருக்கிருன். கையில் பைசா இல்லை; நடக்கமுடியவில்லை. வழிப்போக்கர் அவனைக் குப்பைபோல் ஒதுக்கிச்செல்கின்றனர். அவன் பட்டினியிருந்து சாகவே துணிகிருன். அச்சமயம் நாய் ஓடிவருகிறது; வாலாட்டுகிறது. தான் கௌவிவந்த மூட்டையை அவன் காலடியில் வைத்து அங்கேயே படுக்கிறது. மூட்டையை எச

மான் அவிழ்த்தான்...............வியந்தான். அதுதான் இரகசியமாக ஓர் இருட்டறையில் வைத்திருந்த பவுன் மூட்டை. அது இருபதினாயிரம் ரூபாய் பெறும்.

"ஆ எனது நன்றியுள்ள நண்பா, உலகம் என்னை வெறுத்தது; மனிதர் கைவிட்டனர்; விலங்காகிய உனக்கு எவ்வளவு விசுவாசம்!'' என்று எசமான் நாயைக் கட்டித் தழுவி நன்றி சொன்னான்; நாய் மூட்டையிலிருந்த ஒரு ரூபாயைக் கௌவிக்கொண்டு எங்கோ ஓடியது; "நண்பா ஓடாதே; இரு'' என்றான் எசமான்; நாய் திரும்பிப் பார்த்து வாலாட்டிக்கொண்டே ஓடி, அரைமணி நேரத்தில் ஒருகூடையைக் கௌவிக்கொண்டு ஓர் ஆளுடன் வந்தது. கூடையில் சுடச் சுடப் பணிகாரங்கள் இருந்தன; இந்த நாயின் நன்றியைக் கண்ட மனிதன் அதனுடன் வந்தான். திரும்பிப் பார்த்துப் பார்த்து அது அந்த மனிதனை அழைத்து வந்தது. மனிதன் ஏழை; நல்லவன்; எசமான் நாயைத் தட்டிக் கொடுத்தான்; வந்த உணவை அதற்கும், புது மனிதனுக்கும் தந்து, தானும் பசியாறினான். புது மனிதன் ஒரு வண்டி கொண்டு வந்தான். அதில் மூவரும் ஏறி அடுத்த ஊரில் ஒரு வியாபாரம் செய்து வசித்தனர். "என்னைக் காத்தது நாய்'' என்று எசமான் அடிக்கடி சொல்லி அதை மெச்சிவந்தான்.

## உ. மனிதப்பன்றி

ஒரு செல்வன் தன் மகனுக்குச் சலுகை தருகிறான்; மகன் துர்நடத்தையில் அபாயமாகச் செல்லுகிறான்;குடிக்கிறான்;கற்பழிக்கிறான்; சூதாடுகிறான்; நண்பர் தகப்பனிடம் புகார் செய்கிறார்கள். "என் மகனை அப்படிச் சொல்லப்போச்சா? அவன் மைனர் காளை, இஷ்டப்படி நடப்பான்'' என்றான் அசட்டுத் தந்தை. அப்பனும் மகனும் காட்டுக்கு வேட்டையாடச் செல்கின்றனர். அங்கே ஒரு முனிவர் ஒரு பன்றியை மடியில் வைத்து, "என் செல்வமே'' என்று கொஞ்சிக்குலாவினார். அந்தப் பன்றியும் ஹர்விர் என்று அவருடன் பேசியது. சுற்றிலும் சில பன்றிகள் மேய்ந்தன. செல்வன் "இதென்ன? பரிசுத்த முனிவர் அசுத்தப் பன்றியை மடியில் வைத்துக்கொஞ்சுவதா!'' என்று வியந்து நையாண்டியாகக் கேட்டான். முனிவர் சிரித்தார். "என்ன நான் கேட்கிறேன்; இளிக்கிறீரே. உமக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?'' என்று மிடுக்காகக் கேட்டான் செல்வன்......

முனிவர்: அப்பனே உட்காரு; கேளு; சில மனிதர் இதைவிட அசுத்தமான பன்றியை 'என் மகனே, தங்கமே' என்று கொஞ்சுகின்றனர். இதோபார் இதுவும் மொச்சு மொச்சென்று கண்டதைச் சாப்பிடுகிறது; ஆனால் கள் குடிப்பதில்லை; பிறரைக் கொள்ளையடிப்பதில்லை; கிடைத்ததை உண்கிறது; இதனால் யாருக்கும் தீங்கில்லை. இந்தப் பன்றியும் ஒருபெண்ணைக்கூடிக் குட்டிபோட்டு வளர்க்கிறது. ஆனால் இதற்குப் பருவமுண்டு, மனிதப்பன்றி இதைவிட மோசமாயிருக்கிறதே; நிறை முறையில்லாமல் அது மாதரைக் கெடுக்கிறதே; காமக்குரோத லோப மோகங்களுக்கு அடிமையாயிருக்கிறதே. எனது செல்வப் பன்றி யார் பொருளையும் கொள்ளையடிப்பதில்லை. கட் குடிப்பதில்லை; புலாலுண்பதில்லை; கழிவுகளைச் சாப்பிட்டுக் காற்றைச் சுத்தம் செய்கிறது; பன்றி உலகின் தோட்டி. மனிதப் பன்றியோ காமக்குரோத மோகத்தால் உலகைப் பாப நரகமாக்குகிறதே. பகுத்தறிவில்லாத எனது பன்றியைவிட மனிதப் பன்றி எவ்வளவு மோசமாயிருக்கிறது; இது சாக்கடையில் புரள்கிறது; மனிதப் பன்றி ஒரு நாற்றத்தில் விழுந்து அதுவே இன்பமென மயங்குகிறதே.........எந்தப் பன்றி தேவலை!'' முனிவர் சொன்னதைக் கேட்டதும், அரசன் புதியவுணர்ச்சி பெற்றான். தனது மகனின் பன்றித்தனத்தை அறிந்தான். "மகனே முனிவர் பேச்சைக்கேள். முனிவரே எங்களுக்குப் புத்தி சொல்லுங்கள்'' என்று வணங்கினான்.

முனிவர்: அரசே மனிதன் புனிதனாகவேண்டும்; அவனுள் சுத்தான்ம வடிவாக இறைவன் இருக்கிறான்: அவனை அறிவதே அறிவு; அந்த அறிவைப்பெற மனத்தெளிவு வேண்டும். காமக்குரோதங்களால், மனம் கலங்கிச் சஞ்சலப்படும்; காமக்குரோதாதிகளால் எவனும் நன்மை பெற்றதில்லை. பக்தி, பரோபகாரம், தியானம், வாய்மை, தூய்மை, அன்பு, அருள், இரக்கம் கற்பொழுக்கம் இவற்றால் மனம் தெளியும்; சித்தசுத்தியுண்டாகும்; வாழ்வு உயரும். பன்றிகூடத் தான் உண்கிறது, உறங்குகிறது, குட்டி போட்டு வளர்க்கிறது; நம்மைவிட எளிதாக அதன் காலட்சேபம் நடக்கிறது. வைத்தியனில்லாமல் பிரசவிக்கிறது; நோயில்லாமல் இயற்கையோடிணைந்து வாழ்கிறது. உண்ணல், உறங்கல், புணர்தல், ஈனல், பேணல் ஆகிய தேக காரியங்கள் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பொதுவாகும்; இவற்றிலேயே மயங்கிக்கிடப்பவன் அதமனாவான்; தேக விவகாரத்திற்கு மேற்சென்று மனந்தெளிந்து, உள்ளம் திறந்து, தனது தெய்வத் தன்மையைப் பெறுகின்றவனே, மனிதன். மனிதன் தன்னடக்கத்துடன் வாழ வேண்டும். பகுத்தறிந்து நடக்கவேண்டும்.

இந்த உபதேசங் கேட்ட செல்வனும் மகனும் முனிவரைப் பணிந்து திருந்தினர்.

### ந. குரங்கு வேடிக்கை

பத்துக் குரங்குகள் குடும்பம் நடத்துகின்றன. அவற்றில் நான்கு பெண்; நான்கு ஆண்; இரண்டு குட்டிக் குரங்குகள், எல்லாக் குரங்குகளும் கனியுண்டு சந்தோஷமாயிருக்கின்றன, ஒரு மனிதன் குட்டிக் குரங்கிற்குப் புலாலுணவு தருகிறான். அதன் தாய் உடனே அந்த உணவைப் பறித்து வீசியெறிந்து 'செல்வமே, உயிர் எல்லாருக்கும் ஒன்று; நம்மை ஒருவர் கல்லால் எறிந்தால் எவ்வளவு வருத்தப்படுகிறோம்; பிற உயிர்களை மனிதர் கதறக்கதறக் கத்தியால் அறுத்துச் சமைத்துண்கிறார்கள். நம்மைவிட அவர்கள் நாகரிகம் பெற்றதாக மார்புதட்டுகிறார்கள். கொன்றுண்பது நாகரிகமா?—அப்படியானால் புலி நரிகள் பக்கா நாகரிகம் பெற்றவையாகும். செல்வமே, நாம் தீங்கற்ற காய்கனிகளையுண்போம். நமக்கு மரக்கறிபோதும். பாப உணவு வேண்டா' என்கிறது. மனிதன் வெட்கி உணர்ந்து சைவனாகிறான். ஒரு குடிகாரன் வருகிறான்; குரங்குகளிடையே ஒரு புட்டி சாராயம் வைத்து, "தம்பிகளா புட்டி போட்டுக் கூத்தாடுவோம்" என்கிறான். ஒரு குரங்கு புட்டியைத் தொடுகிறது. அதைத் தகப்பன் குரங்கு தடுத்து இவ்வாறு சொல்லுகிறது. "கர்பூர......... உர்........ கவனம்; இது கடும் விஷம்; இதைச் சாப்பிட்டு எத்தனையோ மனிதர் நம்மைவிடக் கேவலமாக நடந்துகொள்கிறார்கள். நமக்கு மானாவமானம் உண்டு. குடிகாரர் கண்டபடி உளறி, வைது, சண்டைபோட்டுத் தெருவில் விழுந்துபுரண்டு ஊர் சிரிக்க நடப்பர். வானம் பொழியும் அமுதும், பசு சுரக்கும் அமுதும்விட்டு மனிதர் கட்குடிப்பது சோறிருக்க விஷத்தைப் புசிப்பது போலாகும். குடி குடியைக் கெடுக்கும்; மதியைக் கெடுக்கும். மனத்தைக் கெடுக்கும். குடித்தவன் எவனும் நன்றாயிருந்ததில்லை. நாம் சொன்னால் மனிதர்கள் கேட்கமாட்டார்கள். அவர்கள் எப்படிவேண்டுமானாலும் நடக்கட்டும். நாம் பகுத்தறிவோர் அல்லவா? ஒழுங்காக நடப்போம். நம்மில் யாரும் மதுவை நினைக்கக்கூடாது" இதைக் கேட்டதும் இரண்டு குரங்குகள் சாராயத்தை அப்படியே மண்ணில் கொட்டிவிடுகின்றன. எல்லாக் குரங்குகளும் மகிழ்கின்றன. அச்சமயம் ஒரு பெண் குரங்கு


# ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிட்.

தலைமை ஆபீஸ்:- **கல்கத்தா**

இந்திய ஆயுள் ஆபீஸுகளுக்குள் மிகவும் முற்போக்கானது

முன்னேற்றத்தின் புள்ளி விபரங்கள்:

| | | |
|---|---|---|
| 1944-ல் புதிய பாலிஸிகள் | ... | ரூ. 10,14,80,981 |
| அமுலில் இருக்கும் மொத்த பாலிஸிகள் | ... | ரூ. 32,49,30,872 |
| ஆயுள் நிதி | .... | ரூ. 6,23,39,081 |

தாராள வசதிகள் உள்ள ஏஜன்ஸிகளை விரும்புவோர் செல்வாக்குள்ளவர்களாயிருப்பின் மனுச் செய்துகொள்ளலாம்.

விபரங்களுக்கு:—

டிவிஷனல் மானேஜர்,

**ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி**

[ லிமிடெட் ]

107, அரண்மனைக்காரத் தெரு :: சென்னை

ஜோடிமாறி மற்ருெரு ஆண் குரங்கைத் தழுவ வருகிறது. உடனே ஆண்குரங்கு அதை விலக்கி, "அம்மா உன்கணவன் அதோ; அவனிடம் செல்; அன்னிய மாதரை அன்னையாக மதிப்பதே நமது தருமம். என் மனைவியுடன் நான் வாழ்கிறேன்; உன் கணவனுடன் நீ வாழ்" என்கிறது. பெண் குரங்கு "மனிதர்போல் நாமும் விபசாரம் செய்தாலென்ன" என்கிறது. நரமனிதர் ஒரு மனைவியிருக்கப் பிறர் மனைவியரை இச்சிக்கின்றனர். உலகம் விபசாரத்தால் கெடுகிறது. விபசாரம் உயிரை உறிஞ்சும், உடலை நோய்ப்பாண்டமாக்கும்; ஆளைப் புதைகுழிக்கு நடத்தும். பகுத்தறிவுள்ள மனிதர் எக்கேடு கெட்டுப் போகட்டும். நாம் ஒழுங்காயிருப்போம். ஒரே மனைவியைக் கூடிவாழ்வோம். நமது முன்னேரான ஹனுமந்த ராயர் பிரமசரியத்தால் பெற்ற அற்புதச்சக்திகளை நினைப்போம். பரதார கமனத்தால் வாலிவிழ்ந்ததை நினைப்போம்!

இவ்வாறு பெரிய குரங்கு சொன்னதும், அததன் ஜோடிகளைப் பிடித்துக்கொண்டு "கற்பைக் காப்போம் கண்போலே" என்று பாடி எல்லாக் குரங்குகளும் கூத்தாடின. இதே மாதிரி கிளிகள் ஜோடி ஜோடியாக வருகின்றன; ஓர் ஆண் கிளி, மற்ருெரு பெண் கிளியை வஞ்சிக்க முயல்கிறது.

பெண்கிளி "அடே, உனக்கொரு மனைவியிருக்கும்போது, பிறமாதரிடம் ஏன் போகிருய்? அதனுல் நோயும், மெலிவும் மூதேவித் தனமும் வரும்; உன் மனைவியிடம் அப்படி மற்ருெருவன்போனுல் பொறுப்பாயா?" என்று கேட்கிறது. ஆண் கிளி வெட்கி மன்னிப்புக்கேட்டு "அம்மையே உணர்ந்தேன்; இனி என் பத்தினியைத் தவிர வேறு மாதரை நினைக்கமாட்டேன்" என்கிறது. எல்லாக் கிளிகளும் "கற்பு, கற்பு" என்று கூறுகின்றன.

பிறகு பூனைகள் வருகின்றன; ஒரு பெண் பூனை தவறி மற்ருெரு ஆண் பூனையிடம் செல்லுகிறது; அந்த ஆண் பூனை சீறி எழுந்து "சி, விபசாரி, வராதேகிட்ட" என்று விரட்டுகிறது. பிறகு அது அதற்குரிய ஆண் பூனையிடம் மன்னிப்புக்கேட்கிறது. ஆண் பூனை "வெட்கங்கெட்ட பெண்ணே, நான், கணவன் இருக்கையில் மற்ருெருவனிடம் போனதேன்" என்று இடித்துக் காட்டுகிறது. பெண்பூனை அழுகிறது. "ஒரு நாள் பட்டினியிருந்து உன் பிழைக்காக வருந்து. பிறகே உன் முகம் பார்ப்பேன்" என்கிறது ஆண் பூனை. பெண் அப்படியே ஒரு மூலையில் கண்ணை மூடிச் சோர்ந்திருக்கிறது. மற்றப்பூனைகள் தம்பதி சகிதம் வந்து "அம்மா இனி ஒழுங்காயிரு; கற்பே மாதர் அணிகலம்" என்கின்றன.

பிறகு புலியும் சிங்கமும் ஒரு கூண்டில் காண்கின்றன. அவை "மனிதர் நம்மை அஞ்சுகின்றனர்; நம்மைவிடக் கொடிய கோபமும் பொருமையும் மனிதர் நெஞ்சப் புதரில் விளையாடுகின்றன" என்று பேசும் போது ஒரு குடிகாரன் வருகிருன்; புலிக்கு ஒரு சாராயப்புட்டி தருகிருன். அது புட்டியைப் பல்லாற் கவ்விப் படார் படார் என்று கீழே அடித்து உடைத்து மனிதனைக்கண்டு உருமி "அட பாதகா, என்னை நீகொடியவன் என்கிருய்; நான் பல்லாலும் நகத்தாலும் உன் உடலைக் கிழித்துண்பேன். இந்தச் சாராயம் உன்னுள்ளே புகுந்து உன் உடலையும், உயிரையும், மனதையும் கெடுத்து, உன் ஜீவனையே நரகமாக்கிச் சித்திரவதை செய்யுமே; சை சை இனிக்குடியாதே" என்கிறது. சிங்கம் "மனிதா மதிமயங்காதே" என்று கர்ஜிக்கிறது. மனிதன் கையிலுள்ள சாராயப் புட்டியைத் தட்டிவிட்டு உடைக்கிறது. மனிதனுக்குப் புத்திவந்து குடியை விடுகிருன். இந்தமாதிரி இன்னும் பல் காட்சிகளைக் கண்டு, "விலங்குகளே இவ்வளவு ஒழுக்கமுடன் நடக்கின்றனவே; நாம், மனிதர் எவ்வளவு சீர்கேடாக நடக்கிருேம்" என்றுணர்ந்தனர் விட-மூர்க்கர். மறுநாளே அவர்கள் வாழ்வு திருந்தியது.

பசு விலாசத்தை ஆதரித்து மூர்க்கன் தினம் ஆட்டம் பார்த்தான். இறுதிநாள் விநோதன் "ஐயா மனிதன் என்ருல் புலன்களை அடக்கியாளவேண்டும்." என்று முன்னே சொன்ன புத்திமதிகளையே சொன்னுன்.

மூர்க்கன் "விநோதரே, மனிதத்தன்மையை நான் விலங்குகளிடமிருந்தே கற்றேன்; எங்கள் அரியமந்திரி சத்தியகீர்த்தி இப்படியே புத்தி புகட்டினுர். அவர் சொன்னதெல்லாம் உண்மை. ஆ—அவர் இப்போது இருந்தால் காலில்விழுந்து நன்றிகூறுவேன்" என்ருன்.

"அப்பனே நானே அந்த மந்திரிக்கிழவன். உன்னைத்திருத்தவே பசுவிலாசம் நடத்தினேன். நீ திருந்திஞய்; என் வேலையும் முடிந்தது" என்று விநோதன் மாறுவேடத்தைக் கலைத்து சத்தியகீர்த்தியாக முன்னே நின்ருன். விடப்பிரியனும் மூர்க்கனும் மந்திரியை வணங்கி அன்றுமுதல் அவன் சொற்படியே நடந்தனர். பசுவிலாசத்திற்கு மாளிகை கட்டி ஆதரித்தனர். மனிதர் மனிதரானுர். விடன் அமுதனுனன்; மூர்க்கன் சன்மார்க்கனுனன்.




# *New Watches are Scarce*

## புதிய கடிகாரங்கள் கிடைப்பது அரிது:—

மற்றச் சாமான்களைப்போல் கடிகாரங்களும் இப்பொழுது மிகக் குறைவாகவே வருகின்றன. பொதுவாக ஜனங்கள் விரும்பும் மாடல்கள் நமது தொழிற்சாலைகளிலிருந்து ஏற்றுமதிசெய்யப்பட்டு வருகின்றன. ஆனால் போக்குவரத்து வசதி மிகவும் குன்றியிருக்கும் இக்காலத்தில் ஆயிரக்கணக்கான மயில்களுக்கப்பாலிலிருந்து அவை வரவேண்டியிருப்பதால், இத்தேசத்திற்கு அவை வர பலமாதங்கள் பிடிக்கலாம்.

தேவைக்குப் போதிய அளவு வரத்து இல்லாமலிருக்கும் இந்நிலையில் நமது வாடிக்கைக்காரர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய இயலாததுபற்றி வருந்துகிறோம். வெஸ்ட் எண்டு கெடிகாரங்களை நாம் சப்ளை செய்ய வசதி ஏற்படும்வரை கொஞ்சம் பொறுத்துதவுவார்களென நம்புகிறோம்.

**வெஸ்ட் எண்டு வாட்ச் கோ**

பம்பாய் — கல்கத்தா

# WEST END WATCH Co.

**BOMBAY CALCUTTA**

*Makers of Quality Watches for over 75 Years.*

# கண்ணாடி

ஆர். கே. விசுவநாதன்

உலோகங்களைக் காட்டிலும் நம்முடைய தினசரி வாழ்க்கையில் அதிகம் பயன்பட்டு வருவது கண்ணாடிதான். கண்ணாடி இலகுவில் உடைந்து பொடியாகக் கூடிய தன்மையைப் பெற்றிருந்தாலும் அதற்கென்று அமைந்த சில விசேஷ குணங்களினால் அதில் செய்யப்பட்ட சாமான்களை நாம் சர்வ சாதாரணமாக உபயோகித்து வருகின்றோம். கண்ணாடிப் பாத்திரங்களில் எந்தப் பொருளை வைத்தாலும் கெடாமலிருக்கும். காடிகள் (Acids), காரங்கள் (Aekolis) ஒன்றும் கண்ணாடிச் சாமான்களைப் பாதிப்பதில்லை. உலோகப் பாத்திரங்களில் காடிகளையோ காரங்களையே வைக்கமுடியாது. உணவுப் பொருள்கள் முதற்கொண்டு சகலவிதமான பொருள்களையும் கெடாமல் வைப்பதற்குச் சிறந்தவை கண்ணாடிப் பாத்திரங்கள்தான். இவற்றை எளிதில் சுத்தம் செய்துவிடலாம். கண்ணாடிக்குள் ஒளி ஊடுருவிச் செல்லும். எனவே அதில் செய்யப்பட்ட பாத்திரங்களில் வைத்திருக்கும் பொருள்களை வெளியிலிருந்து நன்றாகப் பார்க்கலாம். பலவித வர்ணங்களில் கண்ணாடிகளைத் தயார்செய்ய முடிவதால் அவரவர்களின் விருப்பத்துக்குத் தகுந்தபடி பாத்திரங்களைச் செய்வது சாத்தியமாகிறது. நம் தினசரி வாழ்க்கைக்கு உபயோகப்படுவது ஒருபுறமிருக்க, விஞ்ஞான வளர்ச்சிக்குக் கண்ணாடி இன்றியமையாததாக இருக்கின்றது. கண்ணாடி இல்லாவிடில் விஞ்ஞானம் முன்னேற்றமே அடையாது என்று திட்டமாகக் கூறலாம். பௌதிகம், இரசாயனம், மருத்துவம் முதலிய துறைகளில் சோதனைகள் செய்வதற்கு வேண்டிய எல்லாக் கருவிகளிலும் கண்ணாடி உபயோகப்பட்டு வருகின்றது. தூரதரிசனி, அணுதரிசனி போன்ற கருவிகளுக்கு முக்கியமாக வேண்டியவை கண்ணாடி வில்லைகளே ஆகும். கண்ணாடிப் பாத்திரங்கள் இல்லாவிடில் இரசாயன சோதனைகள் ஒன்றுமே நடைபெற முடியாது. இவ்வாறு பல துறைகளில் உபயோகப்பட்டு வரும் கண்ணாடியைப்பற்றிய சில விவரங்களை இக்கட்டுரையில் பார்ப்போம்.

கண்ணாடி முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டதைபற்றி ஒரு கதை சொல்வதுண்டு. சில நூற்றாண்டுகளுக்குமுன் ஸிரியா (Syria) தேசத்துக்கு அருகிலுள்ள கடல் மார்க்கமாகச் சில வியாபாரிகள் பிரயாணம் செய்யும்போது கரையில் தங்கள் ஆகாரத்தை முடித்துக்கொள்வதற்காக இறங்கினார்களாம். அப்பொழுது உணவுப் பொருள்களை வேக வைப்பதற்கு அடுப்புக்காகக் கற்களைத் தேடிப் பார்த்தார்களாம். கற்கள் கிடைக்காததனால் அவர்கள் வியாபாரத்திற்காகக் கப்பலில் ஏற்றிச் சென்ற வெடியுப்புக் (Nitre) கட்டிகளில் சிலவற்றை எடுத்து அடுப்புக்கட்டி, தீ மூட்டி, உணவுப் பொருள்களை வேக வைத்தார்களாம். அப்பொழுது வெடியுப்புக்கட்டிகள் உருகி மணலுடன் கலந்து திரவமாக ஓடுவதைப் பார்த்தார்களாம். அத் திரவம் மிகுந்த பளபளப்புடன் தோன்றுவதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்களாம். புதிதாக இவர்கள் கண்ட இப்பொருளுக்குத்தான் கண்ணாடி என்று பெயரிட்டார்கள் என்று கூறப்படுகிறது. இக்கதை எப்படி இருந்தாலும் ஸிரியா, பாலஸ்தீனம், மெஸபோடாமியா முதலிய நாடுகளில்தான் கண்ணாடி முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பின்னர் ரோமாபுரி ராஜ்யம் உன்னத நிலையில் இருந்தபொழுது இத்தொழில் மற்ற நாடுகளுக்குப் பரவிற்று என்று கூறுகிறார்கள். பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் பல பாகங்களில் கண்ணாடியைச்செய்வதற்குப் பல தொழிற்சாலைகள் ஏற்பட்டன. இரசாயன அறிவு அதிகரிக்க இத்தொழிலும் சீர்திருத்தம் அடைந்து நாளுக்குநாள் முன்னேறிச்சென்றது. தற்காலம் எண்ணற்ற கண்ணாடி தினுசுகளைப் புட்டிகளாகவும், சிம்னிகளாகவும் குழாய்களாக

வும், தகடுகளாகவும் ஏராளமாக யந்திரங்களின் உதவியால் செய்துவருகின்றார்கள்.

கண்ணாடியைத் தயாரிக்கும் முறையைக் கவனிக்குமுன் அதன் பௌதிக குணங்களைப்பற்றிச்சிறிது கூறுவோம். பொருள்களுக்குத் திட, திரவ, வாயுவென்னும் மூன்று நிலைகளுண்டு என்று அனைவரும் அறியலாம். திடப்பொருளைக் காய்ச்சினால் திரவப்பொருளாக மாறிவிடும். இம்மாறுதல் ஏற்படும் சூட்டை (Melting point) என்று சொல்லுவார்கள். ஒவ்வொரு பொருளுக்கும் இவ்வுருகுநிலைச் சூடு ஓர் அளவினதாக இருக்கும். கலப்பில்லாத தனிப்பொருள்களுக்குத்தான் இவ்வுருகுநிலைச்சூடு வரையறுக்கப்பட்டிருக்கும். ஆனால் பல பதார்த்தங்களின் கலவைப் பொருள்களுக்கு உருகு நிலைகள் வரையறுக்கப்பட்டிராது. கண்ணாடி பல பொருள்களின் சேர்க்கையினால் தயாரிக்கப்படுவதால் இதன் உருகுநிலை வரையறுக்கப்பட்டிராது. கண்ணாடியின் மற்றொரு விசேஷகுணம் அதன் பாகுநிலை (Viscosity). தண்ணீர், தேன் இரண்டையும் கீழே ஊற்றினால் தேன் நீரைக்காட்டிலும் அதிக தாமதத்துடன் ஓடுவதைக் கவனிக்கலாம். தேனுக்குக் குழகுழப்புத்தன்மை அதிகமிருப்பதினால்தான் இவ்வேற்றுமை ஏற்படுகிறது. இதைத்தான் பாகுநிலை என்று கூறுகிறார்கள். உருக்கிய கண்ணாடி இத்தன்மையை நன்கு பெற்றிருக்கிறது. கண்ணாடியின் மற்றொரு விசேஷ குணம் தன்னுள் ஒளியைக் கடத்திச்செல்வது. ஒளியைப்பற்றி நாம் இதுவரை





Madras Stockists:- M/s. RAJAN DRUG STORES
155, Nyniappa Naick Street, MADRAS.

தெரிந்துகொண்டிருக்கும் எல்லா விஷயங்களும் இதன் விளைவாகவே ஏற்பட்டவை உதாரணமாக நியூட்டன் என்னும்பேரறிஞர் சூரியவெளிச்சத்தை ஒரு கண்ணாடி முப்பட்டை (glass prism)யின் மூலமாகப் புகச்செய்துதான் வெள்ளொளியில் பல வேறு நிறங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தார். கண்ணாடி, உலோகங்களைப்போல பின்சாரத்தைக்கடத்திச்செல்லாது. மின்சாரத்தைத்தேக்கி வைப்பதற்குக் கண்ணாடி தான் உபயோகப்படுகிறது. இவ்வாறாக இதன் ஒவ்வொரு குணத்தையும் அறிந்து பயன்படுத்தி வருகின்றார்கள்.

சுத்தமான மணல், சுட்ட சுண்ணாம்பு அல்லது சுண்ணாம்புக்கல், ஸோடியம் அல்லது பொடாஸியம் கார்பனேட் முதலியவற்றைச் சரியான அளவிற் கலந்து உருக்கினால் கண்ணாடி உண்டாகும். உருகும்போது வேண்டிய அளவுக்கு உஷ்ண நிலையைக்குறைத்துச் சரியான பதத்திலிருக்கச்செய்து பாத்திரங்களைச் செய்வார்கள். வெகுகாலம்வரை வாயால் ஊதியே இவற்றைச் செய்துவந்தார்கள். இம்முறைக்கு glass blowing என்று பெயர். ஒரு குழாயை எடுத்து அதன் ஒரு நுனியை உருக்கிய கண்ணாடிப்பாகில் தோய்த்து, மற்றொரு நுனிவழியாக ஊதுவார்கள். அப்பொழுது உண்டாகும் கண்ணாடிக் கொப்புளத்தைச் சூடுசெய்து பதமாக்கிச்சரியான உருவம் வரும்வரை ஊதுவார்கள். இதைச்செய்வது சற்றேகடினம். தற்காலம் இயந்திரங்களைக்கொண்டு எல்லாவிதமான சாமான்களையும் தயாரித்து வருகின்றார்கள். உலையின்மேலுள்ள கண்ணாடிப் பாகினின்றே நேராக, தகடுகளையும், பாத்திரங்களையும் செய்கின்றார்கள். இத்தொழிலில் அநேக நுட்பங்கள் உண்டு. உதாரணமாக, உருக்கிய கண்ணாடியை மெதுவாகக் குளிரச்செய்துதான் பதத்திற்குக்கொண்டுவர வேண்டும். திடீரென்று குளிரச்செய்தால் கண்ணாடி இலகுவில் உடைந்து தூள்களாகிவிடும் நிலைமை அடைந்துவிடும். இதற்காக மிகவும் மெதுவாகவும் குளிரச்செய்யக் கூடாது. ஏனெனில் அவ்வாறு செய்தால் கண்ணாடி ஸ்படிகமாக மாறிவிடும். இதைத்தான் "பதம் மாறிப் பொருந்து விடுதல்". (Devitrification) என்று கூறுகிறார்கள். கண்ணாடியில் பலவகைகள் உள்ளன. ஸோடா கண்ணாடி (Soda glass) என்று ஒருவகைஉண்டு. இக்கலவை இலகுவாக உருகுவதால் இதில் பாத்திரங்களை எளிதில் செய்யலாம். மருந்துப்புட்டிகள், வீடுகளில் உபயோகிக்கும் ஜன்னல் கண்ணாடிகள் முதலியவற்றை இக்கலவையிலிருந்து தான் தயார் செய்கின்றார்கள். பொஹிமியன் கண்ணாடி (Bohemian) என்று மற்றொருவகை உண்டு. இதில் ஸோடியத்திற்குப்பதிலாகப் பொடாஸிய உப்புக்கள் இருக்கும். இக்கலவைப் பொருளை உருக வைப்பதற்கு அதிக சூடு வேண்டியிருக்கிறது. "ஏனுக்கண்ணாடி" (Jena glass) கட்டிக்கண்ணாடி (Hard glass) போன்ற ரகங்களும் இக்கலவையில்தான் தயார் செய்கின்றார்கள். கற் கண்ணாடி (Flint glass) என்றவகையில் பொடாஸியத்துடன் ஸீஸமும் கலந்திருக்கும். இக்கலவையில்தான் தூரதரிசனி, அணுதரிசனி முதலியவற்றுக்கு வேண்டிய வில்லைகளைத் தயார் செய்கின்றார்கள். இக்கலவைகள் எல்லாவற்றிலும் மற்றஉலோகப்பொருள்களைச் சிறிதளவு சேர்த்துக்கொண்டு உருக்கினால் பலரக வர்ணக் கண்ணாடிகளைத் தயார் செய்யலாம். உதாரணமாக, இரும்பு சம்பந்தப் பட்டிருக்குமானால் கண்ணாடியை மஞ்சள் அல்லது பச்சை நிறத்துடன் இருக்குமாறு செய்யலாம். செம்பு சம்பந்தப்பட்டால் பச்சை நிறக்கண்ணாடியைப் பெறலாம். மாங்கனீஸ் (Manganese) உலோகம் சம்பந்தப்பட்டால் ஊதா, மஞ்சள் கண்ணாடிகளைத் தயார் செய்யலாம். இம்மாதிரி பலவித உலோகங்களைச் சேர்த்துக்கொண்டு எல்லா வர்ணக் கண்ணாடிகளையும் செய்து வருகின்றார்கள்.

# புத்தக விமர்ச்சனம்

## இந்தியர் வரலாறு—

திரு S. K. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் இயற்றியது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து வெளியீடு.

காலேஜில் படிக்கும் பையன்களுக்குப் பயன்படும் முறையில் தமிழில் எழுதப்பட்ட இப் புத்தகம், செவ்விய நடையில் தெளிந்த வகையில், ஆக்கப்பட்டிருக்கிறது. ஒரு நாட்டின் சரித்திரம் அதை ஆளும் அரச குடும்பத்தின் சரித்திரமே என்பதில்லை என்பதை எடுத்துக்காட்டுவதுபோல் மக்களது அப்போதைய வாழ்க்கை நிலையை விரிவாக ஆசிரியர் விளக்கியுள்ளார். சங்க நூல்களைக் கொண்டு தமிழ் மக்களிடை நிகழ்ச்சிகளையும் சிறப்பியல்புகளையும் விவரித்துள்ளார். வரலாறு முற்றிலும் முடிவடையாது, கி. பி. 1000 ஆண்டுடன் நின்று விடும்படி நேர்ந்ததற்கு மிகவும் வருந்துகிறோம். கால அட்டவணை, சிறப்ப விளக்கம், எல்லை விளக்கம் முதலியவைகளைச் சேர்த்து இந்நூலைப் பதிப்பித்திருக்கும் சரித்திரப் பேராசிரியர் ராவ்பஹதூர் C. S. ஸ்ரீனிவாஸாசாரியாருடைய முயற்சி போற்றத் தக்கது.

## கலைமகள் வெளியீடுகள்—

1. டாகூரின் கடிதங்கள்—

த. நா. ஸேநாபதி மொழி பெயர்த்தது விலை ரூ. 1—4—0

2. வித்துவான் தியாகராஜ செட்டியார்—

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் எழுதியது விலை ரூ. 2—0—0

3. தமிழ்நாட்டில் காந்தி—

டாக்டர் தி. சே. சௌ. ராஜன் எழுதியது விலை ரூ. 1-12—0

4. காவியமும் ஓவியமும்—

கி. வா. ஜகந்நாதன் எழுதியது விலை ரூ. 2—8—0

கிடைக்குமிடம்:-கலைமகள் காரியாலயம் சென்னை

ரவீந்திரநாத டாகூரின் குடும்ப வாழ்க்கையை அறிய விரும்புவோருக்கு ஆவலை ஊட்டக்கூடியது 'டாகூரின் கடிதங்கள்'. இதில் அவர் தம் மனைவிக்கு அப்போதைக்கப்போது எழுதிய 36 கடிதங்களும் அவர் மனைவி எழுதிய 3 கடிதங்களும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் குறிப்பிடப்படும் சம்பவங்களைப் புரிந்து கொள்ளச் சௌகரியமாக, ஸ்ரீ ஹேமலதா தேவியால் எழுதப்பட்ட 'ஸம்ஸாரி ரவீந்திரர்' என்னும் விவரமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சின்னாட்களுக்கு முன் கலைமகள் பத்திரிகையில் முதற்கட்டுரையாக டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்களால் எழுதி வரப்பெற்ற வித்துவான் தியாகராச செட்டியாரைப் பற்றிய விவரங்களைப் புத்தக ரூபமாக இப்பொழுது அவர் குமாரர் S. கலியாண சுந்தர ஐயர் பதிப்பித்திருக்கிறார். இப்புத்தக வாயிலாகத் தமிழ் வித்துவான் தியாகராச செட்டியார் அவர்களது நேர்மையும், கடைப்பிடியும், உதாரமும் வெளியாவதுடன், அவரை உள்ளவாறு அறிந்து புகழ்ந்து போற்றும் ஐயரவர்களது சொல்நயமும் நன்றியறிதலும் நகைச்சுவையும் கலைப் பண்பும் காணக்கிடைக்கின்றன.

தமிழ் நாட்டில் தீண்டாமையை ஒழிக்கத் தக்க பிரசாரம் செய்யக் காந்திஜியை நம் மாகாணத்தில் சுற்றுப்பிரயாணத்தைத் துவக்கும்படி செய்த சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியாருடைய சூழ்ச்சியும் டாக்டர் ராஜன் அவர்களது உழைப்பும் 'தமிழ் நாட்டில் காந்தி' என்ற புத்தகத்தில் விளங்குகின்றன. ஏற்கனவே 'ஆனந்த விகடனில்' தொடர்ச்சியாக வெளிவந்த கட்டுரைகள் தாம் இப்பொழுது புத்தகமாக வெளிவந்திருப்பவை.

காவியத்தின் எல்லைநிலத்தையும் ஓவியத்தின் உள் உணர்வையும் அறிந்து கொள்ள லெஸ்ஸிங்கின் (Lessing) விமர்சனத்தைப் படிக்க வேண்டியதில்லை. ஸ்ரீ ராஜத்தின் ஓவியங்களைப் பார்த்தால் போதும். குறுந்தொகைப் பாடல்களை ஒரு நாடகரூபமாக நம்கண் முன் கொணர்ந்து நிறுத்தும் கி. வா. ஜகந்நாதன் அவர்களை அதிகம் பாராட்டுவதா அவர் கருத்துக்கிசைய ஓவியங்களைத் தீட்டித் தந்த இந்தக் கலைஞரைப் பாராட்டுவதா என்று திகைக்கும்படி நம்மைச் செய்யும் புத்தகம் 'காவியமும் ஓவியமும்' என்பது. இம்மாதரி புத்தகங்கள் அடிக்கடி வெளியாகவேண்டும்; அடுத்தடுத்து வெளியாக வேண்டும்.

சென்னைக் கொதுவைக் கடன்தார்கள் சட்டம் The Madras Pawn Brokers Act. 1944 நவம்பர் மாதம் முதல் அமுலுக்கு வந்துள்ள இச் சட்டத்தைத் தக்க குறிப்புக்களுடனும் விவரணங்களுடனும் திருவள்ளூர் வக்கில் ஸ்ரீ M. S. பார்த்தஸாரதி அய்யங்கார் தமிழில் வெளியிட்டிருக்கிறார். விலை 2-0-0 மதிப்புக்கு விலை குறைவுதான்.

# என்ன அதிர்ஷ்டம்!

'சாரி'

கானல் மலைக்குச் செல்லும் 'பஸ்' புறப்பட இன்னும் சிறிது நேரமேயிருந்தது. வண்டியோட்டியும், பிரயாணத்தை மேற்பார்வை பார்ப்பவனும் சாமான்களைச் சோதித்து, எடைபோட்டு, வண்டியில் ஏற்றும் காரியத்தில் முனைந்திருந்தார்கள்.

ரோகிணி, எம். ஏ. (ஆக்ஸ்போர்டு)க்கு இந்தத் தாமதம் சற்றுக் கஷ்டமாக இருந்தது. "என்னப்பா கண்டக்டர்! எங்கள் ரசீது எங்கே? எந்த இடத்தில் நாங்கள் ஏற வேண்டும்? அல்லது இந்த வண்டியில் எங்களுக்கு இடமே கிடையாதா? அதையாவது சொல்லிவிடு. பூமிதேவியின் பொறுமையில் நாங்களும் கொஞ்சம் பங்கு கேட்டு வாங்கிக் கொள்கிறோம்" என்று ஆத்திரங்கொண்ட பொறுமையுடன் கேட்டாள்.

கண்டக்டர் திரும்பிப் பார்த்தான். வெய்யிலின் கடுமை தாங்காமல் கன்னங்கள் சிவக்கத் தன்னையே உற்றுநோக்கிய ரோகிணியையும் அவள் அத்தை மகள் சந்திராவையும் கண்டான். இவளும் ஒரு எம். ஏ. தான்; ஆனால் ஆக்ஸ்போர்டு இல்லை; வெறும் மதராஸ் யுனிவர்சிடி சரித்திரப் பரீக்ஷையில் எம். ஏ; தேறியவள்.

60 டிகிரியே உஷ்ண நிலைகொண்ட மலைப் பிரதேசம் வெகு சமீபத்தில்—அதாவது 40, 50 மைலுக்குள்—இருந்தும்கூட மலைரோடு என்னும் பெயர்கொண்ட இந்த ஊரில் ஏனோ பிரத்யேகமாய் இவ்வளவு உஷ்ணம்! நல்ல அருங்கோடை; சித்திரைக் கடைசியில் அக்னி நக்ஷத்திரத்தின் அமுல்; இதில் பகல் பன்னிரண்டு மணிவேளை. 600 மைல் பிரயாணஞ்செய்து, ஹைதராபாத்திலிருந்து அப்பொழுதே ரயிலில் வந்து இறங்கிய ரோகிணிக்கு வெய்யில் தாங்காமல் சற்று எரிச்சலும், கண்டக்டர்பேரில் கோபமும் வந்ததென்றால், அதை நாம் கட்டாயம் மன்னிக்கவேண்டும்.

மற்றப்படி ரோகிணியின் தங்கமான குணத்தையும், அழகையும் வர்ணிப்பது எளிதில்லை. தோற்றம் கம்பீரமானது. எளிய முறையில் ஆடையணிந்திருந்தாள் எளிய என்றால் ஏழை என்கிற அர்த்தத்தில் குறிப்பிடவில்லை. ஆடம்பரமற்ற மெல்லிய கதர் புடவை அணிந்து பெயரளவில்கூட ஒரு ஆபரணமுமின்றித் தன்னை அழகு படுத்தி இருந்தாள்; அதுவே அவளுடைய நாசூக்கையும், உள் நாகரிகத்தையும் விளக்கிற்று. ஸதா துருதுருவென்று வட்டமிடும் பெரிய கருங்கண்கள் அஜாந்தா குகைச் சிற்பங்களை நம் ஞாபகத்திற்குக் கொண்டுவந்தன. நகைக்கும் பொழுதே, அல்லது புன்னகை புரிந்தாலுமே கன்னத்தில் தோன்றிய அழகிய குழிகள் முகத்திற்குத் தனிக் களையையும், ஒருவித விஷமத்தோற்றத்தையும் கொடுத்தன. ரோகிணியின் வயது 23.

ஆக்ஸ்போர்டில் எம். ஏ. பரீக்ஷை தேறி நாலைந்து மாதமுன்னால் இந்தியாவிற்குத் திரும்பியவள். சீமையில் வசித்த சமயம் அவள் மனத்தில் அநேக மாறுதல் ஏற்பட்டிருந்தது. பணச்செருக்கையும், பணக்காரரின் பழக்க வழக்கங்களையும் அடியோடு வெறுத்தாள். பொது உடைமைக் கக்ஷியை முற்றிலும் ஆதரித்தாள். கம்யூனிஸ்டு நண்பர் சிலரின் பழக்கத்தின் காரணமாய் அவர்களுடைய கொள்கையும் இவள் மனதைச் சற்றுக் கவர்ந்ததென்றே சொல்லலாம்.

சீமையில் கல்வி பயின்ற இந்திய மாணவரின் கோஷ்டியின் முதன்மை ஸ்தானம் ரோகிணிக்கே உரித்தாயிருந்தது. தாய் நாடு திரும்பியதும், அந்நியரின் ஆதிக்கத்தில் அமுக்கப் பட்ட இந்திய மக்களை எந்த முறையில் கைதூக்கி விடலாம் என்கிற சிந்தனையில் எவ்வளவோ இரவுகளை நித்திரையில்லாமல் கழித்திருக்கிறாள். கணக்கில்லாத அரியபெரிய விஷயங்கள் அவள் மூளையை ஏககாலத்தில் குழப்பின.

ரோகிணிக்குப் பெற்றோர் இல்லை. தாய் மாமனொருவர் ஆந்திர தேசத்தில் சர்க்கார் உத்யோகத்தில் இருந்தார். பிற்போக்கான இவரது நோக்கமும், அடிமை எண்ணங்களும், சீமையிலிருந்து திரும்பிய ரோகிணிக்குச் சற்றும் பிடிக்கவில்லை. அவள் உள்ளத்தை எரித்த சீரிய சிந்தனைக் களஞ்சியத்தை அடக்கிவைத்துக் காக்கவேண்டியதாயிற்று.

"சீச்சி, ஆக்ஸ்போர்டில் இவ்விஷயங்களை டிஸ்கஸ் செய்ய எத்தனை வசதிகள் உண்டு,

இங்கே வந்து இவ்வளவு நாளாகியும், உண்மையில் படிப்பாளியான ஒருவரிடமும் நான் இன்னும் உரையாடவில்லை; என் மனத்தை அமுக்கும் இப்பெருஞ்சுமையை எவ்விதம் குறைப்பேன்? எந்த நலனைத் தேடி ஏழை மக்களுக்கு அளிப்பேன்?" என்று வருந்தினாள். அச்சமயம் தன் அத்தை மகள் சந்திராவின் ஞாபகம் வரவே, அவளுடன் ஒரு கடிதப் போக்குவரத்தும் தொடங்கிற்று.

இரண்டு மாதம் கடிதமூலியமாய்ப் பழகியதில் இருவரிடமும் மற்றவர்பால் அன்பு தோன்றிற்று. சந்திராவும் அப்பொழுதே 'படிப்பை' முடித்திருந்தாள். நல்ல அடக்கமான சாந்த சுபாவமுள்ள பெண். கெட்டிக்காரி. பேச்சிலும், காரியத்திலும் அமைதி சொட்டும். உறவினர் ஒருவரை மணம் புரியத் தீர்மானித்திருந்ததால், தனியே வீடு நடத்தும் திறனைச் சம்பாதித்துக் கொள்வதில் தற்சமயம் முனைந்திருந்தாள்.

இருவரும் கொஞ்சநாள் சேர்ந்திருக்க இஷ்டப்பட்டார்கள். மதராஸில் வசித்த சந்திரா கானல் மலையில் ஒரு சிறு வீட்டை வாடகைக்கு அமர்த்தினாள். அவ்வளவுதான்! மற்ற எவ்வித உதவியும் சௌகரியமும் மலைவாசத்திற்கு அவசியமேயில்லை என்று ரோகிணியின் கடிதம் ஆக்ஞாபித்தது. பொது உடைமை வாதியல்லவா? நாமே வீடு சுத்தம்செய்து, உணவு தயாரித்து, சகல வேலைகளையும் செய்துகொள்ள வேண்டும்; அசௌகரியங்களைப் பாராட்டக் கூடாது என்பது ரோகிணியின் சித்தாந்தம்.

"45 டிகிரி குளிரில் அதிகாலையில் காபி தயார்செய்வது எங்ஙனம்? பிறகு சமையலில் முனைந்தால் ஊரின் காட்சிகளைக் காண்பது எப்பொழுது? மேலும் துணி துவைப்பது, விறகுகொண்டுவருவது இவைபோன்ற முரட்டு வேலைகளைக் கவனிக்கவும் உதவி வேண்டாமென்றால், நம்மால் இதெல்லாம் முடியுமா?" என்று சந்திரா எழுதிப்பார்த்தாள்.

"ஓ! எல்லாம் முடியும்; ஆக்ஸ்போர்டில் இருந்தபொழுது ஒவ்வொரு விடுமுறையையும் இன்னொரு தோழியுடன் நான் கிராம வாசத்தில் கழித்திருக்கிறேன். சகல வேலையும் நாங்களே செய்துகொண்டோம். மேலும், ஏழைகளை வேலையாளராக நாம் அமர்த்தக்கூடாது. நம்மையே அவர்களுடன் ஒன்றாகச் செய்துகொள்ளவேண்டும். கலந்து பழகினால் ஒழிய, வாழ்க்கையின் துயரை நாம் எவ்விதம் அறியமுடியும்?" என்றெல்லாம் செய்தி பறந்தது ரோகிணியிடமிருந்து.

சந்திராவும் சற்று வெட்கிப்போனாள். மேனாட்டில் கல்விபயின்று திரும்பிய தன் மாமன் மகளே இவ்விதம் எளிய வாழ்க்கையில் ஈடுபடும்பொழுது தான் மட்டில் அதற்கு அஞ்சலாமா? மேலும், இது போன்ற ஓர் அனுபவம் தனக்கும் வருங்காலத்திற்குத் தகுந்த பயிற்சியாகும் என்று முடிவுசெய்துகொண்டாள்.

நடந்தது என்னவென்று ஆராய்வோம்.

* * *

இருவரும் கிளம்பினார்கள். முதலில் இவர்கள் தங்களுக்குக்கென்று பஸ்ஸில், தேர்ந்தெடுத்திருந்த 'ஸீட்டில்' ஒரு பிரயாணி தம்முடைய சட்டையை வைத்திருந்தார். சந்திரா ஒதுங்கிப்போய், வேறு இடத்தில் ஏறிக்கொள்ள முயன்றாள். ரோகிணியா விடுவாள்?

"அதென்ன? நமக்கு மட்டும் இதில் பாத்யதை கிடையாதா? இவர்தான் பணம் கொடுக்கிறாரோ?" என்றாள்.

சட்டை பறந்துபோய்ப் பின் ஸீட்டில் விழுந்தது. அந்த இடத்தில் இருவரும் ஏறி அமர்ந்தனர். சட்டையின் சொந்தக்காரர் வந்ததும், இந்தப் பெண்களையும் தம் சட்டையையும் மாறி மாறிப் பார்த்தார், கோபம் வந்தது. ஆயினும் மௌனமாய்ப் பின்புறம்போய் ஏறிக்கொண்டார். ரோகிணி ஒரு வெற்றிச் சிரிப்புச் சிரித்தாள். சந்திரா தன் சிரிப்பை அடக்கிக்கொண்டாள்.

இவர்களைத்தவிர, சில ஹிந்துஸ்தானி பேசும் ஜனங்கள், ஒரு பாதிரியார், ஒரு அமெரிக்க வெள்ளையர், மலையில் கட்டிட மேற்பார்வை பார்க்கும் சில ஆள்கள், 'கிரேஸ்' என்கிற ஒரு கிறிஸ்துவப்பெண் ஆகிய இவர்கள், அன்று கானல் மலைக்குப் பிரயாணஞ்செய்தார்கள்.

அமர்க்களம் ஓய்ந்து வண்டி புறப்படும் சமயம். ஐம்பது பிராயமுள்ள ஒருவர் ஓடிவந்து தமக்கும் எப்படியாவது இடம் தரச் சொல்லிக் கண்டக்டருடன் வாதாடினார். "ஏன் ஸார், இப்படி அவசரத்தில் வந்தால் நான் என்ன செய்வேன்? நீங்கள் ஹோட்டலில் சாப்பிட்டு வரும் வரையில் நாங்கள் காத்திருப்பதா? என்றான் அவன்.

வந்த மனிதரோ நல்ல பணக்காரர் என்று தோன்றிற்று. அவருக்கு இடமில்லை என்று சொல்லத் தைரியமில்லாமல் கண்டக்டர்எல்லோரிடத்திலும் போய்க் கெஞ்சினுன். இதற்குள் முன்தட்டில் இருந்த துரை தயை கூர்ந்து, புன்னகையுடன் தம் பக்கத்தில் இடம் ஒழித்துத் தந்தார். பெரிய மனிதர் ஏறி அமர்ந்ததும், வண்டியும் கிளம்பிற்று.

இந்த நிகழ்ச்சி ரோகிணியின் பொதுஉடைமை உணர்ச்சிக்கு முற்றிலும் விரோதமாக இருந்தது. கண்டக்டருடன் ஒரு வாக்குவாதம் தொடங்கிவிட்டாள்.

"ஏன் ஐயா, இவரே ஓர் ஏழையாக இருந்தால் நீர் இடம் தந்திருப்பீரா?" என்ருள் குறும்பாக.

"ஏழைக்கு முதல் வகுப்பில் பிரயாணம் செய்யப் பணம் ஏது அம்மா? மேலும் இவர் போல் முக்கிய வேலைதான் ஏது?" என்ருன் அவன்.

"இவருடைய முக்கிய வேலையை நீர்தான் கண்டுவிட்டீராக்கும். பெரிய உத்தியோகஸ்தராக இருப்பார். இன்று இடம் தரா விட்டால், நாளைக்குப் புகார் போகும். உம் வேலைக்கு ஆபத்து நேர்ந்தால் என்ன செய்கிறதென்ற பயம்தானே ?" என்ருள் ஏளனமாக; அந்த மனிதரையும் பார்த்து அலக்ஷியமாக விழித்தாள்.

சந்திராவுக்கு மனத்தில் பயமாக இருந்தது. சும்மா இருக்கும்படி ரோகிணிக்குச் சமிக்ஞை செய்து பார்த்தாள். அவள் கேட்டால்தானே?

பெரிய மனிதர் நிஜமாகவேபெருங்குணம் படைத்தவர். அவர் பார்வையில் சாந்தம் குடி கொண்டிருந்தது. காதில் அணிந்திருந்த சிகப்புக் கடுக்கன் முகத்திற்குத் தனித் தேஜஸைக்கொடுத்தது. ரோகிணி துணிச்சலும், அவள் தோற்றமும் ஒருங்கே அவருடைய மனதைக் கவர்ந்தன. புன்னகையுடன் திரும்பி, "அம்மா நீ எங்கிருந்து வருகிருய்? படிக்கிருயா? கானல் மலையில் உன் உறவினர் யார் இருக்கிருர்? இந்தப் பெண் யார்?" என்றெல்லாம் பரிவாகக் கேட்டார்.

ரோகிணிக்கு அவரைச் சற்றும் பிடிக்க வில்லை. ஒரே புளுகு மூட்டையாக அவிழ்த்தாள்! "நானு சாருமதிதேவி, எம். பி. பி. எஸ்; நாகபுரி பெண் வைத்திய சாலையில் டாக்டர். மாதம் ரூ 800 சம்பளம். இவள் என் உறவினருடைய பெண்; பி. ஏ. படிக்




பிரபல டாக்டர்கள் இதை வைத்ய சாஸ்திரத்திற்கே
ஒரு நன் கொடை யெனப் போற்று கிருர்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்பி வேங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராட்வே ரோட், மைலாப்பூர், மதராஸ்,
மற்றும் பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி,
பெங்களூர், திருச்சினுப்பள்ளி.

பிராஞ்சு:

பெரிய தெரு,

கும்பகோணம்.

218548

கிருள். என்னுடன் மலைவாசத்திற்கு அழைத்துப் போகிறேன். அங்கே ஒரு வீடு அமர்த்தியிருக்கிறோம். எங்கள் காருடன் டிரைவரும் சமையற்காரனும் முன்னடியே போயிருக்கிறார்கள்.'' என்றாள்.

சந்திராவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அதோடு அடக்க முடியாத சிரிப்பும் வந்தது. ரோகிணியைத் திரும்பிப் பார்க்கப் பயந்தவளாய் மறுபக்கம் திரும்பிக்கொண்டாள்.

சிகப்புக் கடுக்கன்காரர் விடுவதாயில்லை. "அம்மா நீ கல்யாணம் செய்துகொள்ளவில்லையா? கானல் மலையில் எவ்வளவு நாள் இருப்பீர்கள்?'' என்று மீண்டும் பேச்சுக் கொடுத்தார்.

"ஐயோ, அதை ஏன் கேட்கிறீர்கள்? நான் பால்ய விதவை. 16 வயதில் புருஷனை இழந்தேன். அதன் பிறகே படித்துப் பரீக்ஷை தந்து வேலைக்கு வந்தேன். தற்சமயம் வயது 30 ஆகிறது. நாங்கள் மலையில் ஆறு மாதமாவது இருப்போம்.'' என்று மறுபடி ஒருமுறை பொய்க் கதை கட்டினாள்.

"அடடா, பாவம், பாவம். நான் கேட்டதை மன்னித்துக்கொள்ளு, அம்மா.'' இவ்விதம் உரைத்துப் பெரிய மனிதர் வண்டி போகும் திசையை நோக்கி உட்கார்ந்து கொண்டார். அவர் முகம் வாடித் தென்பட்டது.

"சந்திரா, என் கதை எப்படி? இந்த விதவையின் கதியை நினைத்தால் உனக்குக் கூட பரிதாபமில்லை?'' என்று ரகசியமாய்க் கேட்டு, ரோகிணி சிரித்தாள்.

"நன்றாக இருக்கிறதடீ, உன் பொய். அவரை இப்படி ஏமாற்றிவிட்டாயே; மலையில் எங்கேயாவது மறுபடியும் சந்தித்தால் என்ன செய்வது?''

"சரி, சரி. அதை நினைத்து இப்பவே பயந்து சாகாதே. என்னை இப்படி விசாரிக்க அவருக்கு என்ன உரிமை? அவருடைய பணக்கார தோரணை எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை. ஆகவே ஏமாற்றத் தோன்றிற்று.'' என்று சொல்லிச் சிரித்தாள்.

"எல்லாம் சரிதான். பஞ்சாப் யுனிவர்சிடி புரொபெசர், Dr. ராகவன் Ph. D. அவர்களின் காதலையும், உன் கலியாண ஏற்பாடுகளையும் நினைந்தால், கூசாமல் உன்னை விதவையென்று சொல்லிக்கொள்ள எப்படி மனம் துணிந்தது?''

சந்திராவின் கேள்வி ரோகிணியின் முகத்தில் ஒரு அசட்டுப்புன்னகையை வரவழைத்தது, முகமும் சுண்டிப்போயிற்று. மௌனம் சாதித்தாள்.

பஸ் ஓடிக்கொண்டிருந்ததல்லவா? எல்லோரும் என்ன செய்கிறார்கள் பார்ப்போம். மலைச்சரிவில் மேட்டிலும் பள்ளத்தாக்கிலும் ஓடியது உடலுக்கு—முக்கியமாய் வயிற்றுக்கு—சற்று உபாதையைக் கொடுத்தது. அமெரிக்க துரை வயிற்றைத்தடவிக் கொண்டார்; மடியில்வைத்திருந்த ஒரு குப்பியினின்று ஏதோ திராவகத்தை உட்கொண்டார்; தலை சாய்த்துக் கண்ணையும் மூடிக்கொண்டார். பிரயாணத்தின் அலுப்பு அவரைப் பற்றிக்கொண்டது.

சிகப்புக் கடுக்கன்காரர் தம் வெற்றிலை பாக்குப் பெட்டியைத் திறந்து தாம்பூலம் போட்டு மென்றார்; வழிநெடுக உமிழ்ந்து கொண்டும் வந்தார். பெண்களிடம் மறுபடி சம்பாஷணையை அவர் தொடங்கவில்லை.

பாதிரியார் சோளக்கொண்டையை ஒத்த தம் தாடியைச் சற்றுநேரம் உருவி விட்டார், பிறகு வேத புத்தகத்தைத் திறந்து மடியில் வைத்துக்கொண்டு நிதானத்துடன் பைக்குள் கைவிட்டு வேறொரு மூக்குக்கண்ணாடியை எடுத்து அணிந்தவர், படிக்கலானார். தேக உபாதையை மறக்க இதுவும் ஒரு வழி என்று அவர் முன்பே கண்டுபிடித்திருக்க வேண்டும்! ஆனால் வண்டி ஓடிய விசையிலும் அசைவிலும் படிக்கும் சக்தியை அவருக்கு ஏசுநாதர்தான் அருளியிருக்க வேண்டும்.

கட்டிட வேலையாட்கள் கிரேஸ் என்கிற பெண்ணுடன் வம்புப்பேச்சும், காதல் வார்த்தைகளும் தொடுத்தார்கள். விரைவில் அவர்கள் அனைவருக்கும் கண்மணியானாள், கிரேஸ்! வண்டி நிற்கும் இடங்களிலெல்லாம், அவளுக்கு அன்புக் காணிக்கையாகத் தாழம்பூக்களும், மா, வாழைப்பழங்களும் அவள் மடியில் வந்து குவிந்தன. கதலீ புஷ்ப வதனமும், கண்வலிக் கண்களுமாய் கிரேஸ், சற்றும் பாரபக்ஷமின்றி ஆட்களுடன் சிரித்துச் சல்லாபித்தாள்.

இதை கவனித்த ஹிந்துஸ்தானி ஜனங்கள் ஏதோ தங்களுக்குள் பேசிக்கொண்டனர். கிரேஸின் நடத்தையைக் கண்டனம் செய்வதாகத் தோன்றிற்று. ஏனென்றால் முன்புறமிருந்த பெண்களைக்குறித்து "யேலோக் அச்சீ ஹை'' என்று மெதுவாக அவர்கள் பேசிக்கொண்டது சந்திராவின் காதில் விழுந்தது. அவள் சிரித்தாள்.

இதுகாறும் மௌனம் சாதித்த ரோகிணி, சந்திராவின் சிரிப்பிற்குக் காரணத்தை விசாரித்தாள். விஷயத்தை மெதுவாக இவள் காதில் சொன்னாள், சந்திரா.

திரும்பி ஒரு முறை கிரேஸை வெறுப்புடன் நோக்கிய பிறகு, ஹிந்துஸ்தானி ஜனங்களிடம் உறவு கொண்டாட ஆரம்பித்தாள் ரோகிணி. பொது உடைமை வாதியல்லவா? தங்களை நல்ல ஜனங்களென்று மதித்ததைத் தான் பெரிதும் பாராட்டியதாகச்சொல்லி, அவர்களுடைய ஊர், பெயர் வேலை இவைகளை விசாரித்தாள்.

கானல் மலையில் பட்டு ஜவுளி வியாபாரம் செய்யும் ஒரு வட இந்திய கடை முதலாளியின் வேலையாட்கள் இவர்கள். ஓர் உயர் குலத்துப்பெண் தங்களுடன் வார்த்தையாடியதில் உச்சி குளிர்ந்துபோனார்கள். அதில் ஒருவன் சற்றுப் போக்கிரி. ரோகிணி குழந்தைபோல் தன்னுடன் பேசியதைத் தப்பாக அர்த்தம் செய்துகொண்டான். ஆகவே, சற்று நேரத்தில் ரோகிணி அலுப்புடன் பின்னால் தலைசாய்ந்ததும், தன் கரத்தை அவள் தோளில் போட்டான்.

வந்ததே ரோகிணிக்கு ஒரு கோபம்! அவனை உதறித்தள்ளி, வாயாரத்திட்டினாள். செருப்பை எடுத்து அடிக்கப் புறப்பட்டுவிட்டாள். போக்கிரி வெட்கிப்போய், தலையைக் குனிந்துகொண்டான்.

சந்திராவுக்கு இதெல்லாம் அவமானமாக இருந்தது. "போதுமடி, உன் பொது உடைமை உறவு. வாயை மூடிக்கொண்டு வாயேன்." என்று கெஞ்சினாள். சிகப்புக் கடுக்கன் ஆசாமியும், பரிதாபமான தம் பார்வையை இவள் பக்கம் செலுத்தினார்.

* * *

ஐம்பது மைலையும் கடந்து மலையை அடைந்தார்கள். தபாலாபீசுக்குச் சமீபத்தில் வண்டி நின்றது. ஜனங்கள் இறங்கித் தத்தம் பெட்டி படுக்கைகளைக் கூலிபேசி எடுப்பித்துக்கொண்டு, அவரவர் இல்லம் நோக்கி நடந்தார்கள்.

அப்பொழுது மாலை சுமார் நான்கு மணி இருக்கும், குளிர்ந்த வாடை வீசி உடலை வாட்டிற்று. இன்னும் சில வினாடிகளில் மழை வர்ஷிக்குமோ என்று நினைக்கும் வண்ணம் கருமேகங்கள் கூட்டம் கூட்டமாய்ச் சஞ்சரித்தன.

பிரயாண அலுப்பினால் துவண்டுபோய் ரோகிணி வண்டியினின்று கீழே இறங்கினாள். சந்திரா சற்றே உறைத்த ஆசாமி. இரண்டு கூலிப்பெண்களை அமர்த்திச் சாமான்களைத் திரட்டிக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பினாள். மற்றொரு நாளாக இருந்தால் சாமான் சுமப்பதற்குக் கூலி ஆள்களைப் பேசுவது பணக்காரதோரணை என்று கண்டிக்கக்கூடிய ரோகிணி, அலுப்பினால் இதைக் கவனிக்கவில்லை. தன் அத்தங்காருடன் நடையைக் கட்டினாள். வீட்டையடைந்தார்கள்.

"சந்திரா, எங்கேயாவது ஒரு 'கப்' 'காபி' கிடைத்தால் நன்றாக இருக்குமடி; உடனே சுறுசுறுப்பு வந்துவிடும். பிறகு எல்லா வேலைகளையும் கவனிக்கலாம்." என்றாள் ரோகிணி. அவள் கால்கள் நிற்கவும் சக்தியற்றுச் சோர்ந்தன.

"இதோ, பத்து நிமிஷத்தில் தருகிறேன் பாரு. நீ இந்தக் கட்டிலில் படுத்து இளைப்பாறு." என்று கூறி, அவளைப் படுக்கவைத்துப் பரிவுடன் கம்பளியினால் போர்த்தி விட்டாள் சந்திரா.

நல்ல திடமான சரீரம் வாய்த்திருப்பதும் ஓர் அதிர்ஷ்டம்தானல்லவா? மேலும் சில நாட்களாக வீட்டு வேலைசெய்து பழகியது சந்திராவுக்கு இச்சமயத்தில் மிக்க உபயோகமாக இருந்தது.

ஒரு நொடியில் 'ஸ்டவ்' அடுப்பும் பற்ற வைக்கப்பட்டது. புட்டிப் பாலைத்திறந்து 'ஸ்டேன்ஸ்' காப்பியைப் பத்தே நிமிஷத்தில் தயாரித்து விட்டாள். இரண்டு துண்டு ரொட்டியும், ஒரு கோப்பை சுடச்சுட மணமான காப்பியும் உள்ளே சென்றதும் ரோகிணிக்கு உடலில் தென்பும் சுறுசுறுப்பும் வந்தன. குதித்து எழுந்தாள்.

வீடு முழுவதும் சுற்றிப் பார்த்தார்கள். வீடென்னவோ நன்றாகத்தானிருந்தது. ரோகிணிக்கு ரொம்பவும் பிடித்துவிட்டது. ஆனால் வெந்நீர் அடுப்பும், குழாயும் தோட்டத்தில் ஒரு தனி அறையில் இருந்தது சந்திராவுக்குப் பிடிக்கவில்லை.

"இந்தக் குளிரில் வெந்நீர் அடுப்புப் பற்றவைக்க அதிகாலையில் யாரடி, இவ்வளவு தூரம் செல்வது? அதற்கு மட்டில் ஒரு ஆளாவது அமர்த்தவேண்டும்." என்று ஆக்ஷேபித்தாள்.

"ஐயோ! அதெல்லாம் கூடவே கூடாது. இன்று என்னவோ சற்றுக் களைப்பாக இருக்கிறது. நாளைக் காலையில் நீ விழிக்கு முன்பே வெந்நீர் காபி ரொட்டி எல்லாம்

நான் தயார் செய்து விடுவேன், பாரேன். எனக்கு இதெல்லாம் சீமையில் பழக்கமடீ." என்று ரோகிணி மறுத்தாள்.

பாவம்! உண்மையில் தன்னால் இதையெல்லாம் செய்து வைக்க முடியுமென்றே அச்சமயம் அவள் நம்பினாள். சீமை வேறு, இந்தியா வேறு என்பதும், மனக் கற்பனையில் எளிதாகத் தோன்றும் காரியங்கள், செய்து முடிக்கும் துறையில், முற்றிலும் வேறாக இருக்கக்கூடும் என்பதையும் ரோகிணி அச்சமயம் உணரவில்லை.

கடைசியில், சாமான்களைப் பிரித்து ஒழுங்கு செய்து படுக்கும் இடத்தைச் சரிப்படுத்துவது ரோகிணியைச்சேர்ந்தது; இரவு போஜனத்தை உபாயமாய்த் தயார்செய்வது சந்திராவின் பொறுப்பு என்று இருவரும் வேலையைப் பிரித்துக்கொண்டார்கள்.

அடுப்புப் பற்ற வைத்தாள் சந்திரா. ஒரே ஈர விறகு. ஆகவே புகைந்து தள்ளிக் கண்ணை அவித்தது, நெஞ்சை அடைத்தது. துவையல் அரைக்க அம்மியைத்தேடினாள். தோட்டக்காரன் ஒரு கருங்கல்லைக் காண்பித்தான். அதில் கல்லும் சேர்ந்து அரைபடும் போலிருந்தது. தோட்டக்காரனின் மகன் பால்கொண்டு வந்தான். அவனுக்கு உடலெல்லாம் சிரங்கு, புண். போதாக் குறைக்குப் பால் நிறைய ஈக்களும் தூசியும் மிதந்தன. ஏதோ ஒருவகையில் உணவு தயாரித்துச் சாப்பிடும் அறையில் கொண்டு வந்து வைத்ததும், இரவு மணி ஒன்பது அடித்தது.

இனி ரோகிணி என்ன செய்தாள் பார்ப்போம். ஒரு பழந்துணிகொண்டு தட்டித் துடைக்க முயன்றாள். தரையைப் பெருக்கிச் சுத்தம்செய்ய ஆயுதம் ஒன்றும் தென்படவில்லை. தோட்டக்காரன் ஒரு மிலாறுக் கட்டுக்கொண்டுவந்து தந்தான். அதை உபயோகிக்கும் முறை நமக்கு எப்படித் தெரியும்?

படுக்கையைப் பிரிப்போமென்றால், அதன் தோல்வார்கள் கையைக்கிழித்தன. இரவு உபயோகத்திற்காக ஒருவாளி தண்ணீர் கொண்டுவந்து வைப்பதற்குள் ரோகிணிக்கு மூச்சு நின்றுவிடும் போலிருந்தது.


## ஆச்சரியமான பாதுகாப்பு — — மற்றும் பந்தோபஸ்து

நேற்றைய கனவு........

இன்றைய வாழ்க்கை........

நாளைய நம்பிக்கை........

இவ்விதமாக வாழ்நாள் சென்றுகொண்டிருக்கின்றது.

வாழ்க்கையின் பிரயாணத்தில் உங்களுக்கு நாங்கள் உதவி புரிகிறோம்.

**மொத்த ஆஸ்தி சுமார் 3 கோடிகள்**

## லக்ஷ்மி இன்ஷூரன்ஸ் கோ, லிட்., (லாகூர்)

மதராஸ் பிராஞ்ச்:
4/105, அரண்மனைக்காரத்தெரு, ஜி. டி.

ஸி. ஆர். சேஷன், M. A.,
பிராஞ்ச் மானேஜர்.

ஹைதராபாத் பிராஞ்ச்:
அபித் ரோட், (டெக்கான்)

இதற்குள் தோட்டத்தின்வழியே போய்க்கொண்டிருந்த ஒருபேப்பர்காரப்பையனைக் கண்டாள். அன்று முழுவதும் பத்திரிகையையே காணாத ரோகிணிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. பையன் ஸ்வராஜ்யா பத்திரிகையைத் தினமும் கொணர்ந்து தருவதாக வாக்களித்ததும், ஒருபுதையல் கிடைத்தது போல் குதித்தாள்.

கட்டிலில்அமர்ந்து பத்திரிகையைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தவள், இரவு ஒன்பது மணி வரையில் தலை நிமிரவில்லை. சந்திரா புகையினால் சிவந்த கண்களுடன் உள்ளே நுழைந்தபொழுது அவள் கண்ட காட்சி சிரிப்பை மூட்டிற்று.

படுக்கையும் கம்பளிகளும், பிரித்தும் பிரிக்காமலும் கீழே கிடந்தன. பெட்டிகள் அனைத்தும் திறந்தும், பட்டுப்புடவைகளும் தாவணிகளும்.அறை முழுவதும் சிதறியும் கிடந்தன. அங்கிருந்த ஒரு பீரோவில் வீட்டுக்காரர் வைத்திருக்த பீங்கான் தட்டுக்களும், கோப்பைகளும், பாதி சாப்பாட்டு அறையிலும். பாதி பீரோவிலுமாய்க்காட்சி தந்தன. அறை முழுவதும் குப்பை கூளம் வேறு!

“சந்துரு, இதோ பாரு. Mr. ராகவன் Y. M. C. A. கூட்டத்தில் ‘இந்தியாவில் பொதுஉடைமை’ என்பதைப்பற்றிப் பேசியிருக்கிறார். என்ன அழகான பிரசங்கம், இங்கேவந்து உட்கார். நான் படிக்கிறேன்; கேட்டபின் உன்அபிப்பிராயம் சொல்ல வேண்டும்,” என்று ரோகிணி கூறியது சந்திராவுக்குப் பொறுக்கவில்லை. அவளுடைய பலவீன நிலைமையில் ஒருகுரல் அழலாமாவென்று தோன்றிற்று.

ஆயினும், இளமைக்குரிய சக்தியைக் குறைக்க யாரால் முடியும்? தன் அம்மங்காரின் உத்சாகத்தைக் கெடுக்க அவளுக்கு மனம்வரவில்லை. ரோகிணியின் வெகுளித்தனம் அவள் மனத்தை முற்றிலும் கவர்ந்தது. சிவந்த அவள் கன்னங்களை வருடியவளாய், “அடி அசடே, எழுந்திரு, சாப்பாடு தயாராகி விட்டது. அதை முடித்துக்கொண்டு, இந்தஅறையின் அலங்கோலத்தையும் ஒழுங்கு படுத்தியபின் நாமிருவரும் கட்டிலில் படுத்த வண்ணம் பிரசங்கத்தைப் படிப்போம். எனக்குப் பசி காதை அடைக்கிறது.” என்று சொல்லிச் சிரித்தாள்.

அன்றிரவு மிளகு ரசமும், தேங்காய்த் துவையலும். கொள்ளுக்காய் கறியும் பிரும்மானந்தமாக அமைந்திருந்தன என்று இருவரும் ஒப்புக்கொண்டார்கள். ரோகிணியின் மனதில் தன்னுடைய பொதுஉடைமைப் பற்றுதலெல்லாம் வெறும் சித்தாந்தமே தவிர நடைமுறையில் அது ஏட்டுச்சுரை தானோ என்கிற ஒரு சந்தேகமும் தோன்ற ஆரம்பித்தது. மறுநாள் முழுவதும் தானே சகலவேலையும் செய்து, சந்திராவுக்கு ஓய்வு கொடுப்பதென்று நிச்சயித்துப் படுக்கைக்குச்சென்றாள்.

*   *   *

மறுநாட் காலையில் ரோகிணி கண்விழித்த சமயம் மணி 8—45! சமையற்கட்டிலிருந்து நெய்த்தோசையின் மணம் ஜோராக வந்தது. தன் சோம்பலைச் சபித்துக்கொண்டே, அவசரத்தில் எழுந்தாள்.

ஸ்நான அறையில் சுடுதண்ணீர் தயாராக வைக்கப்பட்டிருந்தது. விரைவில் குளிப்பை முடித்துக்கொண்டு சாப்பாட்டு அறையில் நுழைந்தாள். மேஜைமீது, சூடான காபியும், தோசையும், பழங்களும் அலங்காரமாய் வைக்கப்பட்டிருந்தன. தன் தோழியைத் தேடினாள்.

தோட்டத்தில் சந்திராவின் குரல் கேட்டது. குளித்துப் புதுஆடையணிந்து, தலைசீவி, நறுமலர்களைக் கூந்தலில் செருகியிருந்தாள். கீழே குனிந்தவண்ணம் அவள் என்ன செய்கிறாள், பார்ப்போமென்று ரோகிணி சமீபத்தில் போனாள். தோட்டக்காரனின் நான்கு வயதுப்பிள்ளையை ஒரு பலகைமீது படுக்கவைத்து, அவன் சிரங்குகளைத் துடைத்து மருந்துபோட்டுக் கட்டிக்கொண்டிருந்தாள் சந்திரா!

அம்மங்காரைப் பார்த்ததும் சற்று வெட்கத்துடன் “ஓ, நீ தயாராகிவிட்டாயா? இதோ வந்துவிட்டேனடி” என்று சொல்லிக்கொண்டே தன் வேலையை அவசரமாக முடித்தாள்.

ரோகிணியின் கண்கள் ஆச்சரியத்தினால் விரிந்தன. “ஆஹா, என்ன மனப் பண்பு இவளுக்கு! அக் குழந்தையின் புண்ணைத் தொட்டுத் தன் கையால் மருந்து தடவவும் துணிந்தாளே. இதுவன்றோ உண்மையான Socialism! நான் பேசுவதும் பிதற்றுவதும் ஏட்டுச் சுரைக்காய்தான்; அதில் சந்தேஹமென்ன?” என்று எண்ணி மனம் சோர்ந்தாள்.

“ரோஹீ! நீ இவ்வளவு உயர் படிப்புப் படித்தும் ஏழைகளின் கதிக்கு மனம் இரங்குவது என் மனதைக் கவருகிறதடீ.

என்னால் முடிந்ததைச் செய்வோமென்று நேற்றுமுதல் முனைந்தேன். இதெல்லாம் தப்பிதமானால் என்னை மன்னித்து விடடீ.' என்று சந்திரா கெஞ்சினாள்.

''மன்னிப்பதா? இங்கிருந்து கிளம்புமுன் உன்னை உட்காரவைத்துச் சகல வேலைகளையும் நானே செய்யக் கற்றுக்கொண்டால் தான் என் பாபத்திற்குப் பிராயச்சித்தம் ஆகும். நான் ஓயாமற் பேசுவதை அறவே ஒழித்து, அழகிய செய்கையில் என் கருத்தை வெளியிடவேண்டும். அதுவே உண்மைத் தொண்டும் சேவையுமாகும்.'' என்றாள் ரோகிணி. அவள் அதை நிறைவேற்றினாள் என்பதை நான் சொல்ல அவசியமில்லை.

* * *

இதன் பிறகு நாலைந்து நாட்களாயின. ஒரு தினம் மாலையில் ஒரு தந்தி வந்தது. "அப்பா சம்மதிக்கிறார். உன்னைக் காண விரும்புவதால் உடனே சென்னைக்கு வா. நானும் வருகிறேன். அன்பு. ராகவன்.'' என்றிருந்தது.


# கண்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்

ஜாய் கெமிகல் ஒர்க்ஸ் தயாரிக்கும்

## ஐரிட் (EYERIT)

காடராக்ட் என்னும் கொடிய நோயை அகற்றி, கண் பார்வையை அதிகரிக்கச்செய்கிறது. மிகவும் பிரசித்தமானது. காடராக்ட் ஆரம்பத்திலேயே இதை உபயோகித்தால் அதிக பலன் தரும். ஒபாஸிடி கார்னியா குளுகோமாவினால் கண் பார்வையின்மை கண் நரம்புகள் கெட்டுப்போனதினால் ஏற்படும் வியாதிகள், எல்லாக் கண் உபாதிகளுக்கும் கைகண்ட ஔஷதம்.

காடராக்ட் ஆபரேஷனுக்குப் பிறகும் உபயோகிக்கலாம். பார்வையைத் தெளிவுபடுத்தும். நீண்டு தொடர்ச்சியாக உபயோகித்தால் கண்ணாடி போடவேண்டிய நிர்ப்பந்தம் திரும்.

| | | |
|---|---|---|
| 2 டிராம் | ... | ரூ. 1—4—0 |
| 4 டிராம் | ... | ,, 2—0—0 |

ஒரு ஜர்மன் தொழிற்சாலையில் வேலை செய்த அனுபவத்தினால் ஹோமியோ & பயோ-கெமிக் மருந்துகளை நாமே பரிசுத்தமாகத் தயாரிக்கிறோம். உங்கள் தேவைக்கு எழுதுங்கள்.

**Dr. R. Mohalanovis,**
**P. O. Box No. 10013,**
**கல்கத்தா.**


ரோகிணி ஆனந்த மிகுதியால் சந்திராவைக் கட்டிக்கொண்டு குதித்தாள். ராகவனும், தானும் முதலில் ஆக்ஸ்போர்டில் சந்தித்ததும், காதலித்ததும், என்றும் மறப்பதில்லை யென்று இருவரும் சபதம் செய்ததும் இன்றுபோல் தோன்றின. நினைத்து ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். ராகவனும் 4 மாத முன்பு இந்தியாவிற்குத் திரும்பிய தன் காதலியை ஒரே முறை மட்டும், பம்பாய்த் துறைமுகத்தில் சந்தித்தான். பிறகு கடிதப் போக்குவரத்து மட்டில் நடந்தது. தந்தையின் சம்மதம் கிடைத்தது என்பதைப் பெரும் பாக்கியமாகக் கருதினார்கள், இவர்கள்.

மலைவாசம் முற்றுப் பெற்றது! சந்திராவுக்குச் சற்று வருத்தமாக இருந்தபோதிலும் தன் அம்மங்காருக்குக் கலியாணமென்கிற நினைப்பில், உற்சாகமே மேலோங்கி நின்றது.

கொண்டுவந்த சாமான்களை அன்றிரவே கட்டித் தயார்செய்தார்கள். தோட்டக்காரனுடைய குடும்பத்திற்குப் பணப் பரிசும் நிறையச் சாமான்களும் கொடுக்கப் பட்டன.

ரோகிணி ஆனந்தத்தில் மிதந்தாள். எந்த விதத்தில் நடந்து தன் காதலனின் தந்தைக்குத்திருப்தியளிக்கலாம் என்று எண்ணமிட்டாள். ஆகவே பிரயாணத்தின் சகல ஏற்பாடும் சந்திராவைச் சார்ந்ததாயிற்று. ரோகிணியையும் நாம் இச்சமயம் குறை கூறலாமா?

மறுநாட்காலையில் 8-மணிக்கு 'பஸ்' ஸ்டாண்டிற்கு வந்து சேர்ந்தார்கள். புறப்படச் சிறிது நேரமேயிருந்ததால், அவசரத்தில் சாமான்களை ஏற்றித் தாங்களும் தகுந்த இடத்தில் அமர்ந்தார்கள். மற்றப் பிரயாணிகளை இவர்கள் கவனிக்கவேயில்லை. ஒருவேளை கவனித்திருந்தாலும், ரோகிணியின் மனக்கிளர்ச்சியில், அவர்களையும் அவர்தம் அசட்டுக் குற்றங்களையும் அவள் பொருட்படுத்தியிருக்கமாட்டாள்.

உலகமே ஒரு பொன்மயமான பிரதேசம் போலல்லவா அவளுக்குத் தற்சமயம் தோன்றிற்று. அதில் யார் என்ன குற்றம் செய்திருந்தால்தான் என்ன வந்துவிட்டது?

வண்டியும் கிளம்பிற்று. அதுவரையில் இவர்களுக்குமுன் வரிசையில் அமர்ந்திருந்த ஒருவர் இவர்கள் பக்கம் திரும்பவேயில்லை. இப்பொழுது புன்னகையுடன் இவர்களை நோக்கி "என்ன டாக்டரம்மா, மலை வாசம் முடிந்து விட்டதாக்கும். சௌக்யந் தானே?'' என்றார்.

உங்கள் சௌந்தர்யத்தைக்

காப்பாற்றிக் கொள்ளுங்கள்




ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ், லிமிடெட், பம்பாய் 15

இருவரும் திடுக்கிட்டுத் தலைநிமிர்ந்தார்கள். அதே சிகப்புக் கடுக்கன் ஆஸாமி தான்! "மீண்டும், கோபிக்கவேண்டாம். நான்கூட இன்னும் இரண்டுவாரம் இங்கே தங்க நினைத்திருந்தேன். காரியங்கள் சரியாக நிறைவேறவில்லை. ஆகவே என் பிள்ளைக்காவது திருப்தியாக இருக்கட்டுமென்று நினைத்து, ஒரு தந்தியடித்துவிட்டு இன்று மதராஸுக்குக் கிளம்பிவிட்டேன். அதே போல் உங்களுக்கும் ஏதாவது அவசரக் காரியம்........."என்று இழுத்தார்.

ரோகிணி இதற்குள் தன்னைச் சமாளித்துக்கொண்டாள். "இவரிடம் எனக்கென்ன பயம்? பொய்தான் சொன்னதாக ஒப்புக்கொண்டாற் போயிற்று. மேலும் இவருடைய விஷயங்களைத்தான் தெரிந்து கொள்ளுவோமே" என்று நினைத்தவளாய், அவரைத் தன் குறும்புப்பார்வையுடன் நோக்கிச் சிரித்தாள்.

பிறகு "உங்கள் பிள்ளை என்றீர்களே, என்ன விசேஷம்? நான் கேட்கலாமோ?" என்றாள்.

"ஓ தாராளமாக—அவன் சீமையில் நம் தேசத்துப் பெண் ஒருத்தியைக் காதலித்தானாம். அவள் திரும்பிவந்ததும் அவளையே மணப்பேனென்று பிடிவாதம் செய்கிறான். எனக்கு இதுகாறும் சம்மதமில்லை. கடைசியில் என் மனமும் சற்றுத் தளர்ந்துகொடுத்தது. அந்தப் பெண் இங்கு வந்திருப்பது தெரியவந்ததின்பேரில் ஒரு யுக்திசெய்தேன். நானும் இங்கே வந்து, ஒருவருக்கும் சொல்லாமல் அந்தப் பெண்ணுடன் பழகி, அவளை நன்கு அறிந்து அப்பால் என் சம்மதத்தைத் தருவதென்று தீர்மானித்துப் புறப்பட்டும் வந்தேன். என் தந்திரம் பலிக்கவில்லை. அந்த மாதிரி ஒரு பெண் இந்த ஊரில் வந்திருப்பதாகவே தெரியவில்லை. அவளைச் சென்னைக்கு வரவழைக்கச்சொல்லி என் மகனுக்குத் தந்தி கொடுத்தேன்—நானும் இதோ கிளம்பிவிட்டேன்." என்று சொல்லி நகைத்தார்.

இதைப் பாதி கேட்டதுமே ரோகிணிக்கு முகம் வெளுத்தது. கைகள் நடுங்கின. சந்திராவைப் பார்த்தாள். அவள் அடுத்த நிமிஷம் சிரித்துவிடுவாள் போலிருந்தது; அவளுடைய விரலைப்பிடித்துக் கிள்ளிக்கொண்டே, "நானும் சீமையிற் படித்தவள். உங்கள் மகன் பெயரும் வேலையும் என்ன?" என்றாள். குரல் நடுங்கிற்று. சிகப்புக் கடுக்கன்காரர் இவளைக் கூர்ந்து கவனித்தார்.

"ராகவன், டாக்டரேட் எடுத்தவன்; பஞ்சாப்யுனிவர்ஸிடியில் புரொபசராக இருக்கிறான்." என்று ஒருபதிலைத் தூக்கி எறிந்தார்.

சந்திரா விக்கிவிக்கிச் சிரிக்க ஆரம்பித்துவிட்டாள். "ரோகிணி! சபாஷ். உன் மாமனாரை நமஸ்காரம் பண்ணடி. 'பஸ்' ஓடினாலும் பரவாயில்லை. அவரை நீ ஏமாற்றியதற்கு எத்தனை சலாம் போட்டாலும் போராதே?" என்றாள்.

ரோகிணியின் முகம் குபீரென்று சிவந்தது; முகத்தில் வியர்வை அரும்பி, பலவீனமடைந்தாள். உடல் நடுங்கிற்று. கண்களில் நீர் நிறைந்ததை மறைக்கும் உத்தேசத்தில் தலையைக் கவிழ்ந்துகொண்டாள். மேலும், சிகப்புக் கடுக்கன்காரரின் பார்வையைத்தான் அவள் எப்படிச் சந்திப்பாள்?

பதட்டத்தில் ராகவனை மனதில் நினைத்துக்கொண்டாள். அவனுடைய படமும், தனக்கெழுதிய சில கடிதங்களையும் வைத்திருந்த தன் பையை இறுகப்பிடித்துக்கொண்டாள். அதுவே தனக்குத் தைரியமளிக்கும் சாதனமென்று நினைத்தாள் போலும்!

'பஸ்ஸே' அதிர்ச்சியில் ஆடும்போல் ஒரு சிரிப்புக்கேட்டது. எதிர் ஸீட்டிலிருந்து ஒரு கை நீண்டுவந்து ஆதரவுடன் ரோகிணியின் முகத்தை நிமிர்த்திக் கன்னங்களை அன்போடு வருடியது. இரண்டு சாந்தமான விழிகள் அவளைப் பார்த்துப் பூரித்தன.

"ரோகிணி! என் ராகவனுக்கு எல்லா விதத்திலும் நீ தகுதியானவள் அம்மா. பயப்படாதே, எந்நாளும் இந்த வேடிக்கையை நான் மறக்கமாட்டேன். உன்னை நான் ஏமாற்றப்பார்த்தேன்; நீ என்னையே மடக்கிவிட்டாய். ஆனால் உன் குறும்புதனத்தைப் புகழ்ந்து பன்முறை ராகவன் என்னிடம் சொல்லியிருந்தும் நான் அதை எவ்வாறு மறந்தேன்? எனக்கே தெரியவில்லை." என்றது ஒரு குரல்.

ரோகிணியும் நிதானத்திற்கு வந்தாள். அவர் கையைப்பற்றிப் பக்தியோடு தன் கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

சிலபேருக்கே தனிப்பட்ட ஓர் அதிருஷ்டம் ஆயுள் முழுவதும் தொடருவதுண்டு. நீங்கள் அதைக் கவனித்திருக்கிறீர்களா? அந்தக்குருட்டு அதிர்ஷ்டத்தைப் பூர்ணமாக பெற்றிருந்தாள் நம் ரோகிணி. பலவிதக் குழப்பத்துடன் தொடங்கிய அவளுடைய மலைவாசம் மின்னல் வேகத்தில், ஆனால் இனிதாய் முடிவடைந்தது. வாழ்க்கையிலும் அவள் இனிமையே காண்பாள் என்பதில் என்ன சந்தேகம்?

# சங்க மித்ரை

வேங்கடலட்சுமி

இரவு நடுநிசி. நீலவானின் உச்சியிலிருந்தான் பிறைமதி. கண்ணைப் பறிக்கும் வைரப் பொட்டுக்களெனத் தாராகணங்கள் மின்னின. வெளியே வீசிய மலய மாருதம் விருக்ஷங்களின் கிளைகளை மெல்ல மெல்ல அசைத்துச் சென்றது.

மஞ்சத்திற் படுத்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள் வித்யாதேவி. கலிங்கத்து அரசனான காமரூபனின் பிரதம சேனாதிபதி அதிரூபனின் மனைவி அவள். கலிங்க தேசத்திலேயே அவளுக்கீடான அழகிகள் கிடையாது. அத்துடன் சகல கலைகளிலும் பாண்டித்யமுடையவள்.

பக்கத்து அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலவிக்கொண்டிருந்தான் அதிரூபன். கண்ணைக் கவரும் கட்டிளங்காளை அவன். அழகி வித்யாதேவிக்கேற்ற அழகன்தான்.

கவலையினால் அவன் முகம் வெளுத்துக் காட்டியது. காரணம்? சற்று முன்பு அரசன் காமரூபனிடமிருந்து அவனுக்குக் கிடைத்த உத்தரவே. பூரண கர்ப்பிணியான தன் மனைவியிடம் அதை எவ்வாறு தெரிவிப்பது?—அதை எண்ணவே அவன் மனம் கூசியது. இரண்டொருதரம் அவ்விடுதிக்குள் நுழைந்து தன் மனைவியை எழுப்பி விஷயத்தைக் கூறிவிட எண்ணினான். ஆனால் சிறு குழந்தையைப்போல் கவலையற்றுறங்கும் அவளுடைய அழகிய முகம் அவனுடைய மனோதைரியத்தைக் குலைத்துவிட்டது.

விடியற்காலை வரையில் ஏதேதோ யோசித்துக்கொண்டே உலவிக்கொண்டிருந்தான். வெளியே கிழக்கு வெளுக்கும் சமயமாகி விட்டதையறிந்தான். சாளரத்தின் திரைகளை விலக்கிப் பார்த்தான். நீல விசும்பின் கீழ்த் திசையில் காணப்பட்ட பொன்னிறம் பரிதியின் வருகைக்குக் கட்டியங் கூறியது.

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தான்.

வித்யாதேவி உறங்கிக்கொண்டிருந்த அறைக்குள் நுழைந்தான். மஞ்சத்தண்டை சென்றான். கலக்கமுற்ற மனதுடன் அழகிய அவள் முகத்தை நோக்கியபடி ஒரு கணம் நின்றான். ஏதோ கனவு கண்ட பாவை உறக்கத்தில் முணுமுணுத்தபடியே புரண்டு படுத்தாள். லேசான இள முறுவலொன்று அவள் வதனத்தில் நிலவிற்று.

அதிரூபனின் கண்கள் வேதனையினால் மின்னின.

அவன் நெஞ்சம் வேதனையினால் குமுறியது.

மெல்ல மஞ்சத் தண்டை சென்றான்.

"வித்யா! எருந்திரு—உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் கூறவேண்டும்."

அவனுடைய கைகளின் ஸ்பர்சம் பட்டவுடன் அவளுடைய விழிகள் திறந்தன. அவனை வியப்புடன் நோக்கினாள். அவ்விழிகளில் ஒரு பிரகாசம்.

"வித்யா!...என் கண்மணி! எழுந்திரு தாமதிக்க நேரமில்லை" அவளுடைய கண்கள் ஆச்சர்யத்தினால் விரிந்தன. அடுத்த வினாடி அவற்றில் ஒரு கலக்கம். சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள். அவனைத் திகைப்புடன் நோக்கினாள். "நாதா! என்ன இது? எங்கே போகப்போகிறீர்கள்?"

அவளை அன்போடு அணைத்தபடியே மஞ்சத்திலுட்கார்ந்தான் அதிரூபன்.

"வித்யா!... அசோக சக்ரவர்த்தியின் படைகள் மகாநதிக்கரையில் வந்து இறங்கிவிட்டனவாம். என்னை நம் தேசப்படைகளுடன் உடனே எதிர்க்கத் தயாராகும்படி அரசரிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறது... நான் இப்பொழுதே போகவேண்டும்" அவன் பேசிக் கொண்டிருக்கையிலேயே வித்யா தேவியின் விழிகளில் நீர் நிறையலாயிற்று. அப்படியே காம்பொடிந்த மலர்போல் அவன் மார்பில் சாய்ந்தாள்.

"நாதா!......நீங்கள் போய்விட்டால்...... நான் இங்கு இந்நிலையில் எவ்வாறு தனியாகக் காலம் தள்ளுவேன்?......நீங்கள்...... இப்பொழுதே போகவேண்டுமோ?"

அதிரூபனின் நெஞ்சம் கலங்கித் தவித்தது. ஒன்றும் பேசமுடியாமல் அவளை அப்படியே தழுவிப் படுக்க வைத்துவிட்டு அறைக்கு வெளியே வந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் உடல் முழுதும் கவச

மணிந்து இடுப்பில் செருகிய வாளுடன் உள்ளே நுழைந்தான்.

வித்யாதேவி மஞ்சத்திற்படுத்து நெஞ்சு விரியும் துயரத்துடன் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தாள்.

இரண்டொரு வினாடி ஸ்தம்பித்து நின்றான் அதிருபன்.

வெளியே தாரை, தப்பட்டை, கொம்பு முதலியவைகள் முழங்கின.

சட்டென்று தன் நினைவை யடைந்தவனாய் ......வித்யா!......நான் போய்வருகிறேன்', என்று தழுதழுத்த குரலிற் கேட்டபடியே அவளை இறுகத் தழுவினான்.

"நாதா!......சுகமே.........போய் வாருங்கள்;"

அவள் மெல்லிய உடல் துவண்டது. விழிகளில் நீர் அருவி போற் புரண்டது.

அதிருபனின் நெஞ்சம் அவளுடைய நிலைமைக்காக இரங்கித் தவித்தது.

"என் கண்மணி!......வருந்தாதே,......... மனதைத் தைரியம் செய்துகொள்"—

நீர்த்திரையிட்ட விழிகளுடனும் துடிக்கும் உதடுகளுடனும் அவனை ஏறெடுத்துப் பார்த்தாள்—பேதை,

சொல்லொணா மனோ வேதனையுடன் அவனுடைய அழகிய முகத்தை நோக்கியபடியே அறையைவிட்டு வெளியே சென்றான் அதிருபன்.

மாளிகை வாயிலில் தயாராகச் சேணமிட்டு வைக்கப்பட்டிருந்த குதிரை மீது ஏறிக்கொண்டான். ஒருவினாடி திரும்பித் தன் மனைவியின் அறைச்சாளரத்தை நோக்கினான். கண்ணீர்க்கரையோடிய முகத்துடன் நின்றிருந்த வித்யாதேவியின் உருவம் தெரிந்தது. வெம்பிய ஹிருதயத்துடன் குதிரையைத் தட்டிவிட்டான். குதிரை அங்கிருந்து மின்னலைப்போல் மறைந்தது.



# வின்ஸென்ட் கம்பெனி லிமிடெட், திருச்சி.

பிராஞ்சுகள்: } மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி, கும்பகோணம், கோயம்புத்தூர், சேலம்.

வின்ஸென்ட் ஸோடா, கலர், விம்டோ, ரொட்டி, கேக்குகளை எல்லோரும் தாராளமாய் வாங்கி, குடும்பத்தில் யாவருக்கும் பந்துமித்திரர்களுக்கும் கொடுங்கள். ஏனெனில், இவைகள் கடந்த 30 வருஷமாய், பொதுஜனங்களின் நன்மதிப்பை நன்றாய் அடைந்திருக்கும் வின்ஸென்ட் கம்பெனியாரால் தயார் செய்யப்பட்டவை. மேலும் ஷை சரக்குகள் கல்யாணம், டீபார்ட்டி, திருவிழாக் காலங்களிலும் விருந்தினர்களுக்குச் சிற்றுண்டியாக வழங்க நேர்த்தியாய் அமைந்துள்ளன.

— 2 —

அடுத்த பதினைந்தாவது தினம் அந்தி மயங்கும் வேளை. பாடலிபுரத்தில் அசோக சக்கரவர்த்தியின் அரண்மனை. சக்கரவர்த்தி தமது ஏகாந்த விடுதியில் ஒருமஞ்சத்திற் சாய்ந்து உட்கார்ந்திருந்தார். அவரெதிரில் நின்றிருந்தாள் இளவரசி சங்கமித்ரை.

அவ்வறை முழுதும் பலவிதமான விலையுயர்ந்த பொருள்கள் இறைந்திருந்தன. பொன்னும் மணியுமிழைத்த ஆபரணங்களும், முழுதும் பொற்சரிகையினுல் நெய்யப்பட்ட உயர்ந்த பீதாம்பரங்களும், அபூர்வ வேலைப்பாடமைந்த தங்கத்தினுலான விநோதப்பொருள்களும் அங்கே குவிக்கப்பட்டிருந்தன.

ஆனுல் இளவரசி அவற்றைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அவளுடைய விழிகள் தரையிற் பதிந்திருந்தன.

"குழந்தாய்!" என்ருர் சக்கரவர்த்தி.

இளவரசி தலை நிமிர்ந்து அவரை நோக்கினுள்.

"குழந்தாய்!...... இப்பொருட்கள் யாவும் கலிங்கநாட்டிலிருந்துவந்தவை. இவற்றில் உனக்கு விருப்பமானவற்றை எடுத்துக்கொள்; அதற்காகவே உன்னை நான் இப்பொழுது அழைத்தேன்" என்ருர்.

அளவற்ற பெருமையும் பெருமிதமும் அவர் குரலில் தொனித்தன.

இளவரசி ஒன்றுமே பதில் கூறவில்லை. அசையாக் கற்சிலையாய் நின்ருள்.

சக்கரவர்த்தியின் முகத்தில் வியப்புக் குறிகளுண்டாயின.

"குழந்தாய்!...... ஏன் பேசாமலிருக்கிருய்? இவையொன்றையும் நீ விரும்பவில்லையா?"

வேதனை தோய்ந்த விழிகளுடன் அவரை ஏறெடுத்து நோக்கினுள் சங்கமித்ரை.

"தந்தையே!"......

சோகம் பொங்கித் ததும்பிய அவள் குரல் சக்கரவர்த்தியைத் திடுக்கிடச் செய்தது.

"தந்தையே!...... இவையொன்றையும் நான் விரும்பவில்லை; இவற்றை என் விரலாலும்கூட நான் தீண்டேன்!...... அந்தோ மகா உன்னதமான மௌரிய சாம்ராஜ்யத்தின் ஏகசக்கராதிபதியான தமக்குஇன்னும் இந்த நாடாசையும் பொன்னுசையும் போகவில்லையா!......... இப்பொருட்களுக்காக எவ்வளவு ஏழை மக்கள் தம் உயிரையிழந்தனரோ! எவ்வளவு இரத்தம் சிந்தப்பட்டதோ! கலிங்கத்தரசனை காமரூபனும் ஒப்பற்றவீரனெனப் புகழ்வாய்ந்த அவனுடைய சேனுதிபதியான அதிரூபனும் மாண்டுவிட்டார்களாமே!...... பூரண கர்ப்பிணியான அவன் மனைவி வித்யாதேவி நேற்றுப் பாடலிபுரத்துக்கு வந்து தன் தந்தையிடம் அடைக்கலம் புகுந்திருக்கிருள்.......அவளைக் கண்டதுமுதல் என் மனம் படும்பாடு அந்த இறைவனுக்குத்தான் தெரியும்! தந்தையே!...... இப்போரில் மாண்டுபோன உயிர்களில் ஒன்றையேனும் திருப்பிக்கொண்டுவரத் தங்களால் இயலுமா? தங்களால் உயிர்ப்பிக்கமுடியாதவற்றைக் கொன்று குவித்தது தர்மமா?......... இப்பாபத்தை எவ்வாறு களையப்போகிறீர்கள்?......... எவ்வளவோ அழகான மாட மாளிகைகள் நிறைந்து வளம் ததும்பிச் செல்வம் கொழித்துக் கொண்டிருந்த கலிங்கநாடு இப்பொழுது வறண்ட பாலைவனமாய்விட்டதே!......... கோடிக்கணக்கான உயிர்களின் இரத்த வெள்ளத்தில் தோய்க்கப்பட்டவையல்லவா இங்குக் குவிக்கப்பட்டிருக்கும் போகப் பொருட்கள்!...... இவற்றைக் காணவும் என் கண்கள் கூசுகின்றனவே!... அஹிம்சா தர்மத்தை உலகோர்க்குப் போதித்த புத்த பகவான் பிறந்த இந்நாட்டில் இவ்வன்னியாயம் நடக்கலாமா!" அடக்கமுடியாத உணர்ச்சி வெள்ளத்துடன் அவளது ஹிருதயத்தைப் பிறிக்கொண்டு வந்த இச்சொற்கள் சக்கரவர்த்தியைப் பலவிதமான கலக்கங்களுக்காளாக்கிவிட்டன.

ஒன்றுமே பேச நாவெழாமல் எதிரே நின்ற சோகபிம்பமான பாலிகையை நோக்கியபடியே திகைப்புடன் அசைவற்று உட்கார்ந்துவிட்டார்.

இளவரசியின் விழிகளில் தாரைதாரையாய் நீர் பெருகியது. அடக்கொணுத் துயரத்தினுல் அவள் ஹிருதயம் வெடித்துவிடும்போலிருந்தது. மார்பை ஒரு கையால் அழுத்தியபடியே எதிரில் உட்கார்ந்திருந்த சக்கரவர்த்தியை நீர்த்திரையிட்ட விழிகளால் நோக்கினுள்.

தழுதழுத்த அவள் மெல்லிய குரல் மீண்டும் அவ்விடுதியின் நிச்சப்தத்தைக் கலைத்தது.

"தந்தையே! இப்பொருட்களையெல்லாம் ஏழைகளுக்குத் தானமாக அளித்துவிடுங்கள். வீடு வாசல்களை இழந்து பரிதவிக்கும்

கலிங்கத்து மக்களில் எஞ்சியிருப்போரின் சிரமத்தை நீக்குவதற்காக இவற்றைச் செலவழியுங்கள்;......அப்படியாவது இவ் வக்ரமமான போரில் இறந்து பட்டோரின் ஆத்மாக்கள் சாந்தியடையட்டும்;

இவ்வாறு கூறி அவ்விடுதியைவிட்டு குனிந்த தலையுடன் வெளியே சென்றுவிட்டாள் இளவரசி.

அசோகவர்த்தனர் அவள் வெளியே சென்ற வழியையே நோக்கியபடி கற்பதுமைபோல் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தார்.

*  *  *

சங்கமித்ரை நேராகத் தனது அந்தப்புரத்தை நோக்கிச் சென்றாள்.

வழியிலேயே அவளைச் சந்தித்தாள் பணிப்பெண்ணொருத்தி.

"தேவி!............தங்களைத் தேடித்தான் போகிறேன்."

"ஹேமா! என்ன விசேஷம்?"

"தேவி!.........நந்தி தேவரின் மாளிகையிலிருந்து செய்தி வந்திருக்கிறது,"........

"என்ன செய்தி!.........சீக்கிரம் கூறு!" என்று பதறினாள் இளவரசி.

"தேவி!......நந்தி தேவரின் மகள் வித்யா தேவி இன்று பகலில் இறந்துவிட்டாளாம்; ......அவளுக்குப் பிறந்த சிசுவும் மரித்து விட்டதாம்!"

உலகமே சுழல்வது போலிருந்தது இளவரசிக்கு—அப்படியே கண்களை மூடினாள். அவளை விழவொட்டாமல் தாங்கிப் பிடித்துக்கொண்டாள் பணிப்பெண்.

"தேவி! வருந்தி யென்ன பயன்?......... இறப்பும் பிறப்பும் நம் கையிலிருக்கிறதா?"

"அந்தோ!.........வித்யாதேவி மரித்துவிட்டாளா?.........அவளைக் கொன்ற பாபமும் என் தந்தையை அன்றோ சேரும்?"......

அளவற்ற துயரத்துடன் இவ்வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வெளிவந்தன. வேதனை மிகுதியால் இன்னது செய்வதென்றறியாமல் ஸ்வப்பனத்தில் நடப்பவளைப் போல் தனது அந்தப்புரத்தை நோக்கிச் சென்றாள்.

— 3 —

மறுதினம் காலை. அரண்மனை நந்தவனத்தில் புஷ்பம் பறித்துக்கொண்டிருந்தாள் இளவரசி. அவள் உடுத்தியிருந்த மிகச் சாதாரணமான உடைக்குள்ளிருந்தும் அபூர்வமான அவளுடைய அழகு பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஈரம் சொட்டிய அவள் கூந்தல் முதுகை மறைத்துக் கணைக்கால் வரையில் தொங்கியது.

பாடலிபுரத்தில் இளவரசி சங்கமித்ரையை அறியாதார் ஒருவருமில்லை. பரோபகாரியும் மகா குணவதியுமான அவளை ஏழை எளியோர் யாவரும் நன்கறிந்திருந்தனர். அவள் கையால் தினந்தோறும் வழங்கிவந்த தானதருமங்களுக்குக் கணக்கேயில்லை. தனக்கெனச் சிந்திக்கும் குணமே அவளிடமில்லை. அருளும் அன்புமே அவ்வழகிய பெண்ணுருவம் தாங்கி வந்தனவோ வென்று ஐயுறும்படி இருந்தது அவள் வாழ்க்கை. தூய நல்லொழுக்கம்கொண்டு மிக எளிய வாழ்வு நடத்திவந்த அவ்வணங்கு மௌரிய சாம்ராஜ்யம் பெற்ற பெரும் பேறாக விளங்கினாள்.

அவளிடம் ஆடம்பரமான அணிபணிகள் ஒன்றுமில்லை. ஆனால் பாடலிபுரத்தின் பெண்மணிகளுக்கெல்லாம் சிரோரத்னமாக விளங்கினாள் இளவரசி சங்கமித்ரை. இருபது வயதே ஆகியிருந்தபோதிலும் சகல கலைகளையும் பரிபூர்ணமாகத் தேர்ந்து கற்றிருந்தாள். அவளுடைய புகழும், கலைத்திறனும், தர்மபுத்தியும் தேசமெங்கும் பரவி இருந்தன.

இளவரசிக்கு இரண்டு வயது மூத்தவன் மகேந்திரன். ஒப்புயர்வற்ற கலைஞன் அவன். இளவரசிக்கும் அவனுக்கும் எல்லா விஷயங்களிலும் மிகுந்த ஒற்றுமையுண்டு. அரசர்க்குரிய ஆடம்பரத்தையும் பெருமைகளையும் அறவே வெறுத்தார்கள் இருவரும்.

புத்தமதத்தின் கொள்கைகளில் இருவரும் மிகுந்த பற்றுதல் கொண்டிருந்தார்கள். அந்த மதத்தின் அருள் மார்க்கத்தை உலகெங்கும் பரவச்செய்ய வேண்டுமென்பது அவர்களுடைய ஆவல்; முக்யமாக இளவரசிக்கும் பௌத்தமதத்தில் அளவற்ற அன்பும் அபிமானமுமிருந்தது. பௌத்த பிக்ஷுணியாக வெளிப்போந்து, அரசகுமாரிக்குரித்தான ஆடம்பர வாழ்க்கையை அடியோடு தியாகம் செய்து, உலகை உய்வித்த போதிநாதரின் ஞானமார்க்கத்தைப் பிரசாரம் செய்து, இவ்வுலக ஆசாபாசங்களி

லுழன்று கரையேறமாட்டாமல் தவிக்கும் ஜீவன்களை உய்விக்க வேண்டுமென்னும் ஆர்வம் அவளுடைய ஹிருதயத்தில் நிரம்பியிருந்தது.

ஆனல் சக்கரவர்த்தி அதற்கு ஒப்பவில்லை.

* * *

புஷ்பம் நிரம்பிய கூடையை அங்கிருந்த ஒரு மரத்தின் கிளையில் மாட்டிவிட்டு, யாரையோ எதிர்பார்ப்பவள்போலச் சுற்று முற்றும் நோக்கினுள் இளவரசி.

அவளைச் சுற்றிலும் விதவிதமான வர்ண மலர்கள் தம் சுகந்தத்தை நாற்புறமும் பரப்பின. மேலே நிர்மலமான நீல ஆகாயம். கிழ்த்திசையில் கண்ணைப்பறிக்கும் ரேகாவிசித்ரங்களுடன் எழும்பிக்கொண்டிருந்த கதிரோனின் பெரிய பொற்கோளம். தூரத்தில் தாமரை பூத்து மண்டியிருந்த பளிங்குபோன்ற அழகிய தடாகம். அதன் நடுவேயிருந்த வட்டவடிவமான பளிங்குத் திட்டில் புத்தர்பிரானின் வெண் சிலையொன்று. பெருமானின் முகம் அருளையும் அன்பையும் ஒருங்கே பொழிந்தது. அதைச் செதுக்கிய சிற்பி தன் கலைத்திறன் முழுதையும் அச்சிலையில் கொட்டிவிட்டிருந்தான்.

ஆர்வத்துடன் சிலையை நோக்கினுள் சங்கமித்ரை. போதிநாதனின் விழிகள் தன்னைக் கருணையுடன் நோக்குவதாகக் கற்பித்தது அவளுள்ளம். கரைகடந்த மன நிகழ்ச்சியுடன் தேவனைக்கரங்குவித்து வணங்கினுள்.

"தேவி!" என்றழைத்தவாறே அங்கே தோன்றினுள் ஹைமா.

"தேவி!" இளவரசர் தம்மைக்காண விரும்பி அந்தப்புரத்துக்கு வந்திருக்கிருர். இலங்கையிலிருந்து வந்திருக்கும் பௌத்த பிக்ஷுவும் உடன் வந்திருக்கிருர்" என்று வணக்கத்துடன் தெரிவித்தாள்.

சங்கமித்ரையின் முகம் ஆனந்தத்தால் மலர்ந்தது.

"யார்?...... நாகசேனரா?"

"ஆம்—தேவி—அவர்தான்"

அந்தப்புரத்தை நோக்கித்துரிதமாய் நடந்தாள் சங்கமித்ரை. அவள் விட்டுப்போன மலர்க்கூடை மரக்கிளையில் மாட்டியிருப்பதைக் கண்ட ஹைமா அதைக்கையிலெடுத்துக்கொண்டு புஷ்பச் செடிகளண்டை சென்று மீண்டும் மலர்களைப்பறித்துக் கூடையில் இடலானுள்.


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷங்காலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனுல் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிருர்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாருதீர்கள்

## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :— 15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு

அன்றிரவு நடுநிசிக்கு மேலிருக்கும். வெளியே மைபோன்ற அந்தகாரம் சூழ்ந்திருந்தது. நட்சத்திரங்களின் சிறுவெளிச்சம் அவ்விருளின் பயங்கரத்தைப் பின்னும் அதிகமாக்கியது.

அரண்மனையில் எவ்விதமான சப்தமுமில்லை. கல்லறைபோன்ற ஆழ்ந்த நிசப்தம் எங்கும் குடிகொண்டிருந்தது. தூரத்தே சம்பாநதி சலசலவென்று அரித்துக்கொண்டோடும் இன்னிசைமட்டிலும் சில சமயங்களில் லேசாகக் கேட்டது.

இயற்கை முழுதும் துயிலில் ஆழ்ந்திருக்கும் அவ்விருண்ட அவ்வேளையில் ஆடம்பரமான அலங்காரங்கள் நிறைந்த தம்முடைய சொந்தவிடுதியில் நித்திரைபிடியாமல் ஒரு சாளரத்தண்டை உட்கார்ந்திருந்தார் அசோக சக்ரவர்த்தி. அவ்விடுதியில் ஒரே தீபம் மட்டிலும் மங்கலாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. தீபத்தினருகிலிருந்த ஒரு தாழ்ந்த பீடத்திலமர்ந்து தந்தையின் முகத்தை நோக்கியபடியே மௌனத்திலாழ்ந்திருந்தாள் இளவரசி சங்கமித்ரை.

இருவர் முகத்திலும் சோகத்திரை படர்ந்திருந்தது.

வெளியே அடர்ந்திருந்த சண்பக விருட்சத்தின் கிளைகளை யசைத்து உள்ளே உலவியது மந்தமாருதம்.

சக்கரவர்த்தியின் மனதில் அடக்கொணாத கொந்தளிப்பும் மனவெழுச்சியும் நிரம்பியிருந்தன. இரவு பகலாய்த் தூக்கமில்லாமல் அவர் கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன. தம்மையும் மறந்து, எதிரிலிருக்கும் இளவரசியையும் மறந்து, தம் ஹிருதயத்திலெழுந்த பலவிதமான போராட்டங்களிலீடுபட்டிருந்தார். கவலையின் கணக்கற்ற சுருக்கங்கள் அவர் நெற்றியில் காணப்பட்டன.

நெடுநேரம் அவ்வாறு சென்றது.

சாளரத்தின் திரைகளை மெல்ல அசைத்துச் சிறு சப்தமுண்டாக்கியது மலயமாருதம்.

தம் சிந்தனை கலைந்தவராய்த் திடுக்கிட்டுத் திரும்பினார் சக்கரவர்த்தி.

இளவரசியை நோக்கி மெல்லப் பேசலுற்றார்.

"குழந்தாய்!.........எவ்வளவோ யோசித்தும் உன்னுடைய வேண்டுகோளுக்கொப்ப என் மனம் இடங்கொடுக்கவில்லையே!...... நான் பௌத்த சமயத்தைத் தழுவ நிச்சயித்துவிட்டேன்!.........ஆனால், குழந்தாய்! ......உன்னை அம்மதத்தின் பிக்ஷுணியாகிப் பிரசாரம் செய்ய, எவ்வளவோ தூரதேசமான இலங்கைக்கனுப்ப என்மனம் இசையமாட்டேனென்கிறது? நீயோ அதி பால்யமான கன்னிகை. எவ்வளவோ சுக சம்பத்துக்களில் பிறந்து வளர்ந்தவள்....... இவை யெல்லாவற்றையும் துறந்து, காட்டிலும் மேட்டிலும் திரிந்து மதப்பிரசாரம் செய்ய உன்னால் முடியுமா?.........உன்னுடைய உறுதி என்றும் இவ்வாறு நிற்குமா?"

தழுதழுத்த தாழ்ந்த குரலில் தெளிவாய்த் தொனித்த இவ்வார்த்தைகள் இளவரசியின் ஹிருதயத்தில் ஊடுருவிப் பாய்ந்தன.

சற்று நேரம் ஒன்றுமே பதில் கூறாமல் மௌனத்திலாழ்ந்திருந்தாள் பாவை. சக்கரவர்த்தி அவள் முகத்தை நோக்கிய வண்ணமே கவலை தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தார்.

சற்றுப் பொறுத்துப் பேசலானாள் சங்கமித்ரை.

"தந்தையே! அரச வாழ்க்கையைத் துறந்து பிக்ஷுணியாகவேண்டுமென்னும் எண்ணம் எனக்கு இன்றையதினம் புதிதாக தோன்றியதல்லவே!...... அது தமக்குத் தெரியாதா? கலிங்கத்துப் போரிலிருந்து தாங்கள் திரும்பிவந்தவுடன் என் மனம் அவ்விஷயத்தில் உறுதியடைந்துவிட்டது. நந்தி தேவரின் மாளிகையில் பேதை வித்யா தேவியின் உயிரற்ற உடலை நான் காணச் சென்றபொழுது, அவளுடைய அகால மரணத்துக்குக் காரணம் அவள் நாதன் போரில் இறந்ததேயென்று உணர்ந்தேன். அப்போருக்குக் காரணமான தங்களுடைய மண்ணாசையையும், இன்னும் இவ்வுலகத்திலிருக்கும் உயிர்களின் இன்னல்களுக்குக் காரணமான இதர ஆசாபாசங்களையும் என்னுடைய ஹிருதயம் விஷம்போல வெறுத்தொதுக்கியது....... சுகபோகங்களிலும் ஆடம்பர வாழ்க்கையிலும் எனக்கு இருந்த அற்ப ஆசையும் இன்றுடன் என்னைவிட்டொழிந்தது.......... ஆருயிர்கட்கெல்லாம் அன்புகாட்டவேண்டுமென்று புத்த பகவான் மொழிந்தருளிய அமுத வாக்கைக் கடைப்பிடித்து, பௌத்த மதத்தின் புனிதமான கொள்கைகளை என்னாலியன்றவளவு உலகோர்க்கு விளக்க வேண்டுமென்னும் ஓர் ஆர்வத்தைத் தவிர வேறு எவ்விதமான ஆவலும் எனக்கில்லை; ஆகையால் தந்தையே!...... இலங்கையின் அதிபதியான உபகுப்தன் விரும்புகிறபடி

நாகசேன பிக்ஷுவுடன் என்னை இலங்கைக் கனுப்பிவிடுங்கள்;...... தாங்கள் பிரியப் பட்டால் மகேந்திரனையும் உடனனுப் புங்கள்". அவள் ஹிருதயத்திலிருந்த பெரும் ஆர்வத்தை அறிந்துகொண்டார் சக்கரவர்த்தி. அளவற்ற வேதனை அவரு டைய நெஞ்சத்தையழுத்தியது.

"குழந்தாய்!......... மகேந்திரனையனுப்பு வதற்கு நான் அஞ்சவில்லை;......ஆனல் நீ... உன்னை மனமொப்பி இலங்கைக்கு எவ் வாறு அனுப்புவேன்?......... முதலில் உன் அன்னை இசைவாளா?......நீ அதை யோசித் தாயா?" என்ருர்.

"தந்தையே!... தாங்கள் அதைக்குறித்துக் கவலைகொள்ளவேண்டாம்;......... அன்னை யின் உத்தரவை அன்றே கேட்டு அடைந்து விட்டேன்!...... தங்கள் உத்தரவுமட்டும் தான் வேண்டும்".

மங்கலான அவ்விடுதியின் வெளிச்சத்தில் அவளைக் கூர்ந்து நோக்கினுர் சக்கரவர்த்தி.

இலங்கைக்குப் போகவேண்டுமென்னும் உறுதி அவள் முகத்தில் பிரதிபலித்ததைக் கண்டார். அவ்வுறுதியைத் தம்மால் குலைக்க முடியாதென்பதையும் அறிந்து கொண்டார். அளவற்ற பெருவேதனையால் அவர் ஹிருதயம் வெம்பிக் கருகியது.

மார்பை ஒரு கையால் அழுத்திக்கொண் டே ......... "குழந்தாய்!........கலிங்கத்துப் போரில் என்னுல் மடிந்துபோன உயிர் களின் சாபமே உன்னை என்னிடமிருந்து பிரிக்கிறதுபோலும்;.........அரசன் உபகுப் தன், மதப்பிரசாரம் செய்ய இங்கிருந்து பிக்ஷுக்களை அனுப்பும்படியாக எனக்கு லிகிதம் விடுத்தபொழுது, என்னுடைய செல்வக் குமாரியான உன்னையே அனுப்பும் படியாக நேரிடுமென்று நான் கனவிலும் எண்ணவில்லை;......சங்கமித்ரை!.........என் கண்ணே!.........நீ என்னுடைய மகளாய் இருந்தபோதிலும் வைராக்கியத்திலும் மன உறுதியிலும் என்னைக் காட்டிலும் எவ்வள வோ மேலானவளாயிருக்கிருய்!......குழந் தாய்!......கலிங்கத்திலிருந்து நான் திரும்பி வந்தபொழுது நீ எனக்கு அறிவுறுத்திக் கூறிய உபதேச மொழிகள் என் ஹிருதயத் தில் வெகு ஆழமாய்ப் பதிந்துவிட்டன;...... இவ்வுலக ஆடம்பரங்களில் மதிமயங்கி யிருந்த என்மனதைப் புத்ததேவனின் அருள் மார்க்கத்தில் திருப்பிய பெருமை உன்னை யே சேரும்;.........குழந்தாய்!.........உன்னு டைய எண்ணத்துக்கு இடையூருக நிற்க நான் விரும்பவில்லை;......சுகமே போய் வா! ...நீ எங்கு சென்றபோதிலும் அந்த ஞான தேவனை புத்த பகவானின் அருள் உன் னைக் காக்கட்டும்;"

சக்கரவர்த்தியின் குரலில் சோகம்தொனி த்தபோதிலும், அவர் ஹிருதயத்தில் ஏற்பட் டிருந்த பலவிதமான உணர்ச்சிகள் சிறிது சிறிதாக மறையலாயின. அவற்றிற்குப் பதிலாக அங்கு ஒருவகையான அமைதி நிலவலாயிற்று.

தந்தையின் ஆசீர்வாதத்தை ஏற்ற இள வரசியின் மனத்தில் அளவற்ற ஆனந்தம் தோன்றியது.

மெல்லத் தலையை நிமிர்ந்து பளபள வெனப் பிரகாசிக்கும் விழிகளால் அவரை நோக்கினுள்.

அவளுடைய முகத்தை நோக்கிய சக்கர வர்த்திக்குத் தம்மை மறந்த துக்கமும் சந் தோஷமும் ஏககாலத்திலுண்டாயின.

— 4 —

அதற்கடுத்த பௌர்ணமி தினம். அந்தி மயங்கும்வேளை. பாடலீபுரம் முழுதிலும் ஒரு வகையான ஆழ்ந்த நிச்சப்தம் குடி கொண்டிருந்தது. அன்றிரவு, மகத தேச வாசிகளின் அன்பைக் கவர்ந்த இளவரசி, தன் சகோதரன் மகேந்திரனுடன் மரக்கல மேறி, கடல்கடந்த தேசமான இலங்கைக் குப் பிரயாணமாகிருள். நகர முழுதும் இச் செய்தி காட்டுத் தீப்போல் அதிசீக்கிரம் பரவியது. ஜனங்கள் திகைத்துவிட்டனர். அச்செய்தி உண்மைதானுவென்றறிய வேண்டி அரண்மனைக்கேகினர் பலர்.

தங்கள் அன்புக்குகந்த இளவரசியை இனி மேல் காணமுடியாதென்றறிந்த எளியவர் ஏங்கிக் கண்ணீர் விடுத்தனர். தேசமுழு தும் சோகத்தில் மூழ்கியது.

அரண்மனையிலும் யாவர் முகத்திலும் அளவற்ற ஏக்கம் காணப்பட்டது. சக்கர வர்த்தி எவ்வளவோ மனவுறுதியைக் கொண்டவராயிருந்தும், தம் செல்வக் குமாரி உலகையே தியாகம்செய்து, பிக்ஷு ணிக்கோலம் தாங்கி, நெடுந்தூரத்திலிருக் கும் இலங்கைத்தீவுக்குச் செல்வதையெண் ணும்பொழுது அளவற்ற துயரத்திலாழ்ந் தார்.

* * *

வானிலெழும்பினன் முழுமதி. சம்பாதி வெண்திரையிட்ட ஜலம் அந்நிலவொ

ளியில் உருக்கியவெள்ளிபோல் மின்னியது. பாடலீபுரவாசிகள் யாவருமே சம்பா நதிக்கரையில் குழுமியிருந்தனரெனலாம்... கண்ணீர் ததும்பிய முகங்கள் எங்கும் காணப்பட்டன.

துறைமுகத்தில் கடலைக்கடக்கத்தயாராய் நின்றது மரக்கலமொன்று. மரக்கலத்தின் மேற்றட்டில், மகததேசத்திலிருந்து இலங்கைத்தீவுக்குச் செல்லும் பௌத்த பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும்கூடியிருந்தனர். அவர்களிடையே நாகசேன பிக்ஷுவுடன் நின்றிருந்தனர் மகேந்திரனும் சங்கமித்திரையும்.

இளவரசி தனக்குரித்தான ஆடையாபரணங்களையெல்லாம் விலக்கிவிட்டுத் தூய்மையான காவியுடைடன் நின்றிருந்தாள். அடர்ந்து கிடந்த அவள் கூந்தல் காற்றில் அலைந்தது. புத்த கயாவிலிருந்து கொண்டுவரப்பட்ட மகாபோதிவிருட்சத்தின் கிளையொன்றைத் தனது வலதுகையில் தாங்கி இருந்தாள்...அருளும் அன்புமே இவ்வடிவம் தாங்கிவந்தனவோவென்று ஐயுறும்படியாயிருந்தது அவள் கொண்டிருந்த தவக்கோலம்...

சாந்தி நிலவிய அவளுடைய அழகிய வதனத்தில் ஒரு பிரகாசம்...கரையில் நின்றிருந்த ஜனங்களை நோக்கினுள்.

அவளருகே நெருங்கினுர் சக்கரவர்த்தி.

தலைகுனிந்து அவரை வணங்கினுள் இளவரசி.

''தந்தையே!—போய்வருகிறேன்.''

''குழந்தாய்!...சுகமே போய்வா...புத்த தேவன் உன்னைக்காப்பாற்றட்டும்.'' கண்ணீர் ததும்பிய விழிகளுடன் தம் செல்வக் குமாரியையும் குமாரனையும் ஆசீர்வதித்தார் சக்கரவர்த்தி.

மெல்லக் கரையில் இறங்கி நின்ருர்.

மேலே பால்போன்ற வெண்ணிலவு.

நதியின் ஜலம் இசைத்தோடியநாதத்தைத் தவிர வேறு சப்தம் அங்கில்லை.

எங்கும் சாந்தியும் அமைதியும்.

மரக்கலத்தின் பாய்மரங்கள் விரிந்தன, மெல்ல அசையலாயிற்று அம் மரக்கலம்,

கரையில் நின்றிருந்த ஜனங்களிடையே ஒரு பரபரப்பு.

இளவரசியின் கையிலிருந்த பசுமையான கிளையின் இலைகள் காற்றில் அசைந்தாடின.

கரங்கூப்பிப்புத்ததேவனின் ஆலயமிருந்த திக்கை நோக்கி வணங்கினுள்.

"இளவரசி சங்கமித்ரைக்கு ஜே!......... தர்மதேவிக்கு ஜே!...... மௌரிய வம்சத்தின் சிரோமணிக்கு ஜே!''...... என்ற ஆரவாரம் ஜனங்களின் வாயினின்றும் எழுந்து அண்ட முகட்டையெட்டியது.

பலர் கண்ணீர் சொரிந்தனர்.

நீர்த்திரையிட்ட விழிகளுடன் மெல்ல மெல்லக் கடலை நோக்கிச் செல்லும் மரக்கலத்தை நோக்கினுர் சக்கரவர்த்தி.

பிக்ஷுக்களுக்கும் பிக்ஷுணிகளுககும் மத்தியில் கரங்கூப்பியவண்ணம் சிலைபோல் நின்ருள் சங்கமித்ரை. அவள் முகத்தில் அன்பும் அருளும் பொங்கித் ததும்பின. சந்திரன் மேகங்களிடையில் மறைந்தான்.

கவிந்துவரும் இருளில் மரக்கலமும் கரையில் நின்ருேரின் கண்களுக்கு மறைந்தது.


## மாதவிடாய் நின்றிருந்தால்



குமாரி (TABS) உபயோகித்தால் மீண்டும் ஏற்படுவதுடன் பிற்காலத்திலும் தொந்தரவு ஏற்படாது. தீங்கற்றது. விரைவில் பலன் தரும். விலை ரூ. 3. கடுமையானதற்கு ரூ. 5. கர்ப்பத்தடை 6 மாதங்களுக்கு ரூ. 4. (வி. பி. அணு 12 பிரத்யேகம்)

**Mrs. P. DEVEE, F. D. S., (C. M.)**
Tollygunge, Calcutta.

*Available also from :—*

(1) HARRY & SON, 93, China Bazar Road, Madras.
(2) RAJA MEDICAL HALL, 31, Dharmaraja St., Bangalore Contt.
(3) NATHAM & CO. Mattancheri, Cochin.
(4) K. C. MATHEW & Co., Kozhancheri, Travancore.

# ஒரு மூட்டை உருளைக்கிழங்கு

ஜய்லன்

எல்லாம் சரியாக இருக்கவில்லை. கல்கத்தாவில் புது மார்க்கெட் என்னும் இடத்தில் உள்ள சிறிய கடையில் உட்கார்ந்திருந்த ஒரு பருத்த மனிதனுக்கு வாழ்க்கை அவ்வளவு நன்றாக இருக்கவில்லை. அவனைப் பார்த்தால் பணமுள்ளவன்போல் தோன்றிற்று. அவனுடைய கடைக்கு வெளியில் தொங்கிய பலகையில் "நாகேந்திரதாஸ் குப்தா, சாப்பாட்டு சாமான்கள், காய்கறி, மளிகை வியாபாரி" என்று புதிதாக வர்ணம் திட்டப்பட்டிருந்தது. அவனுடைய சாமான்கள் அதிகமாக இல்லாவிட்டாலும், எதையும் கேட்டவுடன் கொடுப்பதற்கும் போதிய அளவில் இருந்தது.

நாகேந்திரன் மிகவும் பருமனாக இருந்தான். அவனுடைய உருண்டைத் தொந்தியானது அது எப்பொழுதும் சரிவரக் கவனிக்கப்படுகிறதென்பதைச் சந்தேகமில்லாமல் காட்டிற்று. அவனுடைய வாடிக்கைக்காரர்கள் அவனைத் 'தொந்தி வங்காளி' என்று குறித்தனர். ஆனால் நாகேந்திரன் இதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஏனெனில் இது அவர்கள் அவனை மறக்கவில்லை என்று காட்டிற்று. மேலும் அவனுக்கு அவர்களிடமிருந்து எப்படிப் பணம் பிடுங்குவது என்று நன்றாகத் தெரியும்.

நாகேந்திரன் எல்லாவற்றிலும் வியாபாரம் செய்தான்—'ரேஸர்' ப்ளேடிலிருந்து சர்க்கரை, உப்பு வரையில். சண்டை அவன் லாபமடைய உதவிற்று. அவன் கொள்ளை லாபம் அடித்திருந்தான். ஆனால் அவனுடைய வாடிக்கைக்காரர்கள் தங்களுக்கு அவசியமாக வேண்டியிருந்த சாமானுக்கு இரண்டு மடங்குக்குமேல் கொடுக்கத் தயாராயிருந்தால் இவன் என்ன செய்யமுடியும்? அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து நல்ல பண அறுவடை செய்தான்.

ஆயினும் நாகேந்திரன் இன்று கவலையில் ஆழ்ந்திருந்தான். அவனுடைய நெற்றியின் ஆழ்ந்த சுருக்கமும், அவனுடைய கைகளை அடிக்கடிப் பிசைவதும் அவனுடைய கவலையை வெளிப்படுத்தின. வாயில் அடக்கிக் கொண்டிருந்த வெற்றிலைக் கத்தையையும் மெல்ல மறந்துவிட்டான் கவலையில்.

நாகேந்திரனுடைய கடையைப்போலவே இன்னும் அநேகம் அத்தெருவில் இருந்தன. அவனுக்கு எதிரில் இருந்த முகர்ஜீ இவனைப்போல்தான். ஆனால் தன்னுடைய லாபத்தினால் திருப்தியடைந்து அவன் சந்தோஷமாக இருந்தான். நாகேந்திரனின் முகக் கவலையின் அறிகுறிகளைப் பார்த்து, கடைச் சாமான்களைப் பார்வையிடுவதை நடுவில் நிறுத்தினான். தன் சிநேகிதனுடைய கவலையின் காரணத்தை அறியவிரும்பினான்.

"உனக்கு உடம்பென்ன?" என்று அங்கிருந்து கத்தினான். "வங்காளம் பசியால் துடிக்கும்பொழுது உன்னைச்சுற்றி இவ்வளவு சாப்பாடு இருக்கிறதே என்று மனச்சாட்சி உன்னைக் குத்துகிறதோ?" சிவப்பு எச்சில் அருவியைக் கடையின் கோடியில் வெளியே விட்டுக்கொண்டு நாகேந்திரன் பதில் சொன்னான்.

"வங்காளப் பஞ்சமானது ஏழைகளைத்தான் பாதிக்கிறது. அவர்கள் இறப்பதும் நல்லதே. அப்பொழுது சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை குறையும். வங்காளம் பணக்காரத் தேசமாகிவிடும். எனக்கு வேறு கவலைகள் இருக்கின்றன. அவைகள் உன்னையும், மற்றவர்களையும்கூடப் பாதிக்கும். உனக்கு இக்காலத்திய சமாசாரங்கள் தெரிவதில்லை. நமக்கு வந்திருக்கும் அபாயத்தைப்பற்றி எண்ணாமல் சிரித்துச் சந்தோஷமாயிருக்கிறாய்."

முகர்ஜி கவலையுடன் கேட்டான், "நம்முடைய தலைகளின்மேல் ஒரு கத்தி தொங்கிக் கொண்டிருக்கிறதா?" நாகேந்திரனுக்கு மாத்திரம் தெரிந்திருந்த அபாயத்தை அறிய அவன் பக்கத்தில் சென்றான். "எங்களுக்கு எச்சரிக்கை செய்வது உன் கடமை."

"கேள்" நாகேந்திரன் வார்த்தைகளுக்கு அதிக மதிப்புக்கொடுப்பதற்காக விரலை அவன் பக்கம் நீட்டிக்கொண்டும், வெற்றிலையை அதிவேகத்துடன் மென்று கொண்டும் சொன்னான். "ஜப்பானியர்கள் மணிப்பூரைப் பிடித்துக்கொண்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. சீக்கிரம் வங்காளத்திலும் புகுந்து முன்னேறுவார்கள். அவர்களுக்கு முன்னால் அவர்களுடைய ஆகாய விமானங்கள் நம்மை அழிப்பதற்காகக் குண்டைப்பொழியும், நம்முடைய குடும்பங்களையும், வீடுகளையும் நாசம் செய்வதற்காக"

"ஆகா, போனவருடமும் இந்தக் கதையைத்தான் கேட்டோம். ஜப்பானியர் இந்நகரில் குண்டுபோடப்போகிறார்களென்று பலபேர் நம்மையும் சேர்த்து ஓடிப்போனார்கள். ஆனால் நடந்ததென்ன? அதிகப்பணத்தைச் செலவழித்துப் பல கஷ்டங்கள் அனுபவித்து, திரும்பிவந்தோம். நம்முடைய கடைகளுக்கும், வீடுகளுக்கும் ஒரு நஷ்டமும் ஏற்பட்டிருக்கவில்லை."

"நாம் ஓடியிருக்காவிட்டால் இறந்து போனாலும் போயிருப்போம். எனக்கு விமானப்படையெடுப்பு என்றால் நடுக்கம். அவைகள் நாசம் விளைவிக்கின்றன. என்னுடைய உயிர் எனக்கு மிகவும் விலையுயர்ந்தது. நான் என்னுடைய மனைவியையும் அழைத்துக்கொண்டு இன்றிரவு என் கிராமத்திற்குப் போகலாமென்று நிச்சயித்து இருக்கிறேன். ஜப்பானியர்கள், நாம் அறியாமலேயே நம் வாசலுக்கருகில் வந்து விடலாம். முழு அபாயமும் வந்தபிறகுதான் சர்க்கார் நமக்கு அறிவிப்பார்கள்."

"நம் பணத்தை என்னசெய்வது? அதிகப் பணம் நம்முடன் எடுத்துப்போவது அபாயம். நாம் பாங்கிலும போட முடியாது. சத்துரு நகரைப் பிடித்துக்கொண்டு விட்டால் பாங்கியில் போடுவதினால் பிரயோசனம் இருக்காது, இங்கேயே இருந்து இவ்வபாயத்தைத் தைரியத்துடன் சமாளிப்பது தான் நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது."

"உனக்கு இவ்வளவு கொஞ்சமாக மூளையிருப்பது துரதிர்ஷ்டந்தான்." சிகப்பு உமிழ்நீரை மறுபடியும் துப்பிக்கொண்டு "என் பணத்தைப் பத்திரமாக வைப்பதற்கு வேறு வழிகள் தெரியும். யாரும் அறியாமல் என்னுடன் நான் எப்பொழுதும் எடுத்துப் போக முடியும்"

"சொல்லு, நாங்களும் உன்னைப்போல் புத்திசாலியாக இருக்கிறோம்." இப்பொழுது முகர்ஜிக்கு மிகவும் ஆவல்தோன்றிவிட்டது. ஆனால் நாகேந்திரன் தன் ரகசியத்தை வெளியிட மறுத்து விட்டான்.

நாகேந்திரனுடைய கடைக்கு யாரோ சாமான் வாங்க வந்ததால் சம்பாஷணை அத்துடன் நின்றது. நாகேந்திரனுக்கும், முகர்ஜிக்கும் நாள் முழுதும் வேலையிருந்ததால்


# S. K. R. & CO.

PERFUMERS

Arunachala Asari St. :: Jothy Building

## SALEM TOWN

1. சக்தி அகர்பத்தி
2. சக்தி ஜவாஜிபத்தி
3. சக்தி தர்பார்பத்தி
4. பத்மா அம்பர்பத்தி
5. ஜோதி ஜவாஜிபத்தி
6. **S. K. R.** ஸ்பெஷல் கஸ்தூரிபத்தி

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு

# எஸ். கே. ஆர். அண் கோ.

பர்ப்யூமர்ஸ்

அருணாசல ஆசாரி தெரு :: ஜோதி பில்டிங்

சேலம் டவுன்

நாகேந்திரனுடைய கொழுப்பைக் கரைத்துக்கொண்டிருந்த கவலையைப்பற்றி மறுபடியும் சம்பாஷணையை ஆரம்பிக்க முடியவில்லை.

அன்றிரவு கடையைப் பத்திரமாகப்பூட்டிவிட்டு, தன்னுடைய வீட்டிற்கு எவ்வளவு சாமான் எடுத்துப்போக முடிந்ததோ அவைகளை எடுத்துக்கொண்டு நாகேந்திரன் வீட்டிற்குப் போனான். கதவினருகில் மனைவியைச் சந்தித்தான். அவன் வரும் ஓசை கேட்டு அவள் ஓடிவந்தாள்.

நடுங்கிக்கொண்டே சொன்னாள்; "நான் உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தேன். நம் பக்கத்து வீட்டுக்காரரின் குழந்தை ஆகாரம் இல்லாமல் செத்துப் போய்க்கொண்டிருக்கிறது. நீங்கள் என்னிடம் பணம் கொடுக்காததால் அவளுக்குப் பணம் கொடுக்க முடியவில்லை. என்னுடைய சாப்பாட்டைக் கொடுத்திருப்பேன். ஆனால் ஜ்வரமாயிருக்கும் குழந்தை அதைச் சாப்பிடாது. தயவுசெய்து அவளுக்குப் பணம் கொடுங்கள். அல்லது போஜோவை யாவது கடைக்கு அனுப்பிக் கஞ்சிக்கு வேண்டியதைக் கொண்டு வரச்சொல்லுங்கள்.

"ஓ" நாகேந்திரன் அவளைத் தன்னிடமிருந்து தள்ளினான். "ஜப்பானியர்கள் குண்டுபோடப் போகிறார்கள். அக்குழந்தை எப்படி இருந்தாலும் இறந்துவிடும். வேண்டாதவர்களைப் பஞ்சம் எடுத்துப் போவது நல்லதுதான். நம்மை முதலில் பார்த்துக்கொண்டு, நம்முடைய உயிரைக் காப்பாற்றிக்கொண்டு பிறகு மற்றவர்களைப்பற்றி யோசிப்போம்".

"நான் அக்குழந்தையை என்னுடையதாகப் பாவித்து வந்தேன். கடவுள்தான் என் அருமைக் குழந்தையை எடுத்துப்போய் விட்டாரே."

"உன் பேச்சை நிறுத்திவிட்டு எனக்குச் சாப்பாடு கொண்டுவா. நம்முடைய சாமான்களைக்கட்டு. நாளைக் காலை நம்முடைய கிராமத்திற்குப் போகப்போகிறேன். ஜப்பானியர்கள் மணிப்பூரைத்தாண்டி முன்னேறிவிட்டார்கள். இங்குச் சில நாட்களில் வந்துவிடுவார்கள் குண்டு விழுமுன் நாம் போய்விடவேண்டும். போஜோ எங்கே?" "போஜோ" என்று உச்சஸ்தாயில் கத்தினான்.

போஜோ நாகேந்திரனின் அண்ணாபிள்ளை. ஓர் அனாதை. வீட்டின் கஷ்டமான வேலைகள் எல்லாவற்றையும் செய்தான். இதற்குச் சதா சர்வ காலமும் திட்டுத்தான் அவன் கண்ட பலன். நாகேந்திரன் பிள்ளை வேண்டுமென்று தத்து எடுத்துக்கொண்டதாகப் பேச்சு. போஜோ பெரியவனான பிறகும் வீட்டுவேலையாள் மாதிரி நடத்தப்பட்டான். தன் பெயர் கூப்பிடப்பட்டவுடன் தன் சிற்றப்பாவினருகில் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தான்.

"நான் இதோ இருக்கிறேன்," என்று பயந்துகொண்டே சொன்னான்.

நாகேந்திரன் மிகவும் கோபமாக இருந்தான். போஜோவைப் பார்த்தவுடன் அது பலமடங்கு அதிகமாகி விட்டது. "உன்னைப்பார்த்தால் என் வீட்டில் உனக்குச் சாப்பாடு போடுவதில்லை என்று நினைப்பார்கள். ஈர்க்குச்சி மாதிரி இருக்கிறாய். உன்னுடைய வேஷ்டி கிழிசல். உன் தேகம் எலும்பு மூட்டைதான். ஒரு வேலையும் செய்யாமல் சோம்பேறியாயிருக்கும் பொழுது நீ எப்படித்தான் இப்படி இருக்கிறாயோ, எனக்குத் தெரியவில்லை."

"சிற்றப்பா, நான் கஷ்டப்பட்டு வேலை செய்கிறேன். இது உங்களுக்குத் தெரியும். ஆனால் எனக்குப் பணம் கொடுப்பதில்லை. நான் எப்படித் துணி வாங்கிக்கொள்ள முடியும். இப்பொழுது என் கிராமத்தில் என் மனைவியும் குழந்தையும் பட்டினியால் துடிப்பதாய்ச் செய்தி வந்திருக்கிறது. நான் அவர்களிடம் போகவேண்டும். அவர்களுடைய சாப்பாட்டிற்காக எனக்குப் பணம் வேண்டும்."

"குடும்பமா? உன்னால் காப்பாற்ற முடியாதபொழுது உனக்குக் குடும்பம் வேறேயா? நான் என்ன என்று நினைத்தாய்? தங்கச் சுரங்கமா? என்னிடமிருந்து உனக்குப் பணம் கிடைக்காது. உன்னுடைய குடும்பம் பசியால் சாகட்டும். அவர்கள் இறந்தால் சாப்பிடவேண்டியவர்களின் எண்ணிக்கை குறையும்".

நாகேந்திரன் சிரித்தான்; "போ, என்னுடைய சாமான்களைக் கட்டு. நாம் நாளைக் காலை இங்கிருந்து புறப்படுகிறோம். இரு, இரு, முதலில் வெளியே போய் எனக்கு ஒரு மூட்டை உருளைக்கிழங்கு வாங்கி வா—பெரிய, பெரிய உருளைக் கிழங்குகள். ஒவ்வொன்றும் பெரியதாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் உன் தோலை உரித்து விடுவேன்" கொஞ்சம் பணத்தைப் போஜோவிடம் விட்டெறிந்துவிட்டு அறையை விட்டு வெளியேறினான்.

"உருளைக்கிழங்கா" போஜோ முனகினான், "இவ்வளவு நாழியான பிறகா—உருளைக் கிழங்குகள்! நாளைக்குப் போவதாயிருந்தால் எதற்காக இவருக்கு உருளைக்கிழங்கு" கேள்விக்கு விடை கிடைக்காமல் அவன் தன் சிற்றப்பா சொல்லியபடி செய்யச் சென்றான்.

அன்றிரவு போஜோ தன் சிற்றப்பா தூங்கவேண்டுமென்று வெகுநேரம் கவலையுடன் காத்திருந்தான். அடிக்கடி சிற்றப்பாவினுடைய அறையின் சாவி ஓட்டை வழியாகப் பார்த்தான். ஆனால் எப்பொழுதும் அவனுடைய சிற்றப்பா தரையில் உட்கார்ந்துகொண்டு ஜாக்கிரதையாக உருளைக் கிழங்குகளை வெட்டிக்கொண்டிருந்தார். போஜோ தன் சிற்றப்பாவிடமிருந்து அன்றிரவு திருடவேண்டுமென்று நிச்சயித்திருந்தான். அவ்வாறு செய்தால் பெரிய தவறு ஒன்றுமில்லை என்று கருதினான். ஏனெனில் அவனுடைய மனைவிக்காகவும், குழந்தைக்காகவும் பணம் வேண்டியிருந்தது. அவனுடைய சிற்றப்பா நாளை போவதாயிருந்ததால் இதுதான் தக்க சமயம். இல்லாவிட்டால் நாகேந்திரனுடன் அவனுடைய கிராமத்திற்குப் போயாகவேண்டும்.

போஜோ ஓட்டையின் வழியாக மறுபடியும் பார்த்தான். ஆனால் நாகேந்திரன் இன்னும் வேலைசெய்துகொண்டிருந்தான். இத்தடவை அவன் ஏதோ ஒன்றை உருளைக் கிழங்கினுள் திணிப்பதுபோல் இருந்தது—அல்லது அவன் அதிலிருந்து எதையோ வெளியில் எடுத்தானோ, சரியாகத் தெரியவில்லை. மணிகள் சென்றன. இன்னும் வேலை முடிந்தபாடில்லை. போஜோவின் களைத்த கண்கள் இன்னமும் திறந்திருக்க முடியவில்லை.

காலையில் நாகேந்திரன் வெளியில் வந்தான். தூங்கிக்கொண்டிருந்த போஜோவைப்பார்த்து, செருப்புக்காலால் அவனைத் தட்டினான். "சோம்பேறிக்கழுதை, எழுந்திரு. ஸ்டேஷனுக்குப்போக நாழியாகிவிட்டது. சீக்கிரம் சாப்பாடு கொண்டுவா."

போஜோ தூங்கிவழியும் கண்களைத்துடைத்துக்கொண்டு சமையற் கட்டைத் தேடிச் சென்றான். சீக்கிரம் சாப்பாடு தயார் செய்யப்பட்டு சாப்பிடப்பட்டது. போஜோ ஒரு வண்டிகொண்டுவந்தான் மூவரும் ஸ்டேஷனுக்குப்புறப்பட்டார்கள். போஜோ உருளைக்கிழங்கு மூட்டையைக் கவனித்து வரவேண்டுமென்று கட்டளையிடப்பட்

ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.
(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.—உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

டான். ஆனால் நாகேந்திரனும் அதை விட்டு வெகுதூரம் போவதில்லை. போஜோ ஒரு சமயம் தெருவில் அதை விட்டுவிட்டு வெற்றிலை வாங்கப்போனான். திரும்பி வந்த பொழுது நாகேந்திரன் கோபத்துடன் அதன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான்,

"முட்டாளே" நாகேந்திரன் கத்தினான், "மூட்டையைவிட்டுப் போகக்கூடாது என்று சொல்லவில்லையா? நடுத்தெருவில் விட்டுப்போயிருக்கிறாயே?"

"ஓர் உருளைக் கிழங்கு மூட்டைக்கு இவ்வளவு மதிப்பென்ன" போஜோ தன்னையே கேட்டுக்கொண்டான். "நான் எங்கே சென்றாலும் எதற்காக எடுத்துப்போக வேண்டும்."

ஹௌரா ஸ்டேஷன் ஸமுத்திரம்போல் இருந்தது. பல குரல்களின் எதிரொலி கடலின் அலைகளின் சப்தம்போல் காற்றை நிரப்பியது. ஜனங்கள் எங்கும் இருந்தார்கள். தள்ளிக்கொண்டும், முட்டிக்கொண்டும், மோதிக்கொண்டும் சிலர் ஹாலில் தங்கள் மூட்டைமுடிச்சுக்களுடன் தூங்கிக்கொண்டிருந்தனர். மற்றவர்கள் ஒரு வேலையும் இல்லாமல் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தனர். டிக்கட் வாங்குமிடத்தில் கூட்டம் சொல்லிமுடியாது. ஆனால் நாகேந்திரனுக்கு வாடிக்கைக்காரரான ஒரு டிக்கட் கலெக்டரைத் தெரியும். அவரிடம் பர்த்வானுக்கு மூன்று டிக்கட்டுகள் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டான். அங்கிருந்து பத்துமைல் நடந்தோ வண்டியிலோ அவனுடைய கிராமத்திற்குச் செல்லலாம்.

நாகேந்திரன் தன் நண்பனைத் தேடிப் போயிருக்கும்பொழுது போஜோவின் கையில் அம்மூட்டை கொடுக்கப்பட்டது. மெதுவாக மூட்டையின் கயிற்றை அவிழ்த்து ஓர் உருளைக்கிழங்கை எடுத்தான். அது முழுசாக இருந்தது. அவன் தலையை அசைத்துக் கையை நன்றாக உள்ளே விட்டு அடியிலிருந்து இன்னொன்றை எடுத்தான். நாகேந்திரன் அவைகளை நேற்றிரவு வெட்டினதைப் பார்த்திருந்தான். ஆதலால் இப்புதிரைக் கண்டு பிடிப்பதற்கு வெட்டப்பட்டது இருக்கவேண்டுமென்று அவனுக்குத் தெரியும். ஆஹா! இப்பொழுது அவன் கையிலிருந்தது நடுவில் வெட்டப்பட்டிருந்தது. போஜோ அதைக் கடித்தான். உடனே அதிலிருந்து ஏதோ அவன் கையில் விழுந்தது. அவன் அதைப் பார்த்தபொழுது அவன் விழிகள் ஆச்சரியத்தால் வெளியே


# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

ஸிடி ஆபீஸ்கள்:

சைனா பஜார், மாம்பலம், மைலாப்பூர்,
— திருவல்லிக்கேணி, பெரியமேட் —

பிராஞ்சுகள்:

| | | | |
|---|---|---|---|
| அமதலவல்லா | கும்பகோணம் | சாலூர் | திருச்சிறாப்பள்ளி |
| அனகாபள்ளி | மதுரை | சீயாழி | நிலாறு (சிகாகோல்) |
| சிதம்பரம் | மருடேரு | தாடபள்ளிக்கூடம் | வேலூர் |
| சித்தூர் (கொச்சி) | பாலக்காடு | தஞ்சாவூர் | விஜயபுரம் (திருவாரூர்) |
| காஞ்சீவரம் | பார்வதிபுரம் | திருநெல்வேலி ஜங்ஷன் | விருதுநகர் |
| ஈரோடு | புதுக்கோட்டை | திருநெல்வேலி டவுன் | விஜயநகரம் |
| காரைக்குடி | | | |

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் நடத்தப்படும்.

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

விரிந்தன. அவசரமாக வைத்து மூட்டையைக் கட்டினான்.

நாகேந்திரன் மூன்று டிக்கட்டுகளைக் காண்பித்துக்கொண்டு வெற்றியுடன் திரும்பி வந்தான். தனக்கும், தன் மனைவிக்கும் 'இண்டர் வகுப்பு' டிக்கட்டும், போஜோவிற்கு மூன்றாம் வகுப்பு டிக்கட்டும் வாங்கியிருந்தான்.

நாகேந்திரன் உருளைக்கிழங்கு மூட்டையைத் தன் கம்பார்ட்மெண்டிலேயே வைத்துக்கொள்ள விரும்பினான். ஆனால் 'கார்ட்' அனுமதிக்கவில்லை. விருப்பமில்லாமல் போஜோவிடம் வைத்துக்கொள்ளும்படி கொடுத்தான். நாகேந்திரனுக்கு அம்மூட்டையைப்பற்றிக் கவலை அதிகமாயிருந்தது.

வண்டி புறப்பட ஐந்து நிமிடங்களுக்கு முன் போஜோ மூட்டையைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுகிறானா என்று பார்த்துவரத் தன் வகுப்பிலிருந்து இறங்கினான். போஜோவை ஏற்றிவிட்ட கம்பார்ட்மெண்டுக்குச் சென்றான். ஆனால் போஜோ அங்கு இல்லை. தான் தவறு செய்துவிட்டதாக எண்ணி அடுத்ததைப் போய்ப்பார்த்தான். போஜோ இல்லை.

அவன் அதற்கடுத்த கம்பார்ட்மெண்டுக்கு ஓடினான். அடுத்தது. அடுத்தது. போஜோ காணப்படவில்லை. மறுபடியும் முதல் கம்பார்ட்மெண்டுக்கு ஓடினான். பிறகு ரயிலின் ஒவ்வொரு கம்பார்ட்மெண்டையும் மறுமுறை பார்த்தான், போஜோவின் சின்னமே காணப்படவில்லை.

கார்ட் விசில் ஊதிவிட்டார். நாகேந்திரன் அவசரமாக அவரிடம் சென்றான். நடுங்கும் கைகளை அசைத்துக்கொண்டு அவன் வேண்டிக்கொண்டான். "ரயிலைப் போக விடாதீர்கள். என்னுடைய வேலைக்காரன் இங்கில்லை."

'கார்ட்' அவன் சொன்னது சரியாகக்காதில் விழாதது போல நாகேந்திரனைப்பார்த்தார். பொறுமையுடன் கேட்டார். "உங்களுடைய வேலைக்காரனுக்காக வண்டியை நிறுத்த வேண்டுமா?"

"உங்களுக்குப் புரியவில்லையே," நாகேந்திரன் அழ ஆரம்பித்தான். "அவனிடம் என்னுடைய உருளைக்கிழங்கு மூட்டை இருக்கிறது."

இப்பொழுது கார்ட் சொன்னார்.

"வண்டி ஒரு மூட்டை உருளைக்கிழங்குக்காக காத்திருக்கவேண்டுமோ. இவ்வண்டியில் போகவேண்டுமானால் உங்கள் வகுப்பில் ஏறிக்கொள்ளுங்கள்."

"உங்களுக்கு இன்னும் புரியவில்லையே," நாகேந்திரன் உண்மையாகவே அழுதான். அவனுடைய தசைமலை ஆடிற்று. "அவ்வுருளைக் கிழங்குகளில் சவரன்கள் இருந்தன. அழகிய தங்கச் சவரன்கள். நூற்றிருபத்தெட்டுச் சவரன்கள்.

"வேலைக்காரன்! உருளைக்கிழங்குகள்! சவரன்கள்!" கார்ட் பொறுமையை இழந்துவிட்டார். "இம்மனிதன் பைத்தியம். என்னையும் பைத்தியமாக்க விரும்புகிறான்." கார்ட் சத்தமாக ஊதினார். பச்சைக் கொடியைக் காட்டினார். மணி அடித்தது. சூடேறிய செங்கலின் மேலுள்ள பூனையைப்போல் 'ப்ளாட்பார்மில்' குதித்துக்கொண்டிருக்கும் நாகேந்திரனை விட்டுவிட்டு வண்டி கிளம்பிவிட்டது. அவனுடைய மனைவி என்ன செய்வதென்றறியாமல் கையைக் காட்டிக் கூப்பிட்டாள். நாகேந்திரன் கவனிக்கவில்லை. போஜோவையும், உருளைக் கிழங்கு மூட்டையையும் கண்டுபிடிக்கும் வரையில் எந்த ரயிலிலும் இவன் போகப் போவதில்லை.

ஆனால் நாகேந்திரன் கண்டுபிடிக்கமுடியாத இடத்தில் போஜோ இருந்தான். நாகேந்திரன் ஏற மறுத்த அதே வண்டியில் தான் இருந்தான். மிகவும் கூட்டமாக இருந்த மூன்றாவது வகுப்பு வண்டியின் பெஞ்சுக்கடியில் மூட்டையை வேகமாக அடித்துக்கொள்ளும் ஹிருதயத்துடன் கட்டிக்கொண்டு ஒளிந்துகொண்டிருந்தான்.

வண்டி ஸ்டேஷனைவிட்டுக் கிளம்பினவுடன், அவன் ப்ளாட்பார்மில் நாகேந்திரன் குதித்துக்கொண்டிருப்பதை எட்டிப்பார்த்தான், சிரித்தான். அடுத்த ஸ்டேஷனில் இறங்கி, தன்னுடைய கிராமத்திற்கு வேறொரு ரயிலில் சென்றுவிடுவான், பட்டினியால் வாடும் தன் மனைவி குழந்தையின் அருகில் அவர்களையும் மற்றவர்களையும் காப்பாற்ற அவன் வழி கண்டுபிடித்துவிட்டான். சவரன்களினால் அதிகச் சாப்பாடு கிடைக்கும். ஆனால் அவன் அவைகளைக் கொடுப்பதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பல இடங்களில் ஒவ்வொன்றாக அவைகளை விற்கவேண்டும்.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# தலைமை வகித்தல்

# T.V.S. முன்னிற்கிறது




சென்னை ராஜ்தானியில் மற்ற தயாரிப்பு களைவிட அதிகமாக T. V. S. பரொடியூசர் கியாஸ் பிளான்டுகள் உபயோகத்திலிருக் கின்றன. எல்லா விடங்களிலும் டிரக், லாரி சொந்தக்காரர்கள் T.V S. பிளானடு உபயோகிப்பது எளிது என்றும் சிலவில மிக சிக்கனமுள்ளது என்றும சொல்லு கிறார்கள்.

7000-கு மேற பட்ட பிளானடு கள் இநதியாவில விற்பனை ஆகி இருக்கின்றன.

அதுதான் T. V. S. முன்னிற்பதற்குக் காரணம.

T·V·S

## T.V. சுந்தரம் அய்யங்கார்

அன் சன்ஸ், லிமிடெட்.

**மதுரை & மதருஸ்**

TVSK-16-TM



— டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை —

தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல் அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு அகமகிழ்கிறாள்.

இம் மகிழ்ச்சியை நீங்களும் எளிதில் அடையலாம்

டி. எஸ். ஆர்

**கோகுல் கூந்தல் தைலம்,**

**சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம்**

**இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!**

மதருஸ் ஸிடி ஏஜண்டு: **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

# T. S. R. & CO. PERFUMERS KUMBAKONAM

Cauveri Colour Press, Kumbakonam.